Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

AXSHAYA CONSTRUCTION JAFFNA
கட்டடங்கள் கட்டுதல், வீடு கட்டுதல், பழைய வீடு களைத் திருத்துதல், குளியலறை கட்டுதல்
Plumbing, Electrical, Painting
அனைத்தும் தரமாகவும் குறைந்த விலையிலும் குறித்த காலத்திலும் செய்து கொடுக்கப்படும்.
தொடர்புக்கு: 0776679564
(C/3690)

முரசு – 04 திருவள்ளுவர் ஆண்டு 2045 வைகாசி 28 புதன்கிழமை (11.06.2014) பக்கங்கள் 20 ஓசை – 253

## மகனின் மர்ம உறுப்பை வெட்டிச்சிதைத்தார் தந்தை

### புன்னாலைக்கட்டுவனில் பரபரப்பு

ஈவினை கிழக்குபுன்னாலைக்கட்டுவன் பகுதியில் தனது மகனின் மர்ம உறுப்பினை உடைந்த போத்தலினால் வெட்டிய தந்தையை நேற்று முன்தினம் மாலை கைது செய்ததாக சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் பாதிக்கப்பட்ட 21 வயதான மகன் யாழ்., போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், அவருடைய தந்தை கைது செய்யப்பட்டுள்ளார்.

தந்தை வேறொரு பெண்ணுடன் தொடர்பு வைத்திருப்பதினை அறிந்த மகன் அதனைத் தட்டிக்கேட்டதை அடுத்து, ஆத்திர மடைந்த தந்தை பியர் போத்தலினை உடைத்து மகனின் மர்ம உறுப்பின்ன வெட்டியுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர். (25)

## நிர்வாண கோலத்தில் மாணவியை துரத்திய இளைஞர்கள் கைது

(யாழ்ப்பாணம்)

மாலை நேர வகுப்பிற்குச் சென்றுவிட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்த உயர்தரத்தில் கல்வி பயிலும் மாணவியை, நிர்வாண கோலத்தில் துரத்திச் சென்ற இரண்டு இளைஞர்கள் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கரைநகர் வேரப்பிட்டி கள்வந்தாழ்வு பகுதியில் நேற்று முன்தினம் மாலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதில் அதே இடத்தைச் சேர்ந்த 18,19 வயது மதிக்கத்தக்க இரண்டு இளைஞர்களே நேற்றையதினம் ஊர்காவற்றுறை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர். இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

காரைநகர் பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் உயர்தரத்தில் கல்வி பயிலும் குறித்த மாணவி மாலை வகுப்பிற்கு சென்று வீடு திரும்பும் வழியில், சனநடமாட்டமற்ற அந்த வீதியால் வந்த இரு இளைஞர்கள் திடீரென தமது ஆடைகளை களைந்து விட்டு, குறித்த யுவதியை கலைத்துச் சென்றுள்ளனர்.


குறித்த மாணவி அலறி அடித்துக் கொண்டு வீட்டிற்குச் சென்று பெற்றோரிடம் தெரிவித்துள்ளார். உடனடியாக பெற்றோர் ஊர்காவற்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

அந்த முறைப்பாட்டின் பிரகாரம் அதே இடத்தினைச் சேர்ந்த இரு இளைஞர்களை ஊர்காவற்துறை பொலிஸார் கைதுசெய்துள்ளதுடன், பொலிஸ் விசாரணையின் பின்னர் நீதிமன்றில் ஆஜர்படுத்தவுள்ளதாகவும் தெரிவித்தனர். (25)

# ஐ.நா. விசாரணைக்கு

## ஒத்துழைக்கவேண்டும்

### அமெரிக்கா, பிரிட்டன் கோரிக்கை



இலங்கையில் இறுதிக்கட்டப்போரில் இடம்பெற்றதாகக் கூறப் படும் மனித உரிமை மீறல் குறித்த ஐ.நா. விசாரணைகளுக்கு இலங்கை அரசாங்கம் ஆதரவு வழங்கப் வேண்டுமென அமெரிக்காவும் பிரித்தானியாவும் கோரிக்கை விடுத்துள்ளன.

ஜெனிவாவில் நேற்று ஆரம்பமான ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 26ஆவது அமர்வில் உரையாற்றிய அமெரிக்க மற்றும் பிரித்தானியத் தூதுவர்கள் இந்த வேண்டுகோளை விடுத்தனர்.

(19) ஆம் பக்கம் பார்க்க

## ஒத்துழைக்கமாட்டோம்

### அடம்பிடிக்கிறது அரசு



இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்காக, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையினால் நியமிக்கப்பட்டுள்ள நிபுணர் குழுவினரின் விரிவான விசாரணைகளுக்கு தாம் ஒத்துழைப்பு வழங்கப் போவதில்லையென இலங்கை அறிவித்துள்ளது.

இலங்கையில் விரிவான விசாரணைகள் மேற்கொள்ளப்படுமென, நேற்று ஜெனிவாவில் ஆரம்பமான மனித உரிமைகள் பேரவையின் 26 ஆவது அமர்வின் போது, மனித உரிமை ஆணையாளர்

(19) ஆம் பக்கம் பார்க்க


## அழுத்தத்திலிருந்து விடுபட அரசியல் தீர்வுத்திட்டம் அவசியம்

### இந்தியாவும் உதவும் என்கிறார் அமைச்சர் திஸ்ஸ

சகல இன மக்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அதிகாரப் பகிர்வில் அமைந்த அரசியல் தீர்வுத்திட்டம் ஒன்றுக்குச் சென்றால் மட்டுமே, சர்வதேச அழுத்தங்களிலிருந்து இலங்கையினால் விடுபட முடியும் என்று அமைச்சரும் முன்னாள் சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவின் தலைவருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார். அவ்வாறான அதிகாரப் பகிர்வில் அமைந்த பொருத்தமான அரசி

(19) ஆம் பக்கம் பார்க்க

## நாடாளுமன்றமே முடிவு செய்யும்




இலங்கை தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையம் அமைக்கும் எந்தவொரு விசாரணைக் குழுவையும் நாட்டுக்குள் அனுமதிப்பதா இல்லையா என்பது குறித்து நாடாளுமன்றமே முடிவு செய்யும் என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று தெரிவித்துள்ளார்.

பொலன்னறுவையில் பொதுக் கூட்டமொன்றில் உரையாற்

(19) ஆம் பக்கம் பார்க்க

## 101 கிராம சேவையாளர்கள் யாழ். மாவட்டத்தில் நியமனம்



(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திற்கு புதிதாக 101கிராம சேவையாளர்களுக்கான நிரந்தர நியமனங்கள் நேற்றையதினம் வழங்கப்பட்டன.

நேற்று மதியம் 2.30 மணியளவில் யாழ். செயலகத்தில் மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினிவரதலிங்கம் தலைமையில் நடந்த நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இந்த நியமனக் கடிதங்களை வழங்கி வைத்தார்.

யாழ்.மாவட்டத்தில் கிராம சேவையாளர்களுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா எடுத்த முயற்சியின் பயனாக புதிய கிராம சேவையாளர்களுக்கான நியமனங்கள் வழங்கப்படுவதாக யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் தனது தலைமையுரையில் தெரிவித்தார்.

(19) ஆம் பக்கம் பார்க்க

## மாற்றமடையாமல் உள்ளன இலங்கையில் யுத்தவடுக்கள்

### நவிப்பிள்ளை தெரிவிப்பு



ஜெனிவாவில் நேற்று ஆரம்பமான ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 26 ஆவது அமர்வின் ஆரம்ப உரையிலேயே நவிப்

(19) ஆம் பக்கம் பார்க்க

இலங்கையில் யுத்தம் முடிந்து ஐந்து வருடங்கள் கழிந்துவிட்ட போதும் யுத்த வடுக்கள் இன்னும் மாறாமல் இருப்பதாக ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் நவிப்பிள்ளை கூறியுள்ளார்.

## ஜெயலலிதாவின் கொடும்பாவி கொழும்பில் தீயிட்டு எரிப்பு

இலங்கையின் உள்நாட்டு விவகாரத்தில் இந்தியா தலையிட முனைவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்துக்கு முன்பாக நேற்று போராட்டம் ஒன்று நடத்தப் பட்டுள்ளது.

இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், தமிழ்நாடு முதல்வர் ஜெயலலிதாவின் உருவப்பொம்மையை இழுத்து வந்து இந்தியத் தூதரகத்துக்கு முன்பாக

(19) ஆம் பக்கம் பார்க்க

உள்ளே
க.பொ.த(உ/த) மாணவர்களுக்கான அலகு ரீதியான பயிற்சிவினாத்தாள்கள் உயிரியல்

குருப்பெயர்ச்சி உங்களுக்கு எப்படி?

# சர்வதேச தரத்தில் திக்கம் வடிசாலை இதுவே எமது நீண்டகால இலக்கு

திக்கம் வடிசாலையை சர்வ தேசதரத்திற்கு உயர்த்த வேண்டு மென்பதே தனது குறிக்கோள் என பாரம்பரிய கைத்தொழில் கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவதானந்த தெரிவித் தார்.

திக்கம் வடிசாலையை புன ரமைப்பது தொடர்பில் துறை சார்ந்த அதிகாரிகள் மற்றும், யாழ்.மாவட்ட மேலதிக அரசா ங்க அதிபர் ரூபினி வரதலி ங்கம், பிரதேச செயலர்களுடன் நேற்று யாழ்.மாவட்டச் செயல கத்தில் நடைபெற்ற கலந்துரை யாடலில் இவ்வாறு தெரிவித் தார்.



திக்கம் வடிசாலையை சர்வ தேசதரம்மிக்க உற்பத்திச் சாலை யாக மாற்றி அதன் வருவாயை அதிகரித்து அதன் மூலம் அது சார்ந்த சமூகத்தின் வாழ்வா தாரத்தை முன்னேற்றும் நோக் கத்துடன் முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டு வரும் நிலையில சில விஷமிகள் பொய்யான புரளிகளைக் கிளப்பிவருவ தாகத் தெரிவித்த அமைச்சர்,

இத்துறைசார்ந்த சமூகத்தின் அதீத அக்கறை காரணமாக இத்துறையை வளர்த்தெடுக்க முழு முயற்சிகளையும் தான் மேற்கொண்டு வருவதையும் உணர்த்தினார்.

தனது அமைச்சின் கீழுள்ள பனை அபிவிருத்திச் சபைக் குரிய திக்கம் வடிசாலையின் உற்பத்திகள் ஏனைய உள் நாட்டு மற்றும் வெளிநாட்டு உற்பத்திகளுடன் போட்டியிட இயலாத தரத்திலேயே உற்பத்தி செய்யப்படுவதனால் அவற்றின் சந்தைவாய்ப்பு குறுகியதாக உள்ளதுடன் விலையும் மிகவும் குறைவாக உள்ளது.

எனவே, இவ்வுற்பத்தியின் தரத்தை சர்வதேச தரத்திற்கு அமைவாக உயர்த்தும் நோக்கிலேயே வடிசாலை நவீனமயப்படுத்தப் படுகிறது என்றார்.

திக்கம் வடிசாலை பற்றி தங்களது சுய விளம்பரங்களுக் காக நீலிக் கண்ணீர் வடிப் போர் இச்செல வீனங்களை ஏற்கத் தயாராக இல்லை.

கடந்த மாவட்ட ஒருங்கி ணைப்புக் குழுக் கூட்டத்தில் இந்த செலவீனங்களை ஏற்கத் தயாரா? என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரிடம் நேரிலேயே கேட்டபோது அவர்கள் மௌ னம் சாதித்து விட்டார்கள்.

இப்படியானவர்கள்தான் தங் களது சுயவிளம்பரங்களுக்காக பொய்யானதும் தவறானதுமான கருத்துக்களைக் கூறிவருகின்ற னர். தங்களது சுயலாப அரசி யல் காரணங்களுக்காக எதை யும் கதைக்கலாம் என இவர்கள் எண்ணுகின்றனர்.

தென்பகுதியில் இருந்து போத்தல்கள் இப்பகுதிக்குக் கொண்டுவரப் படுவதாக நாடா ளுமன்றத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் ஒருவர் தவறான விடயமொன் றைக் கூறியிருக்கிறார்.

அதுவும், பாராளுமன்றத்தில் நானில்லாத சமயம் பார்த்து இவர் கதைத்திருக்கிறார். இதற் கான பதிலை நான் நாடாளு மன்றத்தில் கூற இருக்கிறேன்.

இத்துறைசார்ந்த எமது மக் களின் நலன்கருதி தென்பகுதி யிலிருந்து இப்பகுதிக்கு போத் தல்கள் கொண்டு வரப்படுவது இப் போத்தல்ல, மூன்று வரு டங்களுக்கு முன்பிருந்தே நிறுத் தப்பட்டுள்ளது என்பதை இவர் அறியாதிருப்பது துரதிஷ்ட மாகும் எனவும் அமைச்சர் இங்கு மேலும் தெரிவித்தமை குறிப்பி டத்தக்கதாகும். (25)


## கூறுவிலை கோரல்
## பனை அபிவிருத்திச் சபை

பனை அபிவிருத்திச் சபையின் தலைமையலுவலகத்திற்கும், கே.கே.எஸ். வீதி கற்பகத்திற்கும் கீழ்வரும் வெப்பக் கட்டுப் பாட்டுக் கருவிகளைப் (Air Condition Machine) பொருத்து வதற்கு கூறுவிலை கோரப்பட்டுகின்றது.

1. 12,000 BTU 02 Nos
2. 18,000 BTU 01 No
3. 24,000 BTU 02 Nos

மேற்குறிப்பிட்ட விபரங்களுக்கு அமைவாக கருவிகளின் தன்மைகளையும், (Features) நிபந்தனைகளையும் குறிப்பிட்டு கூறுவிலைகளை 23.06.2014 ஆம் திகதிக்கு முன்னர் கீழ்வரும் முகவரிக்கு பதிவுத்தபாலிலோ அல்லது நேரடியாகவோ அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தலைவர்.
பனை அபிவிருத்திச் சபை,
தேசிய வீடமைப்புச் செயலகம்,
1 ஆம் மாடி கண்டி வீதி,
யாழ்ப்பாணம். (C/3404)



## ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 1064 | திகதி 09.06.2014

வெற்றி எண்கள்: 09 10 32 57 | ஆங்கில எழுத்து: P

ஜக்பொட் பரிசு ரூ. 3,06,99,160/= வெல்லப்படவில்லை

| பரிசு அமைப்பு | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 0 | 3,06,99,160/= | ரூ. - |
| 4 இலக்கங்கள பொருந்தினால் | 1 | 10,00,000/= | ரூ. 10,00,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 15 | 50,000/= | ரூ. 7,50,000/= |
| 3 இலக்கங்கள பொருந்தினால் | 254 | 1,000/= | ரூ. 2,54,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 429 | 1,000/= | ரூ. 4,29,000/= |
| 2 இலக்கங்கள பொருந்தினால் | 11473 | 60/= | ரூ. 6,88,380/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 5812 | 40/= | ரூ. 2,32,480/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 150827 | 20/= | ரூ. 30,16,540/= |
| ஆங்கில எழுத்து | 21896 | 20/= | ரூ. 4,37,920/= |
| | | மொத்தம் ரூ. | 68,08,320/= |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 8 | 50,000/= | 400,000/= |

ரூபா 50,000 விதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| பதுளை | 606362423-7-27 |
| பொலன்னறுவை | 606366665-5-45 |
| கம்பஹா | 606368487-4-24 |
| வவுனியா | 606375400-3-03 |
| நுவரெலியா | 606361984-7-37 |
| காலி | 606372563-5-05 |
| மொனராகலை | 606360086-6-16 |
| குருநாகல் | 606361630-6-06 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 72,08,320/=

எதிர்வரும் வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா. 30,993,620/=

செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2014.06.12 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
356, சுவாந்தி கோல்வின் ஆர். டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 2 335467
(C/3706)


## விபத்து

பருத்தித்துறை வீதி நீர்வேலி சந்தியில் நேற்று முன்தினம் மாலை 2 மணிக்கு எல்ப்ரக வாகனமும், மோட்டார் சைக்கிளும் விபத்துக்குள்ளாகி மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் காயங்களுக்குள்ளாகியதுடன், அவர் பயணித்த மோட்டார் சைக்கிளும் சேதமடைந்துள்ளது. (85)

## சீரமைக்கக் கோரிக்கை

மன்னார் தாராபுரம் மேற்கு பகுதியில் உள்ளக வீதி புனரக் கப்பட்டிருக்கிறது. எனினும் அங்கு காணப்பட்ட மின்கம்பங் கள் எதுவும் இதுவரை நடப்பட்டு சீரமைக்கப்படவில்லை. எனவே இதனை சீரமைக்கும்படி இப் பகுதி ஜிம்மா பள்ளிவாசல் நிர் வாகத்தினர் மின்சாரசபையிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.


## சிறு விளம்பரங்கள்

### டயானா பிளாஸ்ரிக்
*றீசைக்கிள் (மீள் சுழற்சி)*

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித்தீன், என்பன விலைக்கு வாங்கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.06 கனகசபை லேன்,
சிவலிங்கப்புளியடி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
021 222 8680,
077 592 5088.

★ ★ ★ ★ ★

விமான நிலையம் (தனியார்) பகுதிக்கு சுத்திகரிப்பாளர் பாதுகாப்பாளர், பெக்கிங் 18 - 55 வரையான ஆண், பெண் தேவை. சம்பளம் 18,000 ரூபா தொடக்கம் 35,000 வரை. தங்குமிடம், உணவு, பயிற்சியும் வழங்கப்படும். வேலை தேடி அங்கும் இங்கும் அலையாமல் இன்றே அழையுங்கள். உங்களுக்கு தேவையான தினமே தொழில். 077 596 42299 (C/3705)

★ ★ ★ ★ ★

நிரந்தரமான தொழில், நிரந்தரமான சம்பளத்துக்கு 24,000 ரூபா தொடக்கம் 38,000 ரூபா வரை. வருகைதரும் தினமே சேர்த்துக் கொள்ளப்படுவார். (உற்பத்தி, பொதியிடல், மேற்பார்வையாளர்) சாப்பாடு, தங்குமிட வசதி உண்டு. 18 - 55 வரையான ஆண், பெண்களும் குழுக்களாகவும் இணைந்து கொள்ளலாம். 077 085 4068



## நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோயில்
## அறிவித்தல்



### தற்காலிக கடைகள், திருவிழாக்கால உடை தேங்காய் ஏலம்

மேற்படி ஆலய வருடாந்த உயர் திருவிழா 28.06.2014 ஆம் திகதியன்று ஆரம்பமாகி 13.07.2014 ஆம் திகதி நிறைவுபெறும். இக்காலத்தில் தற்காலிகமாக வியாபாரம் செய்வதற்கு நிர்வாகத்தினரால் சுட்டிக்காட்டப்படும் இடங்கள் 21.06.2014 சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விடப்படும்.

உயர் திருவிழாக்காலத்தில் சேரும் உடைதேங்காய்களுக்கான பகிரங்க ஏலமும் அன்றைய தினத்திலேயே கூறப்படும் என்பதனையும் அறியத்தருகின்றோம். பங்குபற்ற விரும்புவோர் குறிப்பிட்ட நேரத்தில் தவறாது வருகைதந்து நடைபெறும் பகிரங்க ஏலத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

குறிப்பு-

01. வியாபாரம் செய்பவர்கள் பிரதேச சபை பொதுச்சுகாதாரப் பிரிவினரின் முறையான அனுமதி பெறப்படவேண்டும்.

02. குளிர்பான நிலையம் நடத்துபவர்கள் முறையான அனுமதிப் பத்திரம் பெறப்படல் வேண்டும்.

03. சுகாதாரம் சம்பந்தமான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவேண்டும்.

04. ஏலத்தில் வெற்றி பெறுபவர்கள் அன்றைய தினம் ஏலத் தொகையில் 1/3 பங்குத்தொகையை செலுத்தி பற்றுச்சீட்டினைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

05. மிகுதித்தொகையினை பத்தாம் (10) ஆம் திருவிழாக்கு இடையில் செலுத்தி பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

அன்னையின் சேவையில்
அறங்காவலர் சபையினர்,
நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோயில் நயினாதீவு.
(C/3424)



## JUNE SPLENDOUR

190 ஆம் ஆண்டு நிறைவு விழாவையொட்டி உடுவில் மகளிர் கல்லூரி நடாத்தும்

## கல்விக் கண்காட்சி

ஜூன் 18, 19, 20 ஆம் திகதிகள். காலை 9.00 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை.

உடுவில் மகளிர் கல்லூரி சமூகம்.

ஊடக அனுசரணை தினமுரசு

# நீராவியில் தேரேறும் நின்மலனே சரணம்!

- சைவப்புலவர்
இராசையா ஸ்ரீதரன் -



தேரேறி வருகின்ற நீராவியடிப் பிள்ளையாரே!
தேவாதிதேவனே! சிவன் மகனே! மூத்த விநாயகனே!
போரோய்ந்து நிம்மதியே தாராயோ வெற்றிக்கணபதியே
வேரோடு வினை கழரும் தேர்த்திருவிழா தனிலே
நீரேறிக் களிப்புடனே நிலவொளிபோல் ஒளி வீசி
தேர்மீது காட்சிதரும் கார் முகத்துக்கணபதியே!
பாரோடு விண்ணாய்ப் பரந்தே பக்தர்களுக்கருள் புரிய
நீராவியில் தேரேறும் நின்மலனே சரணம்! சரணம்!!

ஸ்ரீ ஜெயநீராவியடி வீரகத்தி விநாயகர் ஆலய ஒன்பதாம் திருவிழா இன்றாகும்.

# கிளிநொச்சியில் மீள்குடியேறிய மக்களின் வாழ்க்கைத்தரம் தொடர்பான ஆய்வு

(யாழ்ப்பாணம்)

ஐக்கிய நாடுகள் சபையின் ஓச்சா நிறுவனம், ஜனாதிபதி செயலணி ஆகியவற்றின் நிதி ஆதரவுடன் கிளிநொச்சி மாவட்டத்தில் போருக்கு பின் மீள்குடியேறிய மக்களின் வாழ்க்கைத்தரம் தொடர்பான ஆய்வு கடந்த 02 ஆம் திகதி முதல் ஆரம்பமாகி நாளை வரை நடைபெறவுள்ளது.

குடித்தொகை மதிப்பு புள்ளிவிபர திணைக்கள உத்தியோகத்தர்கள் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். கிளிநொச்சி மாவட்டத்தில் 95 கிராம அலுவலர் பிரிவுகளில் 31 பிரிவுகளில் மட்டும் இந்த மாதிரி ஆய்வு நடைபெற்று வருகின்றன.

கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் 17 ,கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் 06,பூநகரி பிரதேச செயலர் பிரிவில் 05, பச்சிலைப்பள்ளி கிராம அலுவலர் பிரிவில் 03 கிராம அலுவலர் பிரிவுகளாக மொத்தம் 31 கிராம அலுவலர் பிரிவுகளில் இந்த ஆய்வு நடைபெற்று நிறைவு கட்டத்தை அடைந்துள்ளது.

இது போல வடக்கு கிழக்கின் ஏனைய 7 மாவட்டங்களிலும் இந்த ஆய்வு நடைபெற்று வருவதாக தெரிவிக்கப்படுகிறது. போரின் பின் மீளக்குடியேறிய மக்கள் எவ்விதமான வாழ்க்கை தரத்தை கொண்டுள்ளனர் என இந்த ஆய்வின் மூலம் கண்டறிவதே இதன் நோக்கம் என புள்ளிவிபரத் திணைக்கள அலுவலர்கள் தெரிவித்தனர். (90)



கைதடி மேற்கு சரஸ்வதி மாதர் சங்கத்தின் ஏற்பாட்டில் சிறுவர் கழகம் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டது. இதில் சிறுவர்கள் விளையாட்டு செயற்பாடுகளில் ஈடுபடுவதைக் காணலாம்.... (51)

# வலி.வடக்கில் 30 ஆயிரம் மக்கள் இன்னும் மீள் குடியமர்த்தப்படவுள்ளனர்

இன்னமும் வலி.வடக்கு பிரதேசத்தில் 30 ஆயிரம் பேர் மீள்குடியமர்த்தப்பட வேண்டியுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் யாழ்.ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

மீள்குடியேற்றம் செய்யப்படவேண்டியவர்களில் தையிட்டில் மூவாயிரம் பேரும், மயிலிட்டியில், ஐய்யாயிரம் பேரும் உள்ளடங்குவதாகவும் இந்தப் பகுதி மக்கள் தங்களது காணிகளிலேயே தம்மை மீள்குடியேற்றுமாறும் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தப் பகுதி மக்களை மீள்குடியேற்றம் செய்வது தொடர்பாக தானும் மாவை சேனாதிராசாவும் நீதிமன்றத்தில் வழக்குப்பதிவு செய்து வழக்கு நடைபெற்று வருவதாகவும் தெரிவித்தார்.

அரசியலைப் பொறுத்த வரையில் இலங்கை அரசும், இந்திய மோடி அரசும் எமது மக்களுக்கு நன்மை செய்யும் என்று நாம் நம்பிக் கொண்டிருக்க முடியாது. அதுமட்டுமன்றி வலி.வடக்கில் 30 ஆயிரம் பேரை அரசு மீள்குடியமர்த்தாது இழுத்தடித்து வருவது அடிப்படை மனித உரிமை மீறல்விடயம் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார். (பா)

# அலங்கார உற்சவம்

(அச்சுவேலி)

அச்சுவேலி, தமேனி, பாரதிவீதி அருள்மிகு சங்கிலி வைரவப் பெருமான் ஆலய அலங்கார உற்சவம் இன்று இடம் பெறவுள்ளதுடன் நாளை தீர்த்தோற்சவமும் இடம் பெறவுள்ளது.

11 ஆம் திருவிழாவன்று காலை சங்காபிஷேகம், இரவு வீதியுலா, திருவூஞ்சல், குருக்கள் கௌரவிப்பு, குரு வணக்கம் ஆகியனவும் இடம்பெறவுள்ளன என ஆலய பரிபால சபையினர் அறிவித்துள்ளனர். (85)

# பிசாசுக்குப் பாண் போட்டு அடங்காது...




இப்ப இலங்கையில கடுமையான குழப்பத்தில இருக்கிற ஆள் எண்டால், இலங்கைக் கடற்படைத் தளபதியாகத்தானிருக்கும்.

ஏனெண்டால், இலங்கைக் கடற்பரப்பிற்குள் அத்துமீறி வந்து மீன்பிடிக்கும் தமிழக மீனவர்களை கடற்படையினர் கைது செய்து கொண்டு வர ஜனாதிபதி அவையை உடன விடுகிறார்.

முந்தியெண்டால், இப்பிடிக் கொண்டு வாற ஆட்களை தடுத்து வைச்சு, விசாரிச்சு, அனுராதபுரம் சிறைக்கோ, மன்னார்க் கோட்டுக்கோ கொண்டு போய்...

இப்பிடியொரு பெரிய வேலையே நடக்கும்.

பிறகு வாரக்கணக்கிலோ, மாதக்கணக்கிலோ அவை சிறையில இருப்பினம்.

தமிழக அரசு இந்த ஆட்களையெல்லாம் மீட்கிறதுக்காகப் பெரும்போராட்டத்தையே செய்யும்.

தமிழகத்தில இருக்கிற அரசியல் கட்சிகளும் மீனவர் அமைப்புகளும் கூட ஆர்ப்பாட்டம், கர்த்தால் எண்டு ஏதோ எல்லாம் செய்வினம்.

ஆனால், இலங்கை அரசாங்கம் தான் நினைச்ச மாதிரித்தான் இந்த மீனவர்களை விடும்.

இப்ப என்னடாவெண்டால், கடலில இருந்து பிடிச்சுக்கொண்டு வந்த உடனேயே 'அவையை விடுங்கோ' எண்டு ஜனாதிபதியே சொல்லிறார்.

இது ஏனெண்டு கேட்டால், 'இந்தியாவில வந்திருக்கிற புதிய அரசாங்கத்துக்கு நல்லெண்ணச் சமிக்ஞையைக் காட்ட' வேணுமாம்.

அதுக்கு இலங்கைக் கடற்கரை வரையில வந்து அட்டகாசம் செய்யிற மீனவர்களை ஒண்டும் செய்யாமல் விடுகிறதெண்டால்...?

இப்பிடியே நாளைக்கு தமிழ்நாட்டில இருந்து ஆரெல்லாமோ வந்தாலும் வருவினம். அவையளவையும் இப்படிக் கண்டும் காணாமலும் விடுகிறதா? இல்லாட்டிக்கு, கைது செய்து கொண்டு போய்ப் பிறகு சாப்பாடும் தண்ணியும் குடுத்து, போற வழிக்கு பஸ்காசும் குடுத்து விடுகிறதா?

நல்லாயிருக்கு இந்த நல்லெண்ண வெளிப்பாடுகள்.

மோடி பிரதமராக வந்தாப்பிறகு, தன்ரை பதவியேற்புக்கு மகிந்தரையும் கூப்பிட்டவரெல்லோ.

அதுக்கு டெல்லிக்குப் போக முதல், மோடியைக் குளிர்விக்கிற மாதிரி 22 மீனவர்களை விட்டார் மகிந்தர். இப்ப 82 மீனவர்கள் விடுவிக்கப்பட்டிருக்கினம். அப்பிடியெண்டால், இனிக் கடலில அத்துமீறுகிற அத்தனை இந்திய மீனவர்களும் உடனுக்குடன், சுடச்சுட விடப்படுவினமாக்கும். அப்பிடிச் சுடச் சுட மீனவர்களை விட்டு நல்லெண்ணப் பயிர் வளர்க்கிற திட்டம் நல்லாத்தானிருக்கு.

அதைவிட இனிமேல் அத்துமீறுகிற மீனவர்களின் பக்கம் போகாமலே நல்லெண்ணப் பயிரை வளர்க்கலாமல்லோ... அது அந்த மாதிரி இருக்குமே!

அப்பிடியே கச்சதீவையும் மோடி அண்ணைக்கு எழுதிக்குடுத்தால் இன்னும் அந்த மாதிரி நல்லெண்ணப்பயிர் சோக்கா வளரும்.

அந்த மாதிரித்தான் மோடிக்கு ஐஸ் வைப்பு நடக்குது.

சோக்கத்தானிருக்கு இந்தக் கதை.

ஐயா மகேந்திரா நானென்ன சொல்லுவேன்... இப்பிடிச் சொந்த நாட்டு மீனவர்களுக்கே அநியாயம் செய்து கொண்டு இந்திய மீனவர்களின் அத்துமீறல்களைக் கண்டும் காணாமல் விடுகிறது நல்லதேயல்ல.

இப்பிடித்தான் எங்கட மீனவர்களின் பிரச்சினையிலையும் கவலைகளிலயும் தமிழ்க் கூட்டமைப்பு ஆட்களும் விளையாடுகினம்.

உண்மையாக மோடிக்கு நல்லெண்ணத்தைக் காட்டிறதாக இருந்தால், இப்பிட அத்துமீறுகிற மீனவர்களைத் தண்டிக்காமல் – கண்டுக்காமல் விடுகிறதில்லை. மாறாக, இங்கே தமிழர்களுக்குக் குடுக்க வேண்டிய அதிகாரத்தைக் குடுகிறது. தமிழர்களுக்குச் செய்ய வேண்டிய நல்ல காரியங்களைச் செய்யிறது. சிறுபான்மை மக்களை அன்போட அர வணைச்சு, அனுசரிச்சு நடக்கிறது எண்டு ஏதாவது உருப்படியான காரியங்களைச் செய்திருக்கலாம்.

அப்பிடி எதையாவது செய்திருந்தால் மோடிக்கும் பயப்பிடத் தேவையில்லை. தமிழ்நாட்டில, ஐ.நாவில இருக்கிற லேடிகளுக்கும் பயப்பிடத் தேவையில்லை.

இந்த மாதிரி மோடிக்கும் டில்லிக்கும் ஐஸ்போடுற வேலையையும் பாக்க வேண்டியதில்லை.

ஏனெண்டால், பிசாசுக்குப் பாண் போட்டு அடங்காது.

தன்மதிப்பு, தன்னறிவு, தன்னடக்கம் இவை மூன்றும் வாழ்வின் மிக உயர்ந்த எல்லைவரை நம்மை அழைத்துச் செல்லும்.
- அல்பிரட் டென்னிசன்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி ; 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## பகை மறத்தலும் வாழ்தலும்!

ஈழத்தமிழர்களாகிய நாங்கள் பல்வேறு பாதிப்புகளுக்கு உள்ளாகியிருக்கிறோம். அவமானங்களுக்குள்ளாகி இருக்கிறோம். நிறைய இழந்திருக்கிறோம். தாங்க முடியாத வலிகளையும் துன்பங்களையும் பெற்றிருக்கிறோம். உண்மை.

இதனாலெல்லாம் கோபமும் வெறுப்பும் பகையுணர்ச்சியும் பழிவாங்கும் ஆவேசமும் கொண்டிருக்கிறோம். எதையும் மறக்கவோ மன்னிக்கவோ முடியாது – கூடாது எனக் கொதித்துப் போயிருக்கிறோம். இது ஒரு யதார்த்தம்.

முப்பது வருட தீவிரமான அழிவுகள் அவலங்களுக்குப் பிறகும் நமக்கான அரசியற் தீர்வைப் பெற்றுக்கொள்ள முடியாதவர்களாக இருக்கிறோம். இந்த நாட்டிலுள்ள மற்றைய சமூகங்களுக்குச் சமதையாக நாம் வளர்ந்தபாடில்லை. நமது நினைப்பிலிருக்கும் நமது பீடுக்கும் பெற்றிக்கும், நடைமுறையில் நமது வாழ்நிலைக்கும் ஆன இடைவெளி மிக மிக விலகிச் சென்றுகொண்டேயிருக்கிறது. இதுவும் யதார்த்தம்.

ஏன் இப்படியிருக்கிறது நாம் ஏன் இப்படியிருக்கிறோம் என்று சுயவிசாரணை செய்துகொள்ள இப்போதும் சோம்பல்படுகிறோம் என்றே தோன்றுகிறது. உணர்ச்சிவசப்படாமல், ஆவேசங்கொள்ளாமல் சிலவற்றை மீள் அலசிப் பார்ப்போமென்றால் சில பல தெளிவுகள் கிடைக்கக் கூடும்.

எந்த நாட்டினதாக இருந்தாலும் எந்த மொழியைப் பேசினாலும் இராணுவம் என்பது பொதுவாக எப்படி நடந்து கொள்ளும் என்பதற்கு உலக வரலாற்றினூடான அறிவு நமக்கிருக்கிறது. அவர்களை நம் வாசலுக்கு வரவழைத்து விட்டால், என்னவெல்லாவற்றையும் அனுபவிக்க வேண்டியிருக்கும் என்பதும் நமக்குத் தெரியும்.

ஆனாலும் அதன்பிறகு நாம் மிகையாக உணர்ச்சிவசப்படுவதனையும் தவிர்க்க முடிவதில்லை. ஒரு வன்முறையில் நமக்குக் கோபம் உண்டாகி விட்டால், அதைப் பழிவாங்க உலகெங்குமிருந்து பெரிய பெரிய வன்முறைகளுக்கு வரவேற்பளிக்கும் அளவிற்கு ஆவேசம் நம் கண்ணை மறைத்து விடுகிறது. கோபத்திலும் பழியுணர்சியிலும் ஒரே தவறைத் திரும்பத் திரும்பச் செய்யாமலும் இருப்பதில்லை. இந்திய அமைதிப் படைக் காலம் ஓர் உதாரணம்.

அவர்கள் வருகையை நாம் விரும்பியிருந்ததும் உண்மையே. பின்னர் அவர்களை வெளியேற்றுவதற்கு நாம் தாக்குதல்கள், பிரச்சாரங்களைப் பெருமளவில் செய்ய வேண்டியிருந்ததும் உண்மையே.

பிறகும், இந்தியப் படையால் நமக்கு நடந்தவற்றை நம்மால் மன்னிக்க முடியாமல் போனதால் அது இந்தியா மீதான வெறுப்பாகவும் தொடர்ந்தது. நம் தமிழ்த் தேசியத்துக்கு ஆதரவாகத் தீவிர நிலை எடுத்துக்கொண்ட தமிழ்நாட்டுத் தேசியர்கள் இந்தியாவை மன்னிக்கவே முடியாத எதிரியாக்கி மேலும் வெறுப்பு நிலையை வளர்த்தனர்.

இந்தியப்படை காலத்தில் நடந்ததை மறக்கவோ இந்தியாவை மன்னிக்கவோ முடியாமல் தொடர்ந்து வளர்க்கப்பட்ட வெறுப்புநிலையின் விளைவே, 2009 பேரழிவின் கடைசிக் கணங்களில் இந்தியா தலையிட வேண்டும் என்ற கோரிக்கையை இந்திய மக்களோ ஊடகங்களோ வலியுறுத்தாமல் விட்ட காரணம். வரலாற்றின் கசப்பான பழிவாங்கலாகவே அது முடிந்தது.

மன்னிக்கக் கற்றுக் கொள்ளாமல், நாம் நமது துன்பங்களையும் இழிநிலையையும் கடக்க முடியாது என்ற யதார்த்தத்தை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். மனிதர்களில் நம்பிக்கை வைப்பதும் கரங்களை முன் நீட்டியபடி நெருங்குவதுமே பிரச்சினைகள் தீரும் வழி.

மன்னிக்கும் தார்மீகமும் மனிதாயமும் நமக்குப் புரியவில்லை என்றால்... நமக்கான வாழ்க்கையையும் அமைத்துக் கொள்ளப் போவதில்லை.
- ஆசிரியர்.

# தெரிவுக்குழுவுக்கு செல்வதானது பிரச்சினைகளை உருவாக்குவதாக அமையும்

**– கூறுகின்றார் வடக்கு முதலமைச்சர் –**

நாடாளுமன்ற தெரிவுக் குழுவுக்கு செல்வதானது எமக்கு நாமே பிரச்சினையை உருவாக்குவதாக அமையும் என வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வவுனியா செட்டிகுளம் பிரதேச சபையில் அட்டவணைப் படுத்தப்படாத ஆளணியினருக்கான நிரந்தர நியமனம் வழங்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. இந்நிகழ்வில், கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அவர்,

எமது கட்சியின் கருத்தாக இல்லாமல் எனது கருத்தாக தெரிவுக்குழு விடயத்தில் சிலவற்றை சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன்.

தெரிவுக்குழுவிற்குச் சென்றால் பிரச்சினையை உருவாக்கி கொள்வதாக அமையும் என்பதில் சந்தேகமே இல்லை. ஆனால இதுவரை காலமும் பலவிதமான குழுக்கள் தமிழர்களுடைய பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்ந்து அறிக்கைகள் வெளியிட்டுள்ளன.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் காலத்தில் ஒரு தீர்வு யோசனை முன்வைக்கப்பட்டது.

அதனை முன்வையுங்கள். திஸ்ஸவிதாரன குழு ஒரு அறிக்கையை தந்துள்ளது. அதனையும் முன்வையுங்கள்.

இன்னும் வேறுவேறு அறிக்கைகள் இந்தப் பிரச்சினைகள் தொடர்பாக தரப்பட்டுள்ளன. அவற்றையெல்லாம் முன்வைத்து அதனை மையமாகக் கொண்டு, அதனை அடிப்படையாகக் கொண்டு நாடாளுமன்றத் தெரிவுக்குழு விவாதிப்பதாக இருந்தால் எமது தமிழ் மக்கள் அதற்கு எதிர்ப்பு தெரிவிக்க மாட்டார்கள்.

ஏனென்றால் அடிப்படையை நிர்ணயித்து அதனை செயற்படுத்தாது விட்டோமானால் அங்கு நாம் செல்வதால் எந்தவிதமான பலனும் கிடைக்காமல் இருப்பதையும் நாம் இழந்து வரும் கட்டம் ஏற்படக்கூடும் என்றார்.

# முதியவர்களின் ஆக்கங்களை வெளிக்கொண்டுவர நடவடிக்கை

சமூக சேவைகள் அமைச்சின் முதியோர்களுக்கான தேசிய செயலகம் முதியோர்களின் ஆக்கத்திறனை வெளிக்கொணர நடவடிக்கை எடுத்துள்ளதாக செயலகத்தின் பணிப்பாளர் எஸ்.சிங்கப்புலி தெரிவித்தார்.

ஒக்ரோபர் முதலாம் திகதியன்று சர்வதேச முதியோர் தினத்தில் நாடு முழுவதுமுள்ள முதியோர்களின் கலை வடிவங்கள் தாங்கிய ஆக்கங்களை வெளியிட உள்ளதாகவும் தெரிவித்தார். இதற்கென மாவட்ட,மாகாண ரீதியில் வெற்றி ஆக்கங்களை அனுப்பி வைக்குமாறு மாவட்டச் செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள், மாகாண சமூக சேவைகள் திணைக்கள பணிப்பாளர்களை தாம் கோரியுள்ளதாகவும் அத்துடன் வெற்றியாளர்களின் புகைப்படங்களையும் அனுப்பிவைக்குமாறு தெரிவித்துள்ளார். (90)

# பொலிஸாருக்கு இடையூறு விளைவிக்கும் அரசியல்வாதிகள் மீது சட்டம் பாயும்

**– பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவிப்பு –**

(கொழும்பு)

நாட்டில் சட்டத்தை அமுல் படுத்தும்போது பிரதேச அரசியலவாதிகள் பல்வேறு சந்தர்ப்பங்களில் பொலிஸாருக்கு இடைஞ்சல் விளைவிப்பதாகவும், ஆயினும் அவர்களுக்கு ஏற்றாற் போல பொலிஸார் நடந்து கொள்ளாது விடுவதனால் பொலிஸாருக்கு பல்வேறு வகையிலும் இடைஞ்சல் விளைவிப்பதாகவும், அதனால் அவ்வாறு செயற்படுகின்ற அனைத்து அரசியல்வாதிகளுக்கும் எதிராக சட்டத்தை நிலை நாட்டவுள்ளதாக பொலிஸ ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ அத்தியட்சகர் சட்டத்தரணி அஜித ரோஹண தெரிவித்துள்ளார். அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

தங்கள் உறவினர்களைப் பாதுகாப்பதாகக் கூறி சட்ட விரோத செயல்களைப் புரிகின்றவர்கள் விடயத்தில் நடவடிக்கை எடுக்கும்போது, சில அரசியல்வாதிகள் தகராறு மேற்கொள்கின்றனர்.

கடந்த ஐந்து நாட்களாக அவ்வாறு செயற்பட்ட பிரதேச சபைத் தலைவர்கள், உப தலைவர்களுக்கு எதிராக, சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும், பிரதியமைச்சர் ஹேமால் குணசேகர மற்றும் பொலிஸ் காவலர் ஒருவருக்கிடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கம் தொடர்பிலும் பொலிஸ் காவலரின் மோட்டார் வாகனத்திற்கு தீ மூட்டியது தொடர்பிலும் விரிவான விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் பிரதியமைச்சரின் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது பொலிஸ் காவலரிடமிருந்து வாக்குமூலம் இரண்டு பதிவாகியுள்ளது.

பொலிஸாருக்கு இடைஞ்சல் விளைவித்தது தொடர்பில் கருவலகஸ்வெவ பிரதேச சபையின் உப தலைவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ருவன்வெல்ல பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் பொலிஸாருக்கு இடைஞ்சல் விளைவித்தது தொடர்பில் முறைப்பாடு கிடைக்கப்பெற்றுள்ளதனால் அவரைக் கைது செய்வதற்கு ஆவன செய்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்..

# 10 இலட்சம் ரூபா பெறுமதியான நகைகள் பூநகரி ஆலங்கேணியில் கொள்ளை

பூநகரி ஆலங்கேணி கிராமசேவகர் பிரிவில் நள்ளிரவு நேரத்தில் பாதுகாப்பான வீட்டின் ஜன்னலை உடைத்து உள்ளே நுழைந்த திருடர்கள் 2இலட்சம் ரொக்கப்பணம் உட்பட 10 இலட்சத்துக்கு மேற்பட்ட பெறுமதியுடைய நகைகளையும் திருடிச் சென்றுள்ளனர்.

நள்ளிரவு நேரத்தில் நடைபெற்ற இந்தச்சம்பவம் கிராம மக்களை அச்சத்தில் ஆழ்த்தியுள்ளதுடன் இந்த விடயம் தொடர்பாக பூநகரி வர்த்தக நிறுவன உரிமையாளரான செ.தாதிகர் பூநகரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

தொடர்ந்து சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். பொலிஸ மோப்ப நாய்களை வரவழைத்து தேடுதல் நடாத்தியுள்ளனர்.

இதுவரை எவரும் கைது செய்யப்படாத நிலையில் பூநகரி பொலிஸார் புலன் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

சம்பவம் நடைபெற்ற போது வீட்டு உரிமையாளர், மனைவி உட்பட நால்வர் இருந்த போதிலும் அவர்களுக்கு எதுவும் தெரியாத நிலையிலே மிகவும் சாதுரியமாக இக்கொள்ளையை நடாத்தியிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. (112)

## ஓய்வூதியக் கொடுப்பனவில் பிழையான கொள்கை கடைப்பிடிப்பு

ஓய்வூதிய சேவைக்கால கொடுப்பனவு தொடர்பில் பிழையான கொள்கை கடைப்பிடிக்கப்பட்டு வருவதாக ஓய்வூதிய திணைக்கள பணிப்பாளர் தெரிவித்துள்ளார். ஓய்வூதிய சேவைக்கால கொடுப்பனவு கடன் அடிப்படையில் வழங்கப்படவுள்ளதாக வெளியான தகவலில் உண்மையில்லை என அதன பணிப்பாளர் சுனில் ஹெட்டி ஆராய்ச்சி தெரிவித்தார்.

# கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க அறிக்கையை ஏன் செயல்படுத்தவில்லை?

**தசாப்தங்களாக நீண்டு நிற்கும் ஈமச்சடங்குத் தீயில் அடுத்த தலைமுறைக்கு வேண்டிய ஒரு கொத்து உயிர்கள்: எனது சொந்தங்களைப் போன்ற கேதீஸ் லோகநாதன், ராஜினி திரணகம, கே. பத்மநாபா மற்றும் அதற்கு சற்று முன்னால் விஜயகுமாரதுங்க, நீலன் திருச்செல்வம் மற்றும் அதற்கு சற்றுப் பின்னர் தயா பத்திரண, கேஎல். தர்மசிறி போன்ற எங்கள் தலைமுறையின் மூத்த மற்றும் இளைய சகோதர சகோதரிகள், அநியாயமாக பலி கொள்ளப்பட்டதுக்கு சுதந்திரத்துக்கு பின்னான தலைமுறையை சேர்ந்த பெரும்பான்மை இன தேசியவாதிகள் தார்மீகப் பொறுப்பேற்க வேண்டும்.**

## கலாநிதி தயான் ஜயதிலக கட்டுரையிலிருந்து





கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகளை விளங்கிக் கொண்டவர்கள் அது இந்த நாட்டுக்கு அதன் நெருக்கடியிலிருந்து வெளியேறுவதற்கான ஒரு வழியை ஏற்படுத்துகிறது என்பதை அறிவர்கள், மற்றும் அந்த அறிக்கையின் விரைவான செயல்பாட்டினை காணவிரும்புகிறவர்கள். அதைத் தடுப்பது எது? முக்கிய தடையாக இருப்பது என்ன? என்கிற கேள்விகளைக் கேட்க வேண்டும்.

என்னுடைய எண்ணப்படி அந்தத் தடை ராஜபக்ஸ நிருவாகத்தை விட மிகவும் பழமையானது, அது முந்தைய ஒரு ஆணைக்குழுவின் ஆவி மற்றும் அதன் அறிக்கைதான் ஒருவேளை சுதந்திர இலங்கையின் வரலாற்றில் மிகவும் செல்வாக்கானது.

கிரேக்கத்தில் படித்த புனித போல், யேசு இயக்கத்தையும் மற்றும் அதன் கட்டுப்பாடுகள் பற்றிய செய்திகளை யூதத்தில் உள்ள தீவிரவாத பிரிவாக வெளியிட்டதுடன் அதை உலகளாவிய ரீதியில் கொள்கை, விசுவாசம் மற்றும் சமூகமாக மாற்றினார். கிறிஸ்தவத்தை சிறப்படையச் செய்வதற்கு அதனை யூதச் சாதியினரின் தனித்துவமான விதியிலிருந்து விடுவிக்க வேண்டியிருந்தது.

மகாவம்சத்தை எழுதியவர் அல்லது எழுதியவர்கள் புனித போலின் பாத்திரத்தை தலைகீழாக கையாண்டிருக்கிறார்கள்: அவர் அல்லது அவர்கள் புத்தரின் உலகளாவிய போதனையை எடுத்துக்கொண்டு அதனை சிறிய ஒரு தீவில் உள்ள இன - மொழியியல் குழுவின் விதியாக அடையாளம் கண்டுள்ளார்கள்.

புனித போல் கிறித்தவத்தை அதீதமான ஒருங்கிணைந்த கொள்கை மற்றும் திட்டமாக மாற்றினார். மகாவம்சமோ பௌத்த மதத்தை குறைத்து அதை விரிவடைய விடாமல் சிங்கள மயமாக மாற்றி தீவில் தனியாக விட்டுள்ளது, அதேவேளை ஆசியாவின் பெரிய புராதன பெருநகர நாகரிகங்கள் மூலமாக இந்தியா, சீனா, யப்பான் போன்ற வேறிடங்களில் அது செழிப்படைந்து பரப்புதல் மூலமாக விரிவடைந்துள்ளது.

சுருக்கப்பட்டு பௌத்தத்தை இனவாதப் படுத்திய மகாவம்சம் 20ஆம் நூற்றாண்டில் அநாகரிக தர்மபால என்கிற கருத்தியலாளர் மற்றும் அவரது வழித் தோன்றலான சித்தாந்த வாதிகளால் புதுப்பிக் கப்பட்டது.

சுதந்திரத்தை அடைவதற்கு முக்கிய பாதையாக இருந்த 1947 பொதுத் தேர்தலில், ஐ.தே.க மற்றும் இடதுசாரிகள் என்பன சக்தி வாய்ந்த இரண்டு போட்டி மிக்க முகாம்களாக எழுந்தன, சுதந்திரமான முற்போக்கு வாதிகள் மற்றும் மிதவாதிகள் மூன்றாம் நிலைக்குத் தள்ளப் பட்டார்கள்.

காலனித்துவ எதிர்ப்பு உணர்வு மகத்தான முக்கியத்துவம் பெற்றிருந்த இந்த உச்சக் கட்டத்தில், சிங்கள பௌத்த மேலாதிக்க திட்டத்தின் பிரதி நிதித்துவம் அங்கு இருக்கவில்லை நாட்டில் அதற்கான அரசியல் இடை வெளி இருக்கவில்லை. ஆனால் ஒரு தசாப்தத்துக்கும் குறைவான காலப் பகுதியிலேயே வியத்தகு ஒரு மாற்றம் அங்கு உருவானது.

நிறுவன ரீதியான சித்தாந்த நடவடிக்கை ஆரம்பமாகி அந்த ஆணைக்குழுவின் அறிக்கை வழங்கப்பட்ட 60 ஆவது வருட நிறைவு, இந்த வருடத்தில்தான் வருகிறது. அது பேராசிரியர் குணபால மலலசேகரா மற்றும் எல்.எச். மேதானந்தா ஆகியோரின் தலைமையிலுள்ள அகில இலங்கை பௌத்த காங்கிரசின் மாநாட்டில் 1954இல் சமர்ப்பிக்கப்பட்ட பௌத்த ஆணைக்குழுவின் அறிக்கை. அது தனது இறுதித் தயாரிப்பை மிகவும் தீர்க்கமான ஆண்டுகளில் ஒன்றான 1956 இன் ஆரம்பத்தில் சமர்ப்பித்தது.

இந்த அறிக்கை எஸ்.டபிள்யு.ஆர்.டி பண்டாரநாயக்காவின் வெற்றிக்கு முன்னுதவியாக இருந்தது. அது மேலோட்டமாக பௌத்தர்களின் மனக்குறையை கூறுவதாக இருந்தாலும் அது பௌத்த இலட்சியமான சகிப்புத்தன்மை மற்றும் மெய்மை நிலை என்பனவற்றை பிரதிபலிப்பவையாக இருக்கவில்லை.

அந்த அறிக்கை சிங்களம் மட்டும் கொள்கையை பின்பற்றும்படி கூறியது, அதாவது சிங்களம் மட்டுமே தனியான அரச கரும மொழியாக இருக்கவேண்டும் (புத்த தருமத்துக்கு சற்றும் பொருந்தாத ஒரு சுலோகம்), தனியார் பாடசாலைகளை கையேற்க வேண்டும் என்கிற வாதம், மற்றும் அதைத் தொடர்ந்து வந்த தசாப்தங்களில் இலங்கையின் வடிவமைப்பினையே மாற்றி சுதந்திர இலங்கையின் ஒழுக்க உயர்நிலை இயல்பையே மாற்றியமைக்கத் தக்க, இன்னும் பல கொள்கைகள் அதில் அடங்கியிருந்தன.

அவற்றின் காரணமாக, திறந்த இலங்கைச் சமூகத்தை கொடிய உலைக்களத்தில் போட்டு கருகி வெடிக்கவைத்து, அவர்களை இன மொழியியல் மற்றும் இன மத வழிகளில் செல்லும்படி செய்து, இன மற்றும் மத சிறுபான்மையினரை தனிமைப்படுத்தி, நாட்டை ஆசியாவிலேயே உன்னத இடத்தில் வைப்பதற்கு ஆதாரமான ஆங்கிலம் படித்த உயர் பண்புகளைக் கொண்ட மனித வளங்களை சீர்குலைத்து, நீடித்த பொருளாதார வளர்ச்சிக்கான வாய்ப்பு, மற்றும் வேலை வாய்ப்பு உருவாக்கம் என்பனவற்றை சுருக்கி, குடியகல்வினை வெள்ளம் போல பெருக்கி, உடனடி நடவடிக்கை என்கிற பெயரில் தரத்தை கீழிறக்கி மற்றும் படிப்படியாக நரவேட்டையாடும் இறைச்சிக் கடைகளை உருவாக்கியதால் அவை உள்நாட்டு யுத்தத்தில் நூறு ஆயிரக்கணக்கில் வடக்கு மற்றும் தெற்கில் உள்ள சிங்கள மற்றும் தமிழ் இளைஞர்களை உட்கொண்டன.

1954இல் நவீன - தர்மபால திட்டம் வெற்றிகரமாக மீள் எழுச்சி பெற்றதுடன் எஸ்.டபிள்யு.ஆர்.டி பண்டாரநாயக்கா 1955இல் அதைத் தத்தெடுத்துக் கொண்டதன் மூலம் அது மீள் வலிமை பெற்றது (அவர் 1952இல் நடந்த முந்தைய தேர்தலில் சிங்களம் தமிழ் ஆகிய இரண்டுமே அரச கரும மொழிகள் என்கிற நிலைப்பாட்டில் இருந்தார்).

இதேபோல ரணில் - சந்திரிகா ஆட்சி காலத்தில் எல்.ரீ.ரீ.ஈ யினை திருப்திப் படுத்த மேற்கொண்ட கொள்கைகளினால் ஒரு சக்தி வாய்ந்த சிங்கள பௌத்த எதிர் கலகம் தோன்றியதை காணக்கூடியதாக இருந்தது, சோம தேரர் நிகழ்வுடன், ஜாதிக ஹெல உறுமய உயர்ச்சி பெற்றது, கிறிஸ்தவ தேவாலயங்கள் மீதான தாக்குதல்கள், ஷாருக்கானது நிகழ்ச்சி மீது கிறனைட் தாக்குதல், மாற்ற எதிர்ப்பு மசோதா மேற்கொள்ளப் பட்டது, மற்றும் ஜே.வி.பி.யில் வீரவன்ச வலிமையாக எழுச்சி பெற்றது போன்ற பல நிகழ்வுகள் நடந்தேறின.

சந்திரிகா 2004இல் அதிகாரத்தை மீண்டும் பறித்துக் கொள்வதற்காக பசப்பு வார்த்தை கூறி இந்தச் சக்திகள் சிலவற்றை வசப்படுத்திக் கொள்ள முயற்சித்தார், அதேவேளை மகிந்த ராஜபக்ஸ இந்த அலையை முறியடிப்பதற்காக "எஸ்.டபிள்யு.ஆர்.டி 56" நிகழ்வை நடாத்தி தனது நிலையை 2005இல் உறுதிப்படுத்திக் கொண்டார்.

இன்று 30 வருட யுத்தத்துக்கு பின்னான ஐந்து வருடத்தில் மற்றும் பௌத்த ஆணையம் தனது அமர்வை ஆரம்பித்த அறுபது வருடங்களின் பின்னர், ராஜபக்ஸ ஆட்சி தனது சித்தாந்தத்தையும் மற்றும் மூலோபாயத் திட்டங்களையும் இயக்கிவரும் அதேவேளை அந்த ஆட்சியும் பௌத்த தீவிரவாதத்தினால் பாதிக்கப்படும் பலவீனமான பணயக் கைதியாக உள்ளது.

சுதந்திரத்துக்கு பின்னான பரம்பரையில் உள்ள பிரிவினைவாத சிங்கள பௌத்த தேசியவாதிகள், ஆசியாவில் ஜொலிக்கும் மாணிக்கமாகத் திகழும் - உண்மையில் காலனித்துவம் அற்ற உலகத்தில் - ஒரு நாட்டையும் அதன் அமைப்பையும் கைப்பற்றிக் கொண்டதோடு, அவர்களின் சமூக சீற்றத்தினால் அதைச் சிதைத்து நாசமாக்கியதுடன், தங்களது சொந்த வரம்புகள் மற்றும் பழமையான குறுகிய தப்பெண்ணங்களுக்கு ஏற்றவாறு அளவையும் வடிவமைப்பையும் குறைத்துக் கொண்டார்கள்.

அவர்கள் நச்சுப் புகையுடன் எரிந்து சிதறலானதையே நம்மிடம் கையளித்தார்கள், அது ஒருகாலத்தில் ஜனநாயகத்தினதும் மற்றும் சமூக நலன்களினதும் முன்மாதிரியான நாடு, என்று புகழப்பட்ட நம் நாட்டின் உலக அபிப்பிராயத்தை கணிசமானளவு கட்டிப்போட்டது, இப்போது பெரு வெறுப்புக்கும் ஆளாகியுள்ளது.

**தசாப்தங்களாக நீண்டு நிற்கும் ஈமச்சடங்குத் தீயில் அடுத்த தலைமுறைக்கு வேண்டிய ஒரு கொத்து உயிர்கள்: எனது சொந்தங்களைப் போன்ற கேதீஸ் லோகநாதன், ராஜினி திரணகம, கே.பத்மநாபா மற்றும் அதற்கு சற்று முன்னால் விஜயகுமாரதுங்க, நீலன் திருச்செல்வம் மற்றும் அதற்கு சற்றுப் பின்னர் தயா பத்திரண, கே.எல். தர்மசிறி போன்ற எங்கள் தலைமுறையின் மூத்த மற்றும் இளைய சகோதர சகோதரிகள், அநியாயமாக பலி கொள்ளப்பட்டதுக்கு சுதந்திரத்துக்கு பின்னான தலைமுறையை சேர்ந்த பெரும்பான்மை இன தேசியவாதிகள் தார்மீகப் பொறுப்பேற்க வேண்டும்.**

சுதந்திரத்துக்கு பின்னான தலைமுறையில் குற்றவாளிகளுக்கு மத்தியில் குறைந்தளவு வீரர்களாகத் திகழ்பவர்கள் ஒரு சிறிய அளவான தைரியமான புத்திசாலிகள் மட்டுமே.

ஆரம்ப கால 1950 களில் வெளியான இலங்கைப் பல்கலைக்கழக சஞ்சிகையில் - கிறிஸ்சிஸ் - சிறிதளவு விளக்கப் பட்டிருப்பது முக்கியமான உணர்ச்சி மற்றும் நெருக்கடி உணர்வு மற்றும் ஆரவாரத்தை தவிர்க்கும் அவர்களின் திறமைகள், செயல்திறன் மற்றும் சமூக தொழில்முறை வாய்ப்புக்கள் போன்றவற்றுக்கு உத்தரவாதம் வழங்கப்பட்டது என்று. பல தசாப்தங்களாக அவர்கள் கண்ணியமான அமைப்பாக இருந்த அதேவேளை, அவர்கள் இலங்கையின் தேசிய நலனுக்காகவும் மற்றும் அதன் மக்களுக்காகவும் ஐயத்துக்கு இடமின்றி உறுதியுடன் உழைத்தார்கள்.

இன்னும் புத்திசாலித்தனமான இந்த மனித நேய உலகத் தொடர்புள்ள அறிவுஜீவிகளான உயரடுக்கினர் சிங்கப்பூர் மற்றும் இந்தியாவிலுள்ள தங்கள் சகாக்களைப் போலல்லாது கலாசார யுத்தத்தில் தோற்றுப்போனார்கள். ஒருவேளை அவர்களது தோல்வி தவிர்க்க முடியாத ஒன்றாக இருந்திருக்கலாம், அதற்கான காரணம் எங்கள் சமூக அணி, அல்லது அந்தத் தோல்வி துல்லியமானது ஏனென்றால் அவர்கள் தங்களது எகிப்திய, சிரிய மற்றும் சிங்கப்பூர் சகாக்களை போலல்லாது நவீனத்துவ காரணங்களுக்காக ஒருபோதும் கலாசார யுத்தத்தை நடத்தியதில்லை - அதற்கு உயரடுக்கு நவீனத்துவத்தை பாதுகாக்கும் அதேவேளை அதற்கு பிரபலமான நவீனத்துவத்தின் விரிவாக்கமும் அவசியமாக இருந்தது.

பௌத்த ஆணைக்குழு மற்றும் அதை இயக்கியவர்களின் நோக்கம், சோல்பரி ஆணைக்குழுவில் சுருக்கமாக அடங்கியுள்ள பேச்சு வார்த்தை தீர்வுகளை அவிழ்த்து இலங்கையை மீண்டும் ஸ்தாபிக்க வைப்பது ஆகும். பௌத்த ஆணைக்குழுவின் உண்மையான இலக்கு சோல்பரி ஆணைக்குழுவே, இரண்டாம் உலக யுத்தத்தின் பின் பதவியிலுள்ள பிரித்தானிய தொழிற்கட்சி அரசாங்கத்தின் முற்போக்கான பண்பாடு, மற்றும் டி.எஸ் சேனநாயக்கா தலைமையிலான இலங்கை உயரடுக்கினர் ஆகியவற்றின் இடைமுகத்தின் உற்பத்தியாக அது இருந்தது.

சோல்பரி ஆணைக்குழுவின் தயாரிப்பான அரசியலமைப்பின் அத்திவாரங்களில் விரிசல் காணப்படுவதாக பௌத்த ஆணைக்குழுவின் அறிக்கையில் கூறப்பட்டிருந்தது. எல்.எல்.ஆர்.சி மற்றும் பௌத்த ஆணைக்குழு ஆகிய இரண்டினதும் அறிக்கைகளும் ஒன்றுக்கொன்று முற்றிலும் பொருந்தக் கூடியனவாக உள்ளன.

எல்.எல்.ஆர்.சி அறிக்கையின் தர்க்கம், பாரபட்சத்தை ஒழிப்பதன் அடிப்படையில் ஒருங்கிணைப்பை ஏற்படுத்தல் என்பதன் அடிப்படையில் இருக்கும் அதேவேளை 1954ஆம் ஆண்டின் பௌத்த ஆணைக்குழுவின் அறிக்கையில் பாகுபாட்டின் அடிப்படையில் ஆதிக்கம் செலுத்துவதாக உள்ளது. அது அதன் முந்தைய அறிக்கையின் நிழலாக இருப்பதோடு, அதன் பார்வை எல்.எல்.ஆர்.சி அறிக்கையை சிறியதாக்குவதோடு, அதன் நடைமுறையை கண்ணுக்கு தோன்றாத வகையில் முடக்குகிறது.

(18ஆம் பக்கம் பார்க்க)

# பெண்ணொருவரை ஜனாதிபதி வேட்பாளராக ஐ.தே.க. நிறுத்த விரும்ப மாட்டாது

## நாடாளுமன்ற உறுப்பினர் ரோஸி சேனாநாயக்க கவலை



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து பெண்ணொருவரை ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்துவார்கள் என்ற நம்பிக்கை இல்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஸி சேனாநாயக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

யுத்தம் நிறைவடைந்ததோடு எமது நாட்டின் புதிய விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும். அரசாங்கம் நாடுகளுக்கிடையில் உள்ள உறவு மேம்படுத்த வேண்டும்.

இருப்பினும் கடந்த இரண்டு வருடங்களுக்குள் இந்த முக்கிய நாடுகளுடனான உறவுகள் மேம்படுத்தப்படவில்லை. தற்போதும் அந்த நாடுகளுடான உறவுகள் வலுப்படுத்தப்படவில்லை.

நாம் சரியானவற்றை முன்னெடுப்பதில் தோல்வியடைந்துள்ளோம்.

யுத்தம் முடிவடைந்ததோடு கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையை அரசாங்கம் கொண்டுவந்தது.

ஆனால் அரசாங்கத்தினால் இந்த உறவுகளை வலுப்படுத்த முடியாமல் போயுள்ளது.

சந்தர்ப்பம் கிடைக்குமாக இருந்தால் ஜனாதிபதி வேட்பாளராகுவேன். பெண்களுக்கு அனைத்து விடயங்களையும் நிறைவேற்ற முடியும் என்று நினைக்கின்றேன். ஹிலரி கிளின்டன், சோனியா காந்தி போன்றோரை முன்னுதாரணமாக எடுத்துக்கொண்டுள்ளேன். அவர்கள் உலகத்தை வேறு விதத்தில் நோக்குகின்றனர்.

எனக்கு வேட்பாளராகும் சரந்தர்ப்பம் கிடைத்தால் அதனை நிறைவேற்ற முடியும். ஆனாலும் ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து பெண்ணொருவரை வேட்பாளராக நிறுத்துவார்கள் என்ற நம்பிக்கை இல்லை என்றார்.

# கட்சிகளுடன் இணக்கத்திற்கு விசேட குழு நியமனம்

விமல் வீரவன்ச தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணி மற்றும் ஜாதிக ஹெல உறுமய ஆகிய கட்சிகளுடன் இணக்கப்பாட்டை ஏற்படுத்திக் கொள்ள அரசாங்கம் விசேட குழுவொன்றை நியமித்துள்ளது.

அண்மைக் காலமாக ஆளும் கடசியில் கூட்டணி வகித்து வரும் தேசிய சுதந்திர முன்னணியும், ஜாதிக ஹெல உறுமய கட்சியும் அரசாங்கத்தை கடுமையாக விமர்சனம் செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அரசாங்கத்திற்கும் குறித்த இரண்டு கட்சிகளும் இடையில் நிலவி வரும் கருத்து முரண்பாட்டைக் களையும் நோக்கில் ஐந்து பேர் அடங்கிய விசேட குழுவொன்று நேற்றுமுன்தினம் நியமிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் அலரிமாளிகையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மத்திய செயற்குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைய விசேட குழு நியமிக்கப்பட்டுள்ளது.

பசில் ராஜபக்ஷ, மைத்திரிபால சிறிசேனா, அனுரயாப்பா அபேவர்தன, சுசில் பிரேமஜயந்த மற்றும் நிமால் சிறிபால டி சில்வா ஆகியோர் இந்தக் குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.

இதேவேளை, ஐக்கிய நாடுகள் மனித உரிமை விசாரணைக் குழுவினை நாட்டுக்குள் அனுமதிப்பது குறித்து நாடாளுமன்றில் விவாதம் நடத்தி வாக்கெடுப்பின் மூலம் தீர்மானிக்க ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழு உத்தேசித்துள்ளது.

# டெங்கு ஒழிப்பு செயற்குழு சந்திப்பு



டெங்கு ஒழிப்பிற்கான ஜனாதிபதி செயற்குழு நேற்றுமுன்தினம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் கூடியது. அலரி மாளிகையில் இடம்பெற்ற இச்சந்திப்பின் போது அமைச்சர்களான மைத்திரிபால சிரிசேன பசில் ராஜபக்ஷ மகிந்த அமரவீர, பிரதி அமைச்சர் துலிப் விஜேசேக்கர மற்றும் அனைத்து மாகாணங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் முதலமைச்சர்கள், மாகாண அமைச்சர்கள், ஆளுநர்கள், பிரதேச செயலாளர்கள், ஜனாதிபதிச் செயலாளர் லலித் வீரதுங்க, அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் பாதுகாப்பு அதிகாரிகள், அரச அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## நிதிமோசடி செய்தவர் கைது

அரசாங்க அமைச்சர்களூடாக வேலை மற்றும் ஒப்பந்தங்களை பெற்றுத் தருவதாகக் கூறி நிதி மோசடியில் ஈடுபட்ட ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு விஷேட விசாரணைப் பிரிவுக்கு கிடைத்த தகவலின் படி நுகேகொடை நீதவான் நீதிமன்றத்துக்கு அருகில் வைத்து நேற்றுமுன்தினம் இவர் கைது செய்யப்பட்டார். சந்தேகநபர் பன்னிப்பிட்டிய - ருக்மலே பகுதியைச் சேர்ந்த 43 வயதான ஒருவர் எனத் தெரியவந்துள்ளது.

# நாடாளுமன்றத் தெரிவுக் குழு நேரத்தை விரயமாக்கும் நடவடிக்கை

## கூறுகிறார் ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர்

(கொழும்பு)

தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் நாடாளுமன்றத் தெரிவுக்குழு நேரத்தை விரயமாக்கும் நடவடிக்கையாகும் என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியல்ல தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அண்மையில் 13 ஆம் திருத்தச் சட்டத்தை அமுல்படுத்த விரும்புவதாக, அண்மையில் இந்திய பிரதமர் நரேந்திர மோடியிடம் குறிப்பிட்டுள்ளார்.

இந்த வாக்குறுதிகளை காலதாமதமின்றி அரசாங்கம் அமுல்படுத்த வேண்டியது அவசியமானது. தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் நோக்கில் உருவாக்கப்படும் நாடாளுமன்றத் தெரிவுக்குழுக்கள் மற்றும் ஆணைக்குழுக்கள் தொடர்பில் நம்பிக்கை கிடையாது.

தீர்வு எதனையும் எட்டாது வெறுமனே பேச்சுவார்த்தைகளை நடாத்துவதில் எவ்வித பயனும் கிடையாது.

இலங்கை அரசியல் சாசனத்தில் 13 ஆம் திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துவதற்கு எவ்வித தடைகளும் கிடையாது.

13 ஆம் திருத்தச் சட்டத்தின் அடிப்படையில் அதிகாரத்தை பகிர அரசாங்கத்திற்கு விருப்பம் இல்லாவிட்டால் வேறும் மாற்று அதிகார பகிர்வு யோசனைத் திட்டமொன்றை அரசாங்கம் முன்வைக்க வேண்டியது அவசியமானது.

நாடாளுமன்றத் தெரிவுக் குழு அமர்வுகளில் பங்கேற்று நேரத்தை விரயப்படுத்த ஐக்கிய தேசியக் கட்சி விரும்பவில்லை.

தேசிய இனப்பிரச்சினைக்கு எவ்வாறு தீர்வுத் திட்டமொன்றை முன்வைப்பது என்பது குறித்து அரசாங்கம் எழுத்து மூலமமான யோசனைத் திட்ட மொன்றை முன்வைக்க வேண்டும்.

அவ்வாறு எழுத்து மூலமான யோசனைத் திட்டமொன்று சமர்ப்பிக்கப்பட்டால் அதற்கு பதிலளிக்க முடியும்.

தேசிய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களில் ஆளும் கட்சி அரசியல் இலாப மீட்ட முயற்சிக்கக் கூடாது. நாட்டின் தலைவருக்கு தெளிவான அரசியல் சிந்தனை இருக்க வேண்டியது அவசியமானது என்றார்.

# சத்தியாக்கிரகம் இன்றுடன் நிறைவு

(கொழும்பு)

சுகாதார விஞ்ஞான பட்டப்படிப்பை 3 வருடங்களுக்கு மட்டுப்படுத்துவதை ஆட்சேபித்து நடாத்தப்பட்டுவரும் சத்தியாக்கிரகத்தை இன்று நிறைவுக்கு கொண்டு வரவுள்ளதாக அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது.

சுகாதார விஞ்ஞான பட்டப்படிப்பு தொடர்பான நெருக்கடிக்கு ஜனாதிபதியினால் வழங்கப்பட்ட தீர்வு குறித்து நேற்று முன்தினம் அனைத்துப் பல்கலைக்கழகங்களுக்கும் எழுத்துமூலமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது. இதன்படி சத்தியாக்கிரகத்தை நேற்று நிறைவுக்கு கொண்டு வரத்தீர்மானித்திருந்ததாக பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் நேற்று அறிவித்திருந்தது. இருந்தபோதும், இரண்டு விடயங்களை வலியுறுத்தி குறித்த சத்தியாக்கிரகத்தை இன்று வரை தொடர்வதற்கு தீர்மானித்ததாக ஒன்றியத்தின் இணைப்பாளர் நஜித் இந்திக தெரிவித்துள்ளார்

# குற்றச்சாட்டுக்களை நிரூபித்தால் அரசியலிலிருந்து ஓய்வுபெறத் தயார்

## நுகர்வோர் விவகார அமைச்சர் அறிவிப்பு

சட்டவிரோதமான முறையில் எதனோல் இறக்குமதி செய்ததாக நிரூபித்தால் அரசியலிலிருந்து நிரந்தரமாக ஓய்வுபெறத் தயார் என நுகர்வோர் விவகார அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

சட்டவிரோதமாக எதனோல் இறக்குமதி செய்ததாக சிலர் குற்றம் சுமத்துகின்றனர். இவ்வாறு குற்றம் சுமத்துவோர் ஆதாரங்களுடன் நான் குற்றமிழைத்தேன் என நிரூபித்தால், அரசியலிலிருந்து ஓய்வு பெற்று குற்றம் சுமத்தியவரின் வீட்டில் சட்டி பானை கழுவத் தய்ார். சில தரப்பினர் இணையத்தளங்களின் ஊடாக என் மீது சேறு பூசுகின்றனர்.

வாழ்நாள் முழுவதிலும் வாக்களிக்காத பொது வேட்பாளர் இன்று ஜனநாயகம் பற்றி பேசுகின்றார். தவறு தலாகவேனும் சரத் பொன்சேகா ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியீட்டி யிருந்தால் நாடு சர்வாதிகாரத்தை நோக்கிச் சென்றிருக்கும் என்றார்.

# பிரதான பேருந்து நிலையங்களின் சிற்றுண்டிச் சாலைகள் மீளமைப்பு

(கொழும்பு)

பிரதான பேருந்து நிலையங்களில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள சிற்றுண்டிச் சாலைகளை எதிர்வரும் 3 மாதங்களுக்குள் மீளமைத்து உரிய தரங்களுக்கு அமைய நடத்திச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழு இந்த அறிவித்தலை விடுத்துள்ளது.

சிற்றுண்டிச்சாலைகளின் உரிமையாளர்களுக்கு நடத்தப்பட்ட கருத்தரங்கு ஒன்றில் உரையாற்றிய ஆணைக்குழுவின் தலைவர் ரேணுக பெரேரா, இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்,

உரிய தரங்களுக்கு அமைய தமது உணவு விநியோக நிலையங்களை பேணாத உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

பிரதான பேருந்து நிலையங்களில் முன்னெடுத்துச் செல்லப்படும் சிற்றுண்டிச்சாலைகள் மற்றும் உணவு விநியோக நிலையங்கள் உரிய சுகாதாரமற்றதாகவும், தரமற்ற உணவு வகை களையும் கொண்டுள்ளமை குறித்து பொதுமக்களிடமிருந்து தொடர்ந்தும் முறைப்பாடுகள் கிடைத்த வண்ணம் உள்ளன.

இந்த நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் முகமாக அனைத்து பொது பேருந்து நிலையங்களிலும் செயற்படும் உணவு விநியோக நிலையங்களையும் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையில் கட்டாயமாக பதிவு செய்ய வேண்டும் என்றார்.

# விவசாயப் பொருட்களை நேரடியாக விவசாயிகளிடம் வாங்குவதில் சிரமம்

## வியாபாரிகள் கவலை தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

மருதனார் மடம், சுன்னாகம் சந்தைகளில் உற்பத்தியாளர்கள், விற்பனைக்காகக் கொண்டு வரும் வாழைக்குலை, வாழை இலை போன்ற விவசாய பொருட்களை நுகர்வோர் மற்றும் வெளிஇடங்களில் இருந்து வரும் சில்லறை வியாபாரிகள் நேரடியாக விவசாயிகளிடம் இருந்து பெற்றுக்கொள்ள முடியாத நிலை காணப்படுவதாக கவலை தெரிவித்துள்ளனர்.

விவசாயிகள் கொண்டுவரும் பொருட்கள் விற்பனை செய்யப்படும் இடங்களிற்கு எடுத்து வரப்படாமல் வீதிகளில் வைத்து விற்கப்படுவதால் வெளியிடங்களில் இருந்துவரும் சில்லறை வியாபாரிகள் மற்றும் சாதாரண நுகர்வோர் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதுடன் விவசாயிகளும் நஷ்டத்தை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே, சம்பந்தப்பட்ட தரப்பினர் இவ்விடயத்தில் கவனமெடுத்து விவசாயிகள், வியாபாரிகள், பொதுமக்கள் அனைவரதும் நலனைக் காக்கவேண்டும்மென பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (66)



அச்சுவேலி, சந்நிதி வீதி, தம்பாலையில் அமைந்துள்ள இந்து மயானத்திற்குச் செல்லும் வீதியானது நீண்ட காலமாக புனரமைப்பின்றிக் காணப்படுகின்றது. (85)

## நிர்வாகசபை உறுப்பினர் தெரிவு

(யாழ்ப்பாணம்)

முதலைக்குளி முருகமூர்த்தி ஆலய பரிபாலன சபையின் பொதுக்கூட்டம் கடந்த சனிக்கிழமை மாலை ஆலய மண்டபத்தில் நடைபெற்றது.

பொதுச்சபை உறுப்பினர்களாக 30 பேரும் பரிபாலன சபையின் தலைவராக வீ.சி.சிவநாதனும் உபதலைவராக க.உலநாதனும் செயலாளராக வி.தருமகுலசிங்கமும் உப செயலாளாராக க.சு.மகாகணபதியும் பொருளாளராக சி.புஸ்பாகரனும் நிர்வாக சபை உறுப்பினர்களாக 10 பேரும் தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (12)

## விண்ணப்பங்கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை பொலிஸ் திணைக்களத்தில் பயிலுநர் பொலிஸ் கொஸ்தாபல் சாரதி பதவிக்கு இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

19 - 32 வயதுக்குட்பட்ட, க.பொ.த.(சா/த) பரீட்சையில் சித்தியடைந்த 5 அடி, 3 அங்குல உயரமுடைய, மார்பு 30 அங்குலமுடைய, விளையாட்டுப் போட்டிகளில் பங்கு பற்றிய சான்றிதழ்கள் உடைய வாகனம் ஓட்டும் சான்றிதழ்களுடன் ஒரு வருட அனுபவமும் உடையவர்கள் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பங்கள் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 15 அம் திகதிக்கு முன்பாக பணிப்பாளர் (ஆட்சேர்ப்பு) பயிலுனர் ஆட்சேர்ப்பு அலுவலகம், 375, முதலாம் மாடி, ஸ்ரீ சம்புத்தவ ஜயந்தி மாவத்தை, கொழும்பு - 06 என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பவேண்டும். கடித உறையின் இடது மேல்மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிடல் அவசியமாகும். சம்பளத்துடன், இலவச போக்குவரத்து வசதிகள், கடின கொடுப்பனவுகள், இலவசமருத்துவ வசதிகள், இலவச சீருடைகள், விளையாட்டு உதவிகள, மற்றும் வெகுமதிப் பணப்பரிசுகளும் வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளன. (105)

## அடிக்கல் நாட்டும் நிகழ்வு

(நெல்லியடி)

மானிப்பாய் இந்து கல்லூரியில் மகிந்தோதய தொழில்நுட்ப பீடத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு இன்று புதன்கிழமை காலை 8.30 மணிக்கு கல்லூரி வளாகத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் சிவநேஸ்வரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்து கொள்ளவுள்ளார். (17)

## சப்பறத்துக்கு அச்சுவைத்தல்

(அச்சுவேலி)

அச்சுவேலி நாவலம்பதி காட்டுமலைக் கந்தசாமி ஆலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட சப்பறத்துக்கான அச்சுவைத்தல் நிகழ்வு இன்று நண்பகல் 12 மணிக்கு இடம்பெறவுள்ளது.

பல இலட்சம் ரூபா நிதியுதவியுடன் உருவாக்கப்பட்டுள்ள புதிய சப்பறத்துக்கான அச்சினை ஆசாரி பத்தமநாதன் சுரேந்திரன் நிர்மாணிக்கவுள்ளதாக மேலும் தெரிவிக்கப்படுகின்றது. (85)


ஜனரஞ்சகத் தன்மையை முதன்மைப் படுத்தி பக்கம் சாராமல் துணிச்சலுடன் தரமான அம்சங்களை அள்ளிவரும் வாரமலர்.

வாரமலர்
தினமுரசு

நாளைய தினமுரசு வாரமலரில்...

12.06.2014




- 13 ஆவது திருத்தம் மீண்டும் உயிர்பெறுகிறது! இலங்கை அரசும் தமிழர் தரப்பும்
- ஐரோப்பிய ஒன்றிய பாராளுமன்ற தேர்தல் முடிவுகள் ஒரு அலசல்
- இந்தியாவின் புதிய அரசும் கூட்டமைப்பின் நிலைப்பாடும்!
- 200ஆவது ஆண்டில் மட்டு. மெதடிஸ்த கல்லூரி




பிரேசில் திருவிழா

உங்கள் முகவர்களிடம் கேட்டு வாங்கிப் படியுங்கள்!

சூடு - சுவை - சுவாரசியம் - அதுதான் தினமுரசு

# கால்பந்து திருவிழா

**நான்கு** ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் ஒலிம்பிக் திருவிழா எப்படி உலக நாடுகள் அனைத்திலும் புகழ்பெற்றதோ, அதற்கு இணையான மதிப்பைக்கொண்டது உலகக்கோப்பை கால்பந்து போட்டி. இந்தப் போட்டியும் 4 வருடங்களுக்கு ஒருமுறை நடாத்தப்படுகிறது.

உலகில் சுமார் 200 நாடுகள் கால்பந்து விளையாடினாலும், உலகக்கோப்பையின் பிரதான சுற்றில் பங்கேற்று விளையாடுவதையே பெரும் பாக்கியமாக கருதுகின்றன. அதற்காக நூற்றுக்கணக்கான கோடி ரூபாவையும் செலவிடுகின்றன.

கடந்த நான்கு ஆண்டுக்கு (2010) முன்பு உலகக்கோப்பை கால்பந்து போட்டியை தென்னாபிரிக்கா ஏற்று நடத்தியது. 2014ஆம் ஆண்டுக்கான 20ஆவது உலகக்கோப்பை கால்பந்து போட்டிகள் தென் அமெரிக்க நாடுகளில் ஒன்றான பிரேசிலில் நடைபெறவுள்ளது. தொடர்ச்சியாக ஐரோப்பிய நாடுகளுக்கு வெளியே உலகக்கோப்பை கால்பந்து போட்டிகள் 2 முறை நடப்பது இதுவே முதல் தடவை.

இதில் ஒரு ஆச்சரியமான விடயம் என்னவெனில், 2022ஆம் ஆண்டு போட்டியை நடத்தவிருக்கும் நாடுகளின் பெயர்களைக் கூட இப்போதே சர்வதேச கால்பந்து சம்மேளனம் (பிபா) அறிவித்து இருப்பதுதான். 2018இல் ரஷ்யாவிலும், அதனையடுத்து 2022இல் கட்டார் நாட்டிலும் உலகக் கோப்பை கால்பந்துப் போட்டிகள் நடைபெறவிருக்கின்றன. அரபு நாடு ஒன்றில் போட்டிகள் நடக்க இருப்பது இதுதான் முதல் தடவை என்பது குறிப்பிடத்தக்கது.




சர்வதேச கால்பந்து சம்மேளனத்தில் 208 நாடுகள் அங்கத்தினர்களாக உள்ளன.

பிரேசிலில் உலகக்கோப்பை கால்பந்து போட்டிகள் நாளை முதல் யூலை மாதம் 13ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன. இதில் விளையாடுவதற்காக போட்டியை நடத்தும் நாடும் 5 முறை சம்பியனுமான பிரேசில் தவிர மற்ற 31 நாடுகளும் தங்களது கண்டத்து பகுதி நாடுகளுடன் லீக் சுற்றில் ஆடியும், அதிலும் இடம் கிடைக்காதவர்கள் பிளே ஓப் சுற்றில் விளையாடியும் தகுதி பெற்றுள்ளன.

அல்ஜீரியா, ஆர்ஜென்ரீனா, அவுஸ்ரேலியா, பெல்ஜியம், போஸ்னியா-ஹெர்சகோவினா, பிரேசில், கமரூன், சிலி, கொலம்பியா, கோஸ்டா ரிகா, ஐவரி கோஸ்ட், குரேஷியா, ஈகுவடார், இங்கிலாந்து, பிரான்ஸ், ஜேர்மனி, கானா, கிரீஸ், ஹோண்டுராஸ், ஈரான், இத்தாலி, ஜப்பான், தென்கொரியா, மெக்சிக்கோ, நெதர்லாந்து, நைஜீரியா, போர்த்துக்கல், ரஷ்யா, ஸ்பெயின், சுவிட்சர்லாந்து, உருகுவே, அமெரிக்கா ஆகிய 32 அணிகள் உலக கோப்பையில் விளையாடவுள்ளன. இதில் போஸ்னியா உலக கோப்பையில் கால்பதிப்பது இதுவே முதல் முறையாகும்.

போட்டிகள் அனைத்தும் மனாஸ், போர்டலேஷா, நாட்டல், ரெசிபே, சல்வடார், குய்அபா, பிரேசிலியா, பெலோ ஹார்கோன்ட்டே, சாவ்பாவ்லோ, ரியோ டிஜெனிரோ, குரிடிபா, போர்ட்டோ அலெக்ரா ஆகிய 12 நகரங்களில் நடக்கின்றன.

ஏ, பி, சி, டி, இ, எப், ஜி, எச் என 8 பிரிவுகளுக்கு லீக் சுற்றுகளில் ஒவ்வொரு பிரிவிலும் மோதிக்கொள்ளும் தலா 4 அணிகள் முடிவு செய்யப்படும்.

அதன் பின்பு, விலகல் முறையில் நடைபெறும் காலிறுதிக்கு முந்தைய ஆட்டங்கள், காலிறுதி, அரையிறுதி, முடிவில் இறுதி ஆட்டம் என எல்லாமே சவால் நிறைந்தவை.

## முதல் அணி

கடந்த 1930 முதல் 2010 வரை என மொத்தம் நடைபெற்ற 19உலகக் கோப்பை தொடர்களிலும் பங்கேற்ற ஒரே அணி பிரேசில் மட்டும் தான். இப்போது 20ஆவது முறையாக இத்தொடரில் பங்கேற்கவுள்ளது.

உலகக் கோப்பை போட்டிகளின் போது, நடுவர் ஒருவர் சராசரியாக 19 கி.மீ., தூரம் ஓடுகிறார் என, அமெரிக்க செய்தி நிறுவனம் சி.என்.என். தெரிவித்துள்ளது. இருப்பினும், ஒவ்வொரு போட்டியிலும் 12.73 கி.மீ. தூரம் நடுவர் ஓடுவாராம்.

## முதல் ஹ ட்ரீக்

உலகக் கோப்பை போட்டிகளில் முதல் ஹாட்ரிக் கோல் அடித்த வீரர் அமெரிக்காவின் பெர்ட் பீட்நாடு. கடந்த 1930இல் நடந்த தொடரில் பராகுவே அணிக்கு எதிராக, இவர் இச்சாதனை நிகழ்த்தினார்.

## முதல் வீரர்

கால்பந்து, கிரிக்கெட் உலகக் கோப்பைத்தொடர்களில் பங்கேற்ற ஒரே வீரர் மேற்கிந்தியத்தீவுகள் அணியின் விவியன் ரிச்சர்ட்ஸ் தான். கடந்த 1974 உலகக் கோப்பை கால்பந்து தொடர் தகுதிச்சுற்று போட்டியில், ஆன்டிகுவா அணிக்காக விளையாடினார். பின், 1975, 1979 மற்றும் 1983இல், கிரிக்கெட் உலகக் கோப்பை தொடரில் பங்கேற்றார்.

## அதிகமான தோல்வி

வடக்கு அமெரிக்க நாடு மெக்சிக்கோ. கடந்த 1930 முதல் 2010 வரை என, 19 உலகக் கோப்பைத் தொடர்களில், 14இல் பங்கேற்றது. இதில் மொத்தம் விளையாடிய 49 போட்டிகளில், 24இல் தோற்றது. இதையடுத்து, உலகக் கோப்பைத் தொடர்களில் அதிகமான தோல்விகள் பெற்ற அணி என்ற வேதனையான சாதனை பெற்றது.

## ஐரோப்பா ஆதிக்கம்

இதுவரை மொத்தம் 19 உலகக் கோப்பைத் தொடர்கள் நடைபெற்றுள்ளன. இதில் ஐரோப்பிய அணிகள் 10 முறை, தென் அமெரிக்க அணிகள் 9 முறை கோப்பை வென்றன. மற்ற நான்கு கண்டங்களை (ஆசியா, ஆபிரிக்கா, ஓசியானா, வடக்கு மத்திய அமெரிக்க, கரீபிய நாடுகள்) சேர்ந்த எந்த அணியும் இதுவரை கோப்பை வென்றதில்லை.

## இரண்டு வீரர்கள் தான்

1958, 1962, 1966 மற்றும் 1970 என, தொடர்ந்து நான்கு உலகக் கோப்பைத் தொடர்களில் பங்கேற்ற வீரர்கள் என்ற பெருமை பிரேசிலின் பீலே, மேற்கு ஜேர்மனியின் உவே சீலெர் பெற்றனர்.

## வயது தடை அல்ல

மூத்த வயதில் கப்டனாக இருந்து, உலகக்கோப்பை கால்பந்து வென்றவர் என்ற பெருமை இத்தாலி அணியின் கோல் காப்பாளர் டினோ ஜோப்பிற்கு கிடைத்தது. கடந்த 1982இல் இவரது தலைமையில் கோப்பை வென்ற போது, டினோவுக்கு வயது 40.

## சூப்பர் பெக்கன்பர்

ஜேர்மனியின் பெக்கன்பருக்கு ஒரு சிறப்பு உண்டு. 1974இல் கப்டனாக இருந்து, அணிக்கு உலகக் கோப்பை பெற்றுத் தந்தார்.

பின், 1990இல் ஜேர்மனி அணிக்கு பயிற்சியாளராக இருந்து, கோப்பை வென்று அசத்தினார். கப்டன் மற்றும் பயிற்சியாளராக இருந்து கோப்பை கைப்பற்றிய ஒரே நபர் பெக்கன்பர் தான்.

## முதலும்... கடைசியும்

மேற்கு ஆபிரிக்க நாடு செனகல் 2002 உலகக் கோப்பைத் தொடரில் முதன் முறையாக பங்கேற்றது. நடப்பு சம்பியன் பிரான்சை முதல் போட்டியிலேயே வீழ்த்திய இந்த அணி, காலிறுதியில் துருக்கியிடம் தோற்று வெளியேறியது. இதன் பின் செனகல் அணி உலகக் கோப்பைத் தொடருக்கு தகுதி பெறவே இல்லை

## கோப்பையின் உலகப் பயணம்

உலகக் கோப்பை கால்பந்து போட்டியின் இறுதி ஆட்டத்தில் வெல்லும் அணிக்கு வழங்கப்படும் தங்கக்கோப்பை 2006ஆம் ஆண்டு முதல் முறையாக பல்வேறு நாடுகளுக்கு பொதுமக்களின் பார்வைக்காக கொண்டு செல்லப்பட்டது. அப்போது ஜேர்மனியில் நடைபெற்ற போட்டிக்காக உலகக்கோப்பை 28 நாடுகளின் 31 நகரங்களுக்கு கொண்டு செல்லப்பட்டது. அதன்பின்பு 2010இல் தென்னாபிரிக்காவில் நடைபெற்றபோது 84 நாடுகளில் 130 நகரங்களுக்கு கொண்டு போகப்பட்டது. தற்போதைய உலகக் கோப்பை 88 நாடுகளுக்கு கொண்டு செல்லப்பட்டு பொதுமக்களின் பார்வைக்காக வைக்கப்படவிருக்கிறது.

உலகக்கோப்பை போட்டியின் பிரதான சுற்றில் அதிக தடவை நுழைந்த அணி என்ற பெருமை பிரேசிலுக்கு மட்டுமே உண்டு. 1930ஆம் ஆண்டு முதல் தற்போது நடைபெறவிருக்கும் போட்டிவரை அனைத்திலும் (20 உலகக் கோப்பைகள்) பங்கேற்க பிரேசில் தகுதி பெற்றுள்ளது. இதற்கடுத்து இத்தாலி, ஜேர்மனி நாடுகள் தலா 17 உலகக் கோப்பைகளில் பங்கேற்க தகுதியை அடைந்துள்ளன. ஆர்ஜென்ரீனா 15 தடவையும், மெக்சிக்கோ 14 தடவையும் உலகக்கோப்பையின் பிரதான சுற்றுக்கு முன்னேறியுள்ளன.

## 19 வெற்றியாளர்கள்

1930ஆம் ஆண்டு முதல் 4 வருடங்களுக்கு ஒரு தடவை என இதுவரை 19 உலகக் கோப்பை கால்பந்து போட்டிகள் நடைபெற்றுள்ளன. 1942 மற்றும் 1946ஆம் ஆண்டுகளில் இரண்டாம் உலகப்போர் காரணமாக போட்டிகள் நடைபெறவில்லை.

இதில் அதிகபட்சமாக பிரேசில் 5, இத்தாலி 4, ஜேர்மனி 3, ஆர்ஜென்ரீனா, உருகுவே தலா 2, இங்கிலாந்து, பிரான்ஸ், ஸ்பெயின் தலா 1 முறை வெற்றி கண்டுள்ளன.

6ஆவது தடவையாக தங்களது நாட்டில் நடக்கும் போட்டியை வெற்றிகொள்ள வேண்டும் என்பதில் பிரேசில் தீவிரமாக உள்ளது. பிரேசிலின் வெற்றி ஆண்டுகள்: 1958, 1962, 1970, 1994, 2002.

போட்டியை நடத்தும் நாடுகள் உலகக்கோப்பை வெல்வது சற்று சிரமமான காரியம். எனினும் இந்த சாதனைக்குரிய நாடுகளாக உருகுவே (1930), இத்தாலி (1934), இங்கிலாந்து (1966), மேற்கு ஜேர்மனி (1974), ஆர்ஜென்ரீனா (1978), பிரான்ஸ் (1998) ஆகியவை திகழ்கின்றன.

## வேகமான ரெட் கார்ட்

ஸ்காட்லாந்து அணிக்கு எதிரான ஆட்டத்தில் (1986) உருகுவே வீரர் ஜோஸ் பட்டிஸ்டா, போட்டி ஆரம்பமாகி 56 வினாடியில் ரெட் கார்ட் பெற்றார். உலக கோப்பை போட்டிகளில், மிக வேகமாக ரெட் கார்ட் பெற்ற வீரர் இவர் தான்.

## ராசியில்லாத அணிகள்

உலகக் கோப்பைத் தொடர்களில் நெதர்லாந்து, ஹங்கேரி, செக்கோஸ்லோவாகியா அணிகள் வெற்றிகரமான அணிகளாக செயற்பட்டுள்ளன. இந்த அணிகள் தலா இரு முறை இறுதிப் போட்டிக்கு முன்னேறிய போதும், ஒரு முறை கூட கோப்பை வெல்லவில்லை.

## இரண்டு முறை

இதுவரை நடந்த 19 உலகக் கோப்பைத் தொடர்களில் இரண்டு இறுதிப் போட்டிகளில் மட்டும்

# அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு திட்டமிடல் துறையில் பயிற்சிகள்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண அரச திணைக்களங்கள், அமைச்சுக்கள் மற்றும் உள்ளூராட்சி சபைகளில் கடமையாற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு திட்டமிடல், குறிக்கோள் நோக்கிய திட்டமிடல் மற்றும் ஏனைய துறைகளில் விசேட பயிற்சி வழங்கப்படும்.

பட்டதாரி உத்தியோகத்தர்களுக்கான அபிவிருத்தி உத்தியோகத்தர்களே எதிர்காலத்தின் சிறந்த திட்டமிடலாளர்கள் எனவே சிறந்த பயிற்சியின் ஊடாக வினைத்திறனான பயனை அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஊடாகப் பெறலாம்.

இவ்வாறு வடமாகாண பிரதிப் பிரதம செயலாளர் (திட்டமிடல்) ஆர்.உமாகாந்தன் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் உள்ள 40 அபிவிருத்தி அலுவலர்களுக்கு திட்டமிடல் துறையில் முகாமைத்துவ அபிவிருத்திப் பயிற்சித் திணைக்கள அதிகாரி பொ.வாகீசன் தலைமையில் இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்ட பிரதிப்பிரதம செயலாளர் ஆர். உமாகாந்தன் தெரிவிக்கையில்,

அடுத்த பயிற்சி விரை வில் கிளிநொச்சி அல்லது வவு னியா மாவட்டங்களில் வதிவிட பயிற்சியாக நடாத்தப்படும்.

எனவே பட்டதாரி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் பயிற்சிகளை தொடர்ச்சியாக பெற்று கழகத்திற்கு பயனுள்ள சேவையை ஆற்றக்கூடியவர்களாக மாறவேண்டும் என்றார்.

மேற்படி நிகழ்வில் முன்னாள் வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளரும் மோட்டார் போக்குவரத்து ஆணையாளருமான எவ்.ஜோன்ஸ், வடமாகாண கிராமஅபிவிருத்தி பணிப்பாளர் பெலிசியன், உதவித் திட்டமிடல் பணிப்பாளர்களான துஷ்யநதன, சர்வேஸ்வரன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (92)

# ஆதரவற்றோரின் தொகை அதிகரிப்பால் அசௌகரியங்களுக்குள்ளாகும் பயணிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். பேருந்துத் தரிப்பிடப்பகுதியில் ஆதரவற்றோரின் நடமாட்டம் காணப்படுவதாகவும் இதனால் அந்தப்பகுதிகளில் தமது தேவைகளை நிறைவேற்றச் செல்வோர் பல அசௌகரியங்களை எதிர்கொள்வதாக கவலை தெரிவித்துள்ளனர்

பேருந்துகளில் அடிக்கடி ஏறி பயணிகளிடம் உதவிகேட்கும் இவர்கள் தமது அன்றாட பயணத்திற்கும் இடையூறு விளைவிக்கின்றனர். இத்தகையோர் தங்களுக்குள்ளே முரண்பட்டு தகாதவார்த்தைப் பிரயோகங்களையும் பயன்படுத்துகின்றனர். அத்துடன் பேருந்துத் தரிப்பிடப் பகுதியினையும் அசுத்தப்படுத்தி விட்டுச் செல்கின்றனர்.

குறிப்பாக 786,785 வழித்தடக் கட்டடப்பகுதியிலே இவர்களின் செயற்பாடுகள் அதிகரித்துக காணப் படுவதுடன் அப்பகுதி சுகாதாரமற்ற நிலையில் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது

இவர்கள் வெற்று மதுப்போத்தல்கள் மற்றும் பொலித்தீன், உணவுகளின் மிகுதிகள் எனப் பல கழிவுப்பொருட்களை அப்பகுதியில் வீசி விட்டுச் செல்கின்றனர்.

இதனால் போக்குவரத்தினை மேற்கொள்ளக் காத்திருக்கும் பயணிகள் சிரமத்துக்குள்ளாவதுடன் துர்நாற்றமும் வீசுகின்றது எனவும் தெரிவிக்கின்றனர். (85)

# விண்ணப்பங்கள் கோரல்

யாழ்.மாவட்டத்தில் தமிழ் மொழிமூலம் விவாக,பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

யாழ்ப்பாணம்,வேலணை, ஊர்காவற்றுறை, காரைநகர்,சங்கானை, கோப்பாய் பருத்தித்துறை ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுக்கு ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

வயது 30 - 60 இற்கு உட்பட்ட,விவாகம் செய்த நிரந்தர முகவரியையும் குறிப்பிடத்தக்க சொத்துக்களுக்கு உரிமையாளராகவும் சமூகத்தில் நன்மதிப்பும் பெற்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் யூலை 07ஆம் திகதிக்கு முன்பாக பதிவுத்தபால் மூலம் பதிவாளர் நாயகம் திணைக்களம், 234/A.3 டென்சில் கொப்பேகடுவமாவத்தை, பத்திரமுல்லை என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

விண்ணப்பப்படிவங்களை மாவட்ட செயலாளர் (அரசாங்கஅதிபர்) அலுவலகத்திலும் காணி மற்றும் மாவட்ட பதிவாளர் அலுவலகத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.


◆ ◆ ◆

சமூக சேவைகள் அமைச்சின் தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தில் பதவி வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

சிரேஷ்ட விரிவுரையாளர்கள், சிரேஷ்ட பயிற்சி உத்தியோகத்தர் சிரேஷ்ட ஆய்வுகூட உத்தியோகத்தர்,ஆங்கில போதனாசிரியர், மொழிபெயர்பாளர், (சிங்களம் / ஆங்கிலம்) கட்புல செவிப் புலநுட்பவியலாளர் ஆகிய பதவிகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

வயது 22- 45இற்கு உட்பட்ட, பல்கலைக்கழகத்தில் பதவிகளுக்கு அமைய பாடங்களில் பட்டம் பெற்றவர்கள் யூலை 4ஆம் திகதிக்கு முன்னர் பணிப்பாளர் நாயகம், தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம், இல.488/ஏ நாவல வீதி, இராஜகிரிய என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பும் போது, கடிதஉறையின் இடது மேல்மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிடல் வேண்டும்.

பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற் குட்பட்டதுமாகும். பதவிவெற்றிடம் நாவல இராஜகிரியவில் அமைந்துள்ள பிரதான அலுவலகத்தில் மட்டுமே கட்புல செவிப்புல நுட்பவியலா ளர் மட்டும் க.பொ.த (சா/த) (உ/த) பரீட்சையில் சித்தி பெற்றவர்கள் தொழில்நுட்ப திறன் (NVQ) பெற்றிருத்தல் வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது, (105)



அச்சுவேலி, தம்பாலை இந்து மயானத்தில் எரியூட்டப்படும் இடத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள கொட்டகையினைக் காணலாம். (85)

# தலைமைப் பதவியிலிருந்து சுப்பிரமணியம் இராஜினாமா

(வடமராட்சி)

வடமராட்சி சமூக பொருளாதார மேம்பாட்டுச் சபையில் (SEDO) தலைமைப் பதவியிலிருந்தும வலயம் III தலைமைப் பதவியிலிருந்தும் கடந்த 31ஆம் திகதியிலிருந்து வெ.சுப்பிரமணியம் சுய விருப்பின் பேரில் இராஜினாமா செய்துள்ளார்.

இவர் இப்பதவியில் இருந்து விலகியுள்ளதால் இச்சங்கத்திற்கு பின்னடைவு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.(01)

# ஆயுர் வேதம்



## வாந்திக்கு... பானகம்!

வாந்தியை நிறுத்துவதற்கு சிகிச்சை செய்யுமுன்னர் வாந்தி ஏற்படுவதற்கான காரணத்தை முதலில் கவனிக்க வேண்டும். நெஞ்சுக்கட்டு, மார்புச்சளி, வயிற்றில் அதிகமான அமிலச் சுரப்பு, பித்தப் பையில் சுரப்பு அதிகம், மலச்சிக்கல் முதலியவற்றினால் வாந்தி உண்டாகும்.

வாந்தியில் கபம் அதிகமா? பித்தம் அதிகமா? என்பதை அறிந்து கொள்வது அவசியம். கபதோஷத்தின் அளவு வயிற்றில் அதிகமிருந்தால் வாந்தி வெள்ளை நுரையுடன் உணவுடன் சேர்ந்து கெட்டியாக வெளியேறும். அதை வெளியேற்ற அரிசித் திப்பிலி, இந்துப்பு, வசம்பு, மலங்காரைப் பூ இவற்றைச் சூரணம் செய்து, தேனில் குழைத்து நாக்கில் தடவி, கொஞ்சம் வெந்நீர் புகட்டினால் உடனே வாந்தியாகி விடும்.

இந்த மருந்துகள் அனைத்தும் சேர்ந்து சுமர் ஐந்து கிராம் முதல் எட்டு கிராம் வரை எடுத்துக் கொள்ளலாம். மருந்தின் அளவிற்கு இருமடங்கு தேன் குழைத்துக் கொள்ளுதல் நல்லது.

இதனால் இந்த வாந்தியின் மூலமாக வயிற்றிலுள்ள கபதோஷம் விலகி விடும். துளசி, வெற்றிலை, கற்பூர ஓமவல்லி இவற்றின் தனிச்சாற்றை தேனுடன் கலந்தும் கொடுக்கலாம். கபத்தினால் ஏற்படும் வாந்தி இதன் மூலம் நிர்த்தியாகும்.

வாந்தியில் புளிப்பு வாடை, மஞ்சள், பச்சை நிறத்தோற்றம் இருப்பின் பித்தக் கோளாறு உள்ளது என்பதை ஊகித்து அறியலாம். வாந்தியானது, நுரையின்றி கொஞ்சம் நீர்க்க இருக்கும், வாடையும் கடுமையாக இருக்கும். அதில் சிறு பேதிக்கு மருந்து கொடுத்தல் நல்லது.

இதற்கு கோரோசனை மாத்திரை அல்லது அவிபத்தி சூரணம் விசேஷம். பாலில் கோரோசனையைக் குழைத்துத் தரலாம். ஒருதரம் வாந்தி உண்டு பண்ணி மேல் குடலையும் சுத்தம் செய்து மலப்ரவிருத்தி மூலம் கீழ்குடலையும் சுத்தம் செய்யும் அவிபத்தி சூரணம் சுமர் 2 1/2 கிராம் அளவில் எடுத்து ஐந்து மில்லி தேன் குழைத்து நக்கிச் சாப்பிட்டால் நன்றாக பேதி ஏற்பட்டு அதனுடன் பித்தமும் வெளியேறிவிடும். இதில் ஏதேனும் ஒன்றைச் செய்தால் போதுமானது.

மயிலிறகின் முடி பாகத்தை கரியாக்கி அதன் தூளைக் குழைத்துக் கொடுத்தல் மிகப் புராதனமான குடும்ப வைத்தியமுறையாகும். சுமர் ஆறு அரிசி எடை மயில் தோகைக் கருக்குடன் அரிசித்திப்பிலி சூரணம் இரண்டு அரிசி எடை சேர்த்துக் கொடுத்தல் கப வாந்திக்கும், தான்றிக்காயின் தோல் சூரணம் நான்கு அரிசி எடை சேர்த்துக் கொடுத்தல் பித்த வாந்திக்கும் மிகவும் நல்லது. இந்த மருந்து வாந்தியுடன் விக்கலையும் போக்கக் கூடியது.

வாந்தியை நிறுத்தவும், பசியின்மையைப் போக்கவும், நா வறட்சி, நாக்கில் ருசியின்மை, வாயில் தித்திப்பு, கசப்பு, புளிப்பு உணரப்படுதல், நாக்கில் நீர் ஊறுதல், உமட்டுதல் போன்றவற்றுக்கு, தோல் நீக்கிய இஞ்சிச்சாறு 125 மில்லி லீற்றரை நன்கு தெளிய வைத்து, எலுமிச்சம்பழச்சாறு 250 மி.லீற்றருடன் சேர்த்து, 750 கிராம் சீனியும் கலந்து மெல்லிய துணியால் வடிகட்டி அடுப்பி லேற்றிக் காய்ச்சவும். இளம்பாகாக வரும்போது கீழே இறக்கி ஆற வைத்து ஏலக்காய்த்தூள் ஒரு கிராம், பச்சைக் கற்பூரம் ஒரு சிட்டிகை, குங்குமப்பூ ஒரு சிட்டிகை இவற்றை நன்கு அரைத்து பானகத்தில் சேர்த்து கலக்கிவிடவும். இதற்கு ஜம்பீராதிபானகம் என்று பெயர்.

ஒரு நாளில் இரண்டு, மூன்று வேளை சாப்பிடலாம். வேளைக்கு ஒன்றிரண்டு தேக்கரண்டி வீதம், தண்ணீர் கலந்தோ கலக்காமலோ, உணவிற்கு முன்போ, பின்போ நன்கு சுவைத்துச் சாப்பிடக் கொடுக்கவும். இப்பானகம் பல்வேறு வகையில் உபயோகிக்கக் கூடியது.

கோடைகாலத்தில் பலருக்கும் ஏற்படும் வாயில் கசப்பு, புளிப்பு, புளித்த ஏப்பம், வயிறு நிரம்பி இருப்பது போன்ற உணர்ச்சி, உணவில் வெறுப்பு, கண், கை, கால்களில் லேசாக எரிச்சல், இவற்றுடன் ஏற்படும் அஜீரணத்துக்கும், தலைச்சுற்றுதல், மயக்கம் போன்ற கோடைகால உபாதைகளுக்கு உணவிற்குப் பிறகு 2 –3 வேளை இதைச் சாப்பிட மிகவும் நல்லது.

உணவைச் செரிக்க உதவும் புளிப்பு திரவங்கள் சரியாகச் சுரக்காமலும், ஈரல் சரியாக வேலை செய்யாமலும் ஏற்படும் அஜீரணத்துக்கு உணவிற்கு ஐந்து, பத்து நிமிடங்களுக்கு முன்னர் இந்தபானகத்தைச் சாப்பிட்டுப், உணவை ஏற்க அந்த அஜீரணம் மாறிவிடுகிறது.

கர்ப்பிணிக்கு கருத்தரித்தது முதல் சில மாதங்களுக்கு மசக்கையால் ஏற்படும் இனந்தெரியாத கலக்கம், உமிழ்நீர் சுரத்தல், குமட்டல், வாந்தி, பசிக் குறைவு முதலிய உபத்திரவங்களைப் போக்குவதற்கும் ஏற்ற சிறந்த மருந்து.

சிறுபிள்ளைகளின் வாந்தியை நிறுத்தக் கூடிய வில்வாதி லேகியம், ஜீரக வில்வாதி லேகியம், ஜீரகாரிஷ்டம், பிப்பல்யாஸவம், மாதீபல இரசாயனம் போன்ற ஆயுர் வேத மருந்துகளை மருத்துவரின் ஆலோசனைப்படி சாப்பிட்டு வர நிறை வான பலனை விரைவாகப் பெறலாம்.

# இலங்கைப் பிரச்சினையில் இந்தியாவிடம் மாற்றமிருக்காது

- எம்.எஸ்.எம். ஐயூப் கட்டுரையிலிருந்து.



இதற்கு முன்னர் இந்திய பிரதமர்கள் தமது பதவிப் பிரமாண வைபவங்களின் போது செய்ததற்கு மாறாக, மோடி தமது பதவிப் பிரமாண வைபவத்திற்கு தெற்காசிய பிராந்திய ஒத்துழைப்பு அமைப்பு (சார்க்) நாடுகளின் தலைவர்களுக்கு அழைப்பு விடுத்தார்.

தேர்தலில் தமது பேரம் பேசும் சக்தியை இழந்த தமிழக அரசியல் கட்சிகளுக்கு, தாமும் ஒரு சக்தி என்று காட்ட இந்த அழைப்பு சிறந்த சந்தர்ப்பமாகியது. தமிழகத்தில் 39 தொகுதிகளில் 37 தொகுதிகளை வென்ற அ.தி.மு.க.வும், பா.ஜ.க அறுதிப் பெரும்பான்மை பெற்றுள்ளதால் பேரம் பேசும் சக்தியை இழந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

அக்கட்சிகள் மோடியின் அழைப்பின்படி, இலங்கை ஜனாதிபதி இந்தியாவுக்கு வருவதை எதிர்த்தனர். ஜெயலலிதா, மோடியின் பதவிப்பிரமாண வைபவத்தையே பகிஷ்கரித்தார். தமிழகத்தில் பல இடங்களில் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன. பா.ஜ.க.வுடன் கூட்டணி அமைத்து போட்டியிட்ட வைகோ, புதுடில்லியில் நடத்திய ஆர்ப்பாட்டமொன்றின் போது கைது செய்யப்பட்டார்.

ஆனால், மோடி அந்த எதிர்ப்புக்களை திரும்பிக்கூட பார்க்கவில்லை. அதேவேளை, தமிழகத் தலைவர்களை அவமதிப்பதற்காக மோடி இந்த அழைப்பை விடுக்கவும் இல்லை. தமது இமேஜை மேம்படுத்திக்கொள்வதே அவரது பிரதான நோக்கம்.

இந்தியாவும் பாகிஸ்தானும் நீண்ட காலமாக எதிரிகளாக கருதப்படும் நாடுகளாகும். இந்த நிலையில் இந்தியாவின் எதிரி நாடாக பலரால் கருதப்படும் பாகிஸ்தானின் பிரதமரை அழைப்பது, அதிலும், தம்மை பலர் ஒரு முஸ்லிம் விரோதியாக கருதும் நிலையில் பாகிஸ்தான் பிரதமரை அழைப்பது, சர்வதேச ஊடகங்களின் முன் அவருடன் கை குலுக்குவது, அதன் மூலம் தாம் ஊடகங்களினால் சித்தரிக்கப்பட்ட மோடி அல்ல என்று காட்டுவதே மோடியின் நோக்கமாகும்.

ஆனால், அதற்காக பாகிஸ்தான் பிரதமரை மட்டும் அழைத்தால், அது போலி நாடகம் போல் தென்படலாம். எனவே தான் அவர் சகல சார்க் நாடுகளினதும் தலைவர்களுக்கு அழைப்பு விடுத்தார். உண்மையிலேயே மோடியின் பதவிப் பிரமாண வைபவத்தின் போது இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முக்கிய பிரமுகராக ஊடகங்களின் கவனத்தை ஈர்த்துக்கொள்ளவில்லை. அவரும் அங்கு மற்றொரு சார்க் தலைவர் மட்டுமே.

ஆனால், பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷரீபின் இந்திய விஜயம் சர்வதேச ஊடகங்களுக்கு முக்கிய செய்தியாகியது. மோடி, ஷரீபை வரவேற்று அவருடன் கை குலுக்குவதை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கைகுலுக்கல் (historic hand-shake) என்றே பி.பி.சி. தொலைக்காட்சி வர்ணித்தது. இலங்கை ஜனாதிபதி அந்த இடத்தில் இல்லாதிருந்தாலும் வித்தியாசம் எதுவும் தென்பட்டு இருக்காது. ஆனால், ஷரீப் அங்கு செல்லாதிருந்தால் அது சர்வதேச ஊடகங்களின் கவனத்தை வெகுவாக ஈர்த்துக் கொண்டிருக்கும்.

மோடியின் நோக்கத்தை தமிழகத் தலைவர்கள் சரியாக புரிந்துகொள்ளவில்லை. அவர் இலங்கை ஜனாதிபதிக்கு முக்கியத்துவம் அளிக்க இந்த வைபவத்தை ஏற்பாடு செய்யவில்லை. இதனை புரிந்துகொள்ளாமலும் மோடியின் பலத்தை புரிந்துகொள்ளாமலும் அவசரப்பட்டு எதிர்ப்பு தெரிவித்ததில், தமிழக தலைவர்கள் அநாவசியமாக மூக்குடைபட்டுக் கொண்டார்கள்.

மோடிக்கு மற்றொரு நோக்கமும் இருந்தது. தமது ஆட்சியில் இந்திய வெளியுறவுக் கொள்கையில் பாரிய மாற்றம் ஏதும் இருக்கப்போவதில்லை என்பதை காட்டுவது தான் அவரது இந்த இரண்டாவது நோக்கமாகும்.

தமக்கேற்பட்டு இருக்கும் அவப்பெயரை அகற்றிக் கொள்ள, மோடி தமது பதவிப் பிரமாண வைபவத்தை வித்தியாசமான முறையில் ஏற்பாடு செய்திருந்த நிலையிலும் தேர்தலில் தோல்வியடைந்த காங்கிரஸ் கட்சியின் தலைவர்கள் எவ்வித தயக்கமுமின்றி அந்த வைபவத்தில் கலந்துகொண்டனர். இலங்கையில் இது போன்றதோர் நிலைமையை எதிர்பார்க்க முடியாது.

பதவிப் பிரமாண வைபவத்தின் பின்னர் மோடிக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இடையிலான பேச்சுவார்த்தையின் போது மோடி, 13ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை வலியுறுத்திய போது பலர் வியப்படைந்தனர்.

ஆனால், வரலாற்றை ஆராய்ந்தால் இதில் வியப்படைவதற்கு எதுவும் இல்லை. 1987 ஆம் ஆண்டு இலங்கை- இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் போது, பாரதிய ஜனதாக் கட்சி சிறிதோர் அமைப்பாக இருந்தது. அக்காலத்திலும் அக்கட்சி இந்த ஒப்பந்தத்தை விமர்சிக்கவில்லை.

1998ஆம் முதல் 2004ஆம் ஆண்டு வரை, இந்தியாவில் பா.ஜ.க ஆட்சியே இருந்தது. அக் காலத்தில் அக் கட்சியும், இலங்கைத் தலைவர்களுடனான பேச்சுவார்த்தைகளின் போது காங்கிரஸ் கட்சித் தலைவர்கள் கைச்சாத்திட்ட இலங்கை- இந்திய ஒப்பந்தத்தை பூரணமாக அமுலாக்க வேண்டும் என்றே வலியுறுத்தினர்.

2012 ஏப்ரலில், இந்திய நாடாளுமன்ற சர்வ கட்சித் தூதுக் குழுவொன்று வட பகுதி நிலைமையை ஆராய்வதற்கென, இலங்கைக்கு விஜயம் செய்தது. தற்போது மோடியின் அரசாங்கத்தில் வெளியுறவுத்துறை அமைச்சராக நியமிக்கப்பட்டு இருக்கும் சுஷ்மா ஸ்வராஜே அந்தத் தூதுக் குழுவுக்கு தலைமை தாங்கினார். அப்போது, அவர் பா.ஜ.க தலைவர்களில் ஒருவராகவும் இந்திய நாடாளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவியாகவும் இருந்தார்.

அவர் இந்த விஜயத்தின் போது இலங்கை தொடர்பான காங்கிரஸ் அரசாங்கத்தின் எந்தவொரு கொள்கையையோ அல்லது எந்தவொரு நடவடிக்கையையோ விமர்சிக்கவில்லை. மாறாக, அவர் அவற்றை வலியுறுத்தியே பேசினார். தமது விஜயத்தின் இறுதியில் அவர் ஒரு அறிக்கையை வெளியிட்டார். அதிலிருந்த இரண்டு வசனங்களை இங்கு கவனத்தில் கொள்வது பொருத்தமாகும்.

“இலங்கை அரசாங்கம் இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொண்டு, அர்த்தமுள்ள அதிகார பரவலாக்கல் திட்டமொன்றின் கீழ், முறையான அரசியல் தீர்வொன்றை காண்பதை நாம் எதிர்பார்க்கின்றோம்.

13ஆவது அரசியலமைப்புத் திருத்தத்திற்கு அப்பால் சென்ற திட்டமொன்றின் கீழ், இந்த நோக்கத்தை அடைவதாக எமக்கு கடந்த காலத்தில் உறுதியளிக்கப்பட்டது... என்பனவே இந்த இரு வசனங்களாகும்.

அன்று காங்கிரஸ் அரசாங்கத்தின் தூதுக் குழுவொன்று இலங்கைக்கு வந்திருந்தாலும், அந்தத் தூதுக் குழுவும் தமது விஜயத்தின் இறுதியில் இதே கருத்தை தான் வெளியிட்டு இருக்கும். தமது அறிக்கையில் சுஷ்மா நாம் என்று குறிப்பிடும் போது பா.ஜ.கவை குறிப்பிடவில்லை, இந்தியா என்ற நாட்டையே குறிப்பிட்டார். ஆனால், அவர் தமது கட்சிக் கொள்கைகளுக்கு முரணாக கருத்து வெளியிடவும் இல்லை.

எனவே, இரண்டாண்டுகளுக்கு முன்னர் 13 பிளஸ் வேண்டும் என்று கோரிய பா.ஜ.க, இன்று அதற்கு மாறாக நடந்து கொள்ள எந்த நியாயமும் இல்லை. சுருக்கமாக கூறுவதாக இருந்தால் 1980களில் பா.ஜ.க உருவானது முதல் இன்று வரை அக் கட்சி, இலங்கை விடயத்தில் காங்கிரஸ் கட்சி மேற்கொண்ட எந்தவொரு முடிவையோ அல்லது எந்தவொரு திட்டத்தையோ விமர்சிக்கவில்லை. எதிர்க்கவும் இல்லை.

எனவே, மோடியின் தலைமையில், இலங்கை விடயத்தில் இந்தியா மாறும் என எதிர்பார்க்க முடியாது. அதாவது மோடியின் தலைமையிலும் இலங்கை விடயத்தில் இந்தியா இந்தியாவே தான்.

## “நொன்-ஸ்ரிக்” பாத்திரம் பயன்படுத்தும் போது...



- நொன்-ஸ்ரிக் பாத்திரத்துக்கு குறைந்த மிதமான சூடு போதுமானது. மிக அதிகமான சூடு தேவையில்லை.
- சமைக்கும் பொருள் எதுவுமின்றி நொன்-ஸ்ரிக் பாத்திரம் தீயின் மேல் இருக்கக்கூடாது. அப்படி அதிக நேரம் வைத்தால் பூசப்பட்ட கோட்டிங் பாழாகிவிடும்.
- நொன்-ஸ்ரிக் பாத்திரத்தை மென்மையான துணி அல்லது ஸ்பொன்ச் போன்றவற்றால் துடைத்தல் போதுமானது.
- இந்தப் பாத்திரத்தை உபயோகிக்கும் முன்பும் பின்பும் கண்டிப்பாகச் சுத்தம் செய்ய வேண்டும் என்பதை மறவாதீர்கள்.
- நொன்-ஸ்ரிக் பாத்திரம் சுத்தம் செய்யும் போது சவர்க்காரத் தூள் மட்டும்தான் உபயோகிக்க வேண்டும். க்ளீனிங் பவுடர் பயன்படுத்தக் கூடாது.
- கூர்மையான உலோகக் கரண்டி மற்றும் கத்தியை நொன் -ஸ்ரிக் பாத்திரத்தில் பயன்படுத்தக் கூடாது. மரத்தினாலான கரண்டியைப் பயன்படுத்துவதுதான் நல்லது.
- நொன்-ஸ்ரிக் பாத்திரங்களை மற்ற பாத்திரங்களோடு உரசல் ஏற்படாமல் அதற்கென உள்ள ஆணியில் மாட்டி பாதுகாக்க வேண்டும்.

## 2 கோடி 70 இலட்சம் தரவிறக்கம்!



மைக்ரோசொப்ட் நிறுவனம், அப்பிள் நிறுவனத்தின் ஐ-பாட் சாதனத்தில் பயன்படுத்த, தன் ஒபீஸ் தொகுப்பினை வடிவமைத்து (Word, Excel and PowerPoint for iPad) அப்பிள் ஸ்டோரில் வெளியிட்டது. வெளியிடப்பட்ட 46 நாட்களில் 2 கோடியே 70 இலட்சம் பேர் இதனைத் தரவிறக்கம் செய்து பயன்படுத்தி வருகின்றனர். அறிமுகமான முதல் வாரத்தில், இந்த தொகுப்பு 1 கோடியே 20 இலட்சம் பேரால் இறக்கிப் பயன்படுத்தப்பட்டது. இதனைப் பயன்படுத்தி, ஐபாட்டில் ஒபீஸ் டொகுமெண்ட்களை உருவாக்கி திருத்தலாம். ஐபாட்டில் அதிகம் பயன்படுத்தப்படும் வேர்ட் ப்ரொசசராக, ஒபீஸ் தொகுப்பின் வேர்ட் உள்ளது. கூகுள் டொக்ஸ் பயன்படுத்தப்படுவதனைக் காட்டிலும் இதுவே அதிகம் பயன்படுத்தப்படுகிறது. ஐபாட் சாதனத்திற்கென அதிகம் தரவிறக்கம் செய்யப்பட்ட அப்ளிகேஷன்களில், இது நான்காவது இடத்தினைப் பெற்றுள்ளது. எக்ஸெல் மற்றும் பவர்பொய்ன்ற் முறையே 22 மற்றும் 26 ஆவது இடத்தைக் கொண்டுள்ளன. இதனைப் பயன்படுத்த, பயனாளர் ஒருவர் ஒபீஸ் 365 பயனாளராகப் பதிவு செய்திருக்க வேண்டும். இந்த வரையறை ஒபீஸ் தொகுப்பின் புகழைக் கெடுப்பதாக அனைவரும் கருதுகின்றனர்.

# சிரியாவில் 3 ஆண்டுகளில் கொல்லப்பட்டவர்கள் ஒரு இலட்சத்து அறுபத்தி இரண்டாயிரம் பேர்!



– அஹமத் –

சிரியாவில் ஜனாதிபதி பஸார் சி ஆஸாத்தின் (Bashar Assad) அரசுக்கு எதிராக 2011 மார்ச்சில் மேற்கத்தைய ஆதரவு பெற்ற கிளர்ச்சிக்காரர்கள் போரை ஆரம்பித்த பின்னர், இதுவரையான 3 ஆண்டுகளில் 1,62,402 பேர் கொல்லப்பட்டுள்ள தாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இத்தொகையில் பெரும்பாலானோர்கள் சாதாரண அப்பாவிப் பொதுமக்கள். ஏனையோர் பஸாரின் படைவீரர்கள், கிளர்ச்சிக்காரர்கள் ஆவர்.

கொல்லப்பட்டவர்களில் 8,607 குழந்தைகளும், 5,586 பெண்களும் உள்ளடங்குவர் என அந்தத் தகவல் மேலும் கூறுகிறது. பாருங்கள், பெண்களைவிடக் குழந்தைகள் கூடுதலாக இருக்கின்றனர்!

அத்துடன் இந்த உள்நாட்டு யுத்தத்தால் 6.5 மில்லியன் (65 இலட்சம்) மக்கள் தமது வீடுகளை விட்டு வெளியேறியுள்ளனர்! இதுதவிர 2.7 மில்லியன் (27 இலட்சம்) மக்கள் நாட்டைவிட்டே வெளியேறி அயல்நாடுகளில் தஞ்சம் புகுந்துள்ளனர். அந்த நாடுகளில் அகதி முகாம்களில் வாழும் இந்த மக்களுக்கு போதிய உணவு, தண்ணீர், சிறுவர்களுக்கான பால்மா, கழிப்பறை வசதி, மருத்துவ வசதி, கல்வி - கலாசார வசதிகள் என்பன இல்லாமல் அவர்கள் பெரிதும் அல்லலுறுகின்றனர்.

ஜனாதிபதி ஆஸாத்தின் 30 வருட சர்வாதிகார ஆட்சிக்கு முடிவுகட்டுவதற்காகப் போராடுவதாக கிளர்ச்சிக்காரர்கள் சொல்லிக்கொண்டாலும், அவர்களுக்குப் பின்னால் ஈராக்கில் லிபியாவில் செய்தது போல மேற்கத்தைய நாடுகள் இருப்பது இரகசியமானதல்ல.

ஆனால் இதில் ஒரு வேடிக்கை என்னவென்றால், ஆஸாத்துக்கு எதிராகப் போராடுபவர்களில் எதிரும் புதிருமாக மேற்கத்தையப் பாணியில் ஜனநாயகம் பேசுபவர்களும், மேற்கத்தைய நாடுகளால் தொடர்ந்து வேட்டையாடப்பட்டு வரும் அல்கைடா இயக்கத்தினரும் ஒன்றாகக் கைகோர்த்து இருப்பதுதான். அதாவது "எதிரிக்கு எதிரி நண்பன் என்பது போல". இருந்தாலும் கிளர்ச்சிக்காரர்கள் தமக்குள்ளேயே மோதிக்கொள்ளும் சம்பவங்கள் அண்மைய காலங்களில் அதிகரித்து வருகின்றன.

இதுதவிர, ஆஸாத்துக்கும் அவரை எதிர்த்துப் போராடுபவர்களுக்கும் இடையே தீவிரமான மத முரண்பாடும் இருக்கின்றது. ஆஸாத் அலவிற் (Alawite) என்ற முஸ்லிம் பிரிவைச் சேர்ந்தவர். கிளர்ச்சிக்காரர்கள் சுன்னி (Sunni) என்ற முஸ்லிம் பிரிவைச் சேர்ந்தவர்கள். இந்த முரண்பாடு பல அரபு மற்றும் இஸ்லாமிய நாடுகளில் பரவலாகக் காணப்படுகின்றது. அந்த முரண்பாட்டையே மேற்கத்தைய சக்திகள் தமக்குச் சாதகமாகப் பயன் படுத்தி வருகின்றன. மேற்கு நாடுகள் ஒருபக்கத்தில் பொதுவான "இஸ்லாமிய பயங்கரவாதம்" பற்றிப் பேசிக்கொண்டு, மறுபக்கத்தில் அவர்களைப் பிரித்தாளவும் முயல்கின்றன.

ஆனால் ஈராக்கிலும், லிபியாவிலும் செய்தது போன்று மேற்கு நாடுகள் இதுவரை சிரியாவில் நேரடித் தலையீடு எதையும் செய்யவில்லை. அதற்குக் காரணம் ரஸ்யாவின் பலமான ஆதரவு ஆஸாத்தின் அரசுக்கு இருப்பதுதான். இன்னொரு பக்கத்தில் ஈரானும் சிரியாவுக்கு ஆதரவு வழங்கி வருகின்றது. ஈரானுடனும் ரஸ்யாவுடனும் மேற்கு நாடுகளுக்கு அண்மைக்காலமாக ஏற்பட்டுள்ள முறுகல் நிலைக்கு அவைகள் சிரிய அரசுக்கு வழங்கிவரும் ஆதரவும் ஒரு காரணம் என்பது சில அவதானிகளின் கருத்தாக இருக்கின்றது.

# புலம்பெயர்ந்த நாடுகளில் இருந்து தனித் தமிழீழத்திற்கு முனைவோர்

9

- கமெலியா நாதானியேல் -

### மலேசியா கைதுகள்

மலேசியா, மொரீசியஸ், மற்றும் தமிழ்நாடு ஆகிய இடங்களில் உள்ள எல்.ரீ.ரீ.ஈ தலைவர்களும் மற்றும் அங்கத்தவர்களும் அந்த நாடுகளில் தமது ஆதரவு குழுக்களை உருவாக்குவதற்காக உள்ளூர் தமிழர்களுக்கு வகுப்புகள் எடுக்கிறார்கள்.

மலேசியாவின் பயங்கர வாத●டுப்பு துறையின் விசேட பிரிவினர் மூன்று எல்.ரீ.ரீ.ஈ. தலைவர்களை மலேசியாவில் வைத்து மே 15, 2014இல் கைது செய்யப்பட்ட விடயம் மேற்கு பகுதியில் அமைந்துள்ள எல்.ரீ.ரீ.ஈ முன்னணி அமைப்புகள் இந்த ஆதரவு குழுக்களின் உருவாக்கத்துக்கு ஆதரவளிக்கின்றன என்பதை வெளிப்படுத்தியுள்ளன.

இந்த முன்னணி அமைப்புக்கள், தமிழ் நாடு மற்றும் மொரிசியசில் வேலை செய்யும் நெடியவன் - இரும்பொறை குழு, மற்றும் மலேசியா, தமிழ்நாடு ஆகிய இடங்களில் பணியாற்றி வரும் நாடுகடந்த தமிழீழ அரசாங்கம், மற்றும் உலகத் தமிழர் பேரவையும் அதன் துணைப் பிரிவான கனடியன் தமிழ் காங்கிரஸ் என்பனவாகும்.

பயங்கரவாதத்துக்கு ஆதரவளிப்பது மற்றும் அதற்கு புத்துயிரளிக்கும் முயற்சி என்பனவற்றுக்கு ஆதரவு நல்கும் இவர்களின் பங்களிப்புக்காக ஐ.நா பாதுகாப்புச் சபை தீர்மானம் 1373இன் கீழ் இந்த அமைப்புகள் அனைத்தும் 2014 மார்ச்சில் பயங்கரவாத அமைப்புகளாக பட்டியலிடப் பட்டுள்ளன.

மலேசியாவில் உள்ள எல்.ரீ.ரீ.ஈ வலையமைப்பு பற்றிய விசாரணையின் தற்போதைய கட்டம், எல்.ரீ.ரீ.ஈ. யின் பிரதான குடை அமைப்பான உலகத் தமிழர் பேரவையின் தலைவர் பிதா எஸ்.ஜே. இமானுவல் மலேசியாவுக்கு விஜயம் மேற்கொண்டதின் பின்னர் ஜூலை 2011இல் ஆரம்பிக்கப்பட்டது.

உலகத் தமிழர் பேரவையின் (ஜி.ரி.எப்)ஒரு அங்கமாக மலேசியாவில் உள்ள மலேசிய தமிழ் அமைப்பு(ரி.எப்.எம்) இமானுவலின் விஜயத்தை ஒழுங்கு செய்திருந்தது. இந்த மலேசிய தமிழ் அமைப்பு, மலேசியாவில் உலகத் தமிழர் நிவாரண நிதி சேகரிக்கும் திட்டத்தை பெறுவதில் வெற்றி பெற்றிருந்தது, இந்த உலகத் தமிழர் நிவாரண நிதி சேகரிக்கும் அமைப்பு, அவுஸ்ரேலியா, ஐரோப்பா மற்றும் வட அமெரிக்கா போன்ற இடங்களில் இருந்து வரும் நிதியினை வட கொரியாவில் சட்டவிரோத ஆயுதக் கொள்வனவுக்கு பயன்படுத்தி எல்.ரீ.ரீ.ஈ யின் ஆயுத கப்பல்களை பராமரிக்கும் பணியினை ஒருங்கிணைப்பு செய்து வந்தது.

இந்த வலையமைப்பை இயக்குபவராக எல்.ரீ.ரீ.ஈயின் கணக்காய்வாளராக இருந்து பின்னர் கணக்காளராக தரமுயர்த்தப்பட்ட ஐயா என்கிற பொன்னையா ஆனந்தராஜா இருந்தார், இவர் அமெரிக்காவில் உள்ள உலகத் தமிழ ஒருங்கிணைப்பு கழகத்தின் முன்னாள் பொருளாளர் ஆவார்.

அவரது உதவியாளரான ராஜன் கைது செய்யப்பட்டதின் பின்னர் ஐயா 2009 - 2010இல் கனடாவுக்கு சென்று மறைந்து வாழ முயற்சிகளை மேற்கொண்டார், மற்றும் அவரது கூட்டாளிகளான



கலாநிதி. என். ஐங்கரன், கே. ஆறுமுகம் மற்றும் எஸ். பசுபதி ஆகியோர் புதிய எல்.ரீ.ரீ.ஈ அமைப்பான மலேசிய தமிழ் அமைப்பினை உருவாக்கினார்கள்.

அதிகாரிகளினால் கைப்பற்றப்பட்ட பதிவுகளின்படி, மலேசிய தமிழ் அமைப்பின் நிதி சேகரிக்கும் குழுவின் தலைவரான திரு.கனகராஜா ஒரு மில்லியன் டொலர்களுக்கும் அதிகமான தொகையினை மனிதாபிமான உதவிகளுக்கு ஆதரவளிப்பது என்கிற பெயரில் திரட்டியுள்ளார், ஆனால் இடம் பெயர்ந்த தமிழர்களின் மீள் ஒருங்கிணைப்புக்காகவோ அல்லது எல்.ரீ.ரீ.ஈ அங்கத்தவர்களின் புனர் வாழ்வுக்காகவோ [illegible]திலிருந்து எந்தவித நிதியும் வழங்கப்படவில்லை. உலகத் தமிழர் பேரவை எவ்வாறு இந்தப் பணத்தை செலவழித்தது என்பதற்கு கணக்கோ மற்றும் வெளிப்படைத் தன்மையோ கிடையாது.

மலேசியாவில் கைதான எல்.ரீ.ரீ.ஈ தலைவர்கள், குசாந்தன் சுந்தரராஜா என்கிற குசாந்தன் சந்திரலிங்கம் ராஜா அல்லது சுந்தரலிங்கம் ராஜா உசாந்தன் என்கிற முல்லைச்செல்வம், மகாதேவன் கிருபாகரன் மற்றும் செல்வதுரை கிருபானந்தன் ஆகியவர்கள். மற்றவர்களுடனான தங்களது தொடர்புகள் பற்றி அவர்கள் விளக்கியதன் பின்னர் அவர்கள் மே 25,2014இல் இலங்கைக்கு நாடு கடத்தப் பட்டார்கள்.

குசாந்தன் (45) 1994இல் எல்.ரீ.ரீ.ஈயில் இணைந்தார். அவர் எல்.ரீ.ரீ.ஈ தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் நெருங்கிய கூட்டாளியும் உறவினருமான சங்கரின் வளர்ப்பு மகளை மணம் செய்துள்ளார். அவர் எல்.ரீ.ரீ.ஈ வான்படையின் பிரதித் தலைவருமாவார். 2004இல் மலேசியாவுக்கு இடம்பெயர்ந்த பின்னர் அவர் படித்து ஒரு மின்னணு பொறியியலாளராக மலேசியாவில் பணியாற்றி வந்தார்.

உலகத் தமிழர் இயக்கம் மற்றும் கனடாவில் உள்ள தமிழர் புனர்வாழ்வுக் கழகம் உட்பட முன்னணி அமைப்புகளால் நிதியுதவி வழங்கப்பட்டு வந்த மலேசியாவில் உள்ள எல்.ரீ.ரீ.ஈ கிளை, அவரது படிப்புக்கும் வாழ்க்கை செலவுக்கும் நிதி வழங்கி வந்தது. பயங்கரவாத குற்றங்களுக்கு பங்களிப்பு செய்ததற்காக அவர் சர்வதேசரீதியில் தேவைப்படும் ஒருவராக இருக்கிறார், இன்ரபோல் அவரது கைதுக்காக சிவப்பு எச்சரிக்கையை விடுத்துள்ளது.

42 வயதான மகாதேவன் கிருபாகரன் எல்.ரீ.ரீ.ஈயின் ஒரு ஒலியமைப்பு பொறியியலாளர் ஆவார், எல்.ரீ.ரீ.ஈ ஊடக நிறுவனமான நிதர்சனத்தில் அவர் பணியாற்றி வந்துள்ளார். 1996இல் அவர் எல்.ரீ.ரீ.ஈ யின் இசைக்குழுவில் இணைந்த பின்னர் அவர் 2001இல் நோர்வேக்கு பயணம் செய்து எல்.ரீ.ரீ.ஈ யின் பயங்கரவாத பிரசாரத்தில் இணைந்து கொண்டார்..

2006இல் அவர் மலேசியாவுக்கு இடம்பெயர்ந்து எல்.ரீ.ரீ.ஈ க்கு உதவி வந்துள்ளார், 2009 க்குப் பின்னர் அவர் எல்.ரீ.ரீ.ஈக்கு புத்துயிர் ஊட்டும் எல்.ரீ.ரீ.ஈ செயற்பாடுகளில் தொடர்பு கொண்டு வந்துள்ளார். அவர் செஞ்சோலையில் ஆசிரியையாக பணியாற்றி வந்த ஒரு எல்.ரீ.ரீ.ஈ அங்கத்தவரை மணம் புரிந்துள்ளார். அவருடைய பெயர் மணிமொழி.. சுவிட்சலாந்தில் உள்ள எல்.ரீ.ரீ.ஈ அங்கத்தவரான முரளி அல்லது சுவிஸ் முரளி என்பவருடன் இணைந்து அவர் புலிகளின் குரல் (வி.ஓ.ரி) மற்றும் தமிழ் தொலைக்காட்சி சேவை (ரி.ரி.என்) என்பவற்றில் பணியாற்றி உள்ளார்.

(தொடரும்)

# தனியார்துறை பேருந்துகளால் நஷ்டத்துக்குள்ளாகும் இ.போ.ச

## வடமாகாண ஜனநாயக போக்குவரத்து ஊழியர் சங்கத்தலைவர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் இலங்கை போக்குவரத்துச் சபை தனி வழிப் பாதைகளில் சிறந்த சேவையாற்றுகின்றது. இதனையும் தனியார் துறை பேருந்துகள் குழப்பி ஓடுவதால் பொது மக்களுக்கு எதுவித நன்மைகளும் ஏற்படாத அதே சந்தர்ப்பத்தில் இ.போ.சபையும் பாரிய நஷ்டத்தை எதிர்கொள்கிறது. இதனை பொலிஸாரும் கண்காணிக்காத நிலையில் இதற்கு தேசிய போக்குவரத்து ஆணைக் குழுவும் ஆதரவு வழங்கி வருகின்றது.

இதனால் யாழ்.மாவட்டத்தில் இலங்கை போக்குவரத்துச் சபையின் சேவைகளை இல்லாது ஒழிக்கும் நிலையும், இதனை முட்க்குவதற்குமான ஒரு சூழ் நிலையும் ஏற்படுவதாக வடமாகாண ஜனநாயக போக்குவரத்து ஊழியர் சங்கத்தின் தலைவரும் இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினருமான கே.புவி தெரிவித்தார்.

மேலும் வடமாகாண ஜனநாயக போக்குவரத்து ஊழியர் சங்கத் தலைவர் இது தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையில்,

இ.போ.ச.பேருந்துகளும் தனி யார் துறை பேருந்துகளும் இணைந்து பொது மக்களுக்கு சீரான அட்டவணைப்படுத்தப் பட்ட சேவைகளை வழங்க முன்வரவேண்டும். அதாவது கச்சேரியில் இ.போ.ச. வடக்கு சார்பாக 7 உறுப்பினர் கொண்ட குழுவும் தனியார் துறை சார்பாக 7 உறுப்பினர் கொண்ட குழுவும் நியமிக்கப்பட்டு ம்தம் மாதம் கலந்துரையாடல் இடம் பெறும் என கூறப்பட்டு 6 மாதங்கள் கடந்தும் கூட்டங்கள் நடைபெறவில்லை.

அண்மைக்காலமாக பல விபத்துக்கள் ஏற்படுகின்ற நிலையில் இன்று வரை மாதாந்த கூட்டம் நடை பெறாமை மேலும் பல விளைவுகளை ஏற்படுத்தும் என கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

மேலும் யாழ்.மாவட்டத்தில் யாழ்ப்பாணம் - கொடிகாமம் (கனகம்புளியடி ஊடாக), யாழ்ப் பாணம் - கோவிலாக்கண்டி (தனங்கிளப்பு) யாழ்ப்பாணம் - பூம்புகார், யாழ்ப்பாணம் - மண்டைதீவு மற்றும் 775 பாதைவழிகளில் இ.போ.ச பேருந்துகள் 3 - 4 சேவைக ளையே வழங்குகின்றது. ஆனால் தனியார் துறையின் இ.போ.ச.வழங்கும் சேவை நேரத்தை கடைப்பிடித்து இ.போ.ச.பேருந்து புறப்படுவதற்கு 10 நிமிடங்களுக்கு முன்பாக புறப்பட்டு இ.போ.ச.பேருந்துக்களை தங்களுக்கு பாதுகாப்பாக அழைத்துச் செல்லும் ஒரு துர்ப்பாக்கிய நிலை காணப்படுகிறது.

எனவே இதற்கு எடுத்துக் காட்டாக ஊர்காவற்றுறை தனியார் சங்கத்தினரை நாம் வரவேற்கின்றோம். அவர்கள் மண்டை தீவு, (781), 777, 780 பாதைகளில் ஒருங்கிணைந்து சேவைகளை யாழ்.மாவட்டத்தில் முதல முதலாக ஏற்படுத்தினார்கள். அதேபோல் 986 பாதையால் ஒருங்கிணைந்த சேவையை ஏற்படுத்திய இரு சாராரைச் போல் ஏனைய சங்கங்களும் முன் வரவேண்டும் இதற்கு உரிய உயர் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (65)

## யோகாசன பயிற்சி நிலையம் ஆரம்பிப்பது குறித்து ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

ஆளுநர் அலுவலக அனுசரணையுடன் வடமாகாணத்திற்கான யோகாசன பயிற்சி நிலையத்தினை யாழ்ப்பாணத்தில் ஆரம்பிப்பது தொடர்பான கலந்துரையாடல் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி தலைமையில் அண்மையில் இடம் பெற்றது.

யாழ்ப்பாணத்திலுள்ள யோகா பயிற்சி நிலையங்களின் நிர்வாகிகள், யோகா பயிற்றுநர்கள் ஆகியோர் இதில் கலந்து கொண்டு யோகாசன பயிற்சிகளை வழங்குவது தொடர்பாக தமது கருத்துக்களை தெரிவித்தார்கள்.

ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன், உதவிச் செயலாளர் ஜே.எக்ஸ்.செல்வநாயகம் ஆகியோரும் இக் கலந்துரையாடலில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## வீதி விபத்துக்களால் அங்கவீனர் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டில் தினமும் ஒவ்வொரு வீதிகளிலும் வீதி விபத்துக்கள் நடைபெற்ற வண்ணம் உள்ளன. இதனால் இழப்புக்களும் மரணங்களும் அங்கவீனமாவதும் அதிகரித்துக் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஆயினும் விபத்துக்கு காரணமாக அமைவது வீதிகளில் சமாந்தரமாகச் செல்லும் பாடசாலை மாணவர்கள், மற்றும் பொதுமக்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகின்றது.

வீதிகளில் சமாந்தரமாக, செல்வோரால் வாகனசாரதிகள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதுடன் விபத்துக்களை சந்திக்க வேண்டியுள்ளது.

வீதிகளில் சமாந்தரமாகச் செல்வோர் மீது சம்பந்தப்பட்ட தரப்பினர் நடவடிக்கை எடுக்காமல் இருப்பதும் கண்டும் காணாமல் இருப்பது ஏன்? என பொது மக்கள் கேள்வி எழுப்புகின்றனர். (66)

## முரசின் இன்றைய பலன்




(11.06.2014 புதன்கிழமை)

ஜய வருஷம் வைகாசி மாதம் 28 ஆம் திகதி.
திரயோதசி / சித்தாமிர்தம்.
விசாக நட்சத்திரம் பி.ப. 03.14 வரை. பின் அனுஷம்.
இராகு காலம் 11.52 -01.22 வரை. சுபநேரம் 04.22 - 05.52 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | பாதுகாப்பில் கூடிய கவனமெடுத்தால் திருடரின் கன்னக்கோலிடும் முயற்சி தோல்வியடைதல், கணக்கு வைத்தலில் பிசகு காணப்பட்டதை அறிந்து உறவினை முறித்துக்கொள்ளுதல். |
| ரிஷபம் | குழந்தைப்பாக்கியம் ஏற்பட்ட அறிகுறி அறிந்து மகிழ்ச்சியில் திளைத்தல், குருதிநன்கொடை செய்து பெருமையும் பாராட்டும் பெறல். |
| மிதுனம் | துன்பதுயரங்கள் தொடர்கதையாக இருப்பதை எண்ணி மனையின் குறைபாட்டை நீக்க எண்ணமிடல், பெற்றோரின் தேகநலம் மேம்படுவதை நினைத்து கைவிட்டிருந்த பயணத்தை தொடரமுயலல். |
| கடகம் | இன் சொல்லைப்பாவித்ததால் ஊழியர்களின் அரவணைப்புக்கிட்டி தேங்கிய பணிச்சுமை முடிவடைதல், கௌரவவிருது பெறபிரமுகரின் சிபார்சு கிட்டுதல். |
| சிம்மம் | நீண்ட நாட்களாக இழுபட்டுக் கொண்டிருந்த பதவி உயர்வு கிட்டுதல், வியாபார முன்னேற்றத்திற்காக அனுபவ சாலிகளை சிப்பந்திகளாக நியமிக்க முயற்சி எடுத்தல். |
| கன்னி | பாட்சை முடிவு சாதகமாக இருந்ததால் மாணவர் வசாவில் வெளியூர் சென்று கற்க முயலல், நோய் குணமடைய குடும்பசகிதம்தெய்வதலமொன்றுக்கு சென்று வரத்திட்டமிடல். |
| துலாம் | இடமாற்றம் ஏற்படலாம் என சூசகமாக அறிந்து விசனப்படல், காணாமற் போய்விட்டார் என நம்பப்பட்டவர் பற்றிய தகவல் கிட்டியதை நம்பமுடியாது அதிசயித்தல். |
| விருச்சிகம் | நிலுவை கட்ட முடியாத நிலைமையால் மின் இணைப்பு துண்டிக்கப்படும் அபாய கட்டம் ஏற்படல், கால்நடைகள் குறுக்கறுத்ததால் விபத்திலின்றும்மயிரிழையில்தப்புதல். |
| தனுசு | கண்டதே காட்சி கொண்டதே கோலமென்று திரிய வெளிக்கிட்ட மைந்தனை எண்ணிக் கவலை கொள்ளல், அனுமதி அறிந்ததால் கடன்பட நண்பர்களை நாடுதல். |
| மகரம் | இழுபட்டுக் கொண்டிருக்கும் விவாகம் முற்றாகும் நிலை அடைந்ததை எண்ணி புளகாங்கித மடைதல், அடகுப் பொருட்களை மீட்க நண்பர்பண உதவி செய்யமுன்வரல். |
| கும்பம் | விவாகத்தரகுக் கூலிபெறுவதற்கு உரிமம் இல்லாத பட்சத்தில் ஏமாற்றமடைதல், காலாவதித்திக தியைக் கவனிக்காது கொள்வனவு செய்த பொருளை எண்ணிக் கவலைப்படல். |
| மீனம் | பிள்ளைகளின் அழைப்பை ஏற்று பெற்றோர் வெளிநாடு செல்ல ஆயத்தமாதல், தற்காலிக பதவி நிரந்தரமாக்கப்படும் செய்தியறிந்து மகிழ்ச்சியடைதல். |



## குருப்பெயர்ச்சி பலாபலன்கள்

(13.06.2014 முதல் 04.07.2015 வரை)

### கன்னி

(உத்தரம் 2, 3, 4 ஆம் பாதம் அத்தம், சித்திரை 1, 2 ஆம் பாதம்)

**பாச பந்தத்துடன் பழகி மகிழும் கன்னி ராசிக்காரர்களே!**

உங்களுக்கு இதுவரை குருபகவான் ராசிக்கு 10 இல் இருந்து, பிற்போக்கான பலன் அளித்து வந்தார். அதனால், மனதில் தீராத வெறுப்பு எப்போதும் குடிகொண்டிருக்கும். இப்படி கெடு பலனைத் தந்து கொண்டிருந்த குரு பகவான் இப்போது இடம்மாறி 11 ஆம் இடத்திற்கு வருவது மிகவும் உன்னதமான நிலை. அவர் எண்ணற்ற பல நன்மைகளை தரக் காத்திருக்கிறார். பொருளாதார வளம் மேம்படும். உத்தியோகம் சிறப்படையும். புதிய பதவி கிடைக்கும். அதோடு குருவின் 5,7,9ஆம் இடத்துப் பார்வைகள் சாதகமாக விழுகிறது. அதன் மூலமும் பல நன்மைகள் கிடைக்கும்.

இது சிறப்பான காலம். இது வரை இருந்து வந்த உளைச்சல் மறைந்து மனதில் உற்சாகம் கூடும். நினைத்த காரியம் எளிய முயற்சியில் வெற்றிகரமாக நிறைவேறும். ஆற்றல் மேம்படும். அவப்பெயர் மறைந்து உறவினர் மத்தியில் செல்வாக்கு மேம்படும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலைத்திருக்கும். கணவன் - மனைவி இடையே இருந்த கருத்துவேறுபாடு அடியோடு மறைந்து அன்பு மேம்படும். இதுவரை தடைப்பட்டு வந்த திருமணம் போன்ற சுபநிகழ்ச்சியை சிறப்பாக நடாத்துவீர்கள். அதுவும் மனதிற்கு பிடித்த நல்ல வரனாக அமையும்.

வீட்டிற்கு அடிக்கடி உறவினர்கள் வருகையும் அதனால் நன்மையும் காண்பீர்கள். புதிய வீடு வாங்க யோகமுண்டு அல்லது தற்போது உள்ளதை விட வசதியான வீட்டுக்கு குடி புக வாய்ப்புண்டு. வாகன வகையிலும் அனுகூலம் உண்டாகும். 2015 ஜனவரிக்கு பிறகு குடும்பத்தில் வீண் குழப்பம் வரலாம். உறவினர் வகையில் விரோதமும் ஏற்படும். 2015 பெப்ரவரி 4 இற்கு பிறகு கணவன்-மனைவி இடையே கருத்து வேறுபாடு மறைந்து ஒற்றுமை பலப்படும்.

**பணியாளர்கள்:**

வழக்கத்தை விட அதிக நற்பலனை இந்த ஆண்டு எதிர்பார்க்கலாம். இதுவரை வேலையில் இருந்து வந்த தடைகள், திருப்தியின்மை போன்றவை மறையும். வேலையில் புதிய தெளிவு பிறக்கும். மேல் அதிகாரிகளின் ஒத்துழைப்பு சீராகக் கிடைக்கும். சக ஊழியர்களும் உதவிகரமாக இருப்பர். பதவி உயர்வு கிடைக்க யோகமுண்டு. வேலை இன்றி இருப்பவர்களுக்கு தக்க பணி கிடைக்க வாய்ப்புண்டு.

**பெண்கள்:**

வாழ்வில் சிறப்பான முன்னேற்றம் அடைவர். கணவரின் அன்பும் ஆதரவும் கிடைக்கப் பெறுவர். இவர்களின் சீரிய தலைமையில் குடும்ப வாழ்வு சிறக்கும். பிறந்த வீட்டில் இருந்து வெகுமதிகள் அடிக்கடி வரலாம். மனம் போல புத்தாடை, ஆபரணம், ஆடம்பர பொருள்அதிகமாக வாங்குவீர்கள். திருமணம் ஆகாதவர்களுக்கு மணப்பொருத்தம் கைகூடும்.

**கலைஞர்கள்:**

புதிய ஒப்பந்தம் மூலம் வருமானம் கிடைக்கப் பெறுவர். மக்கள் மத்தியில் செல்வாக்குடன் திகழ்வீர்கள்.

**மாணவர்கள்:**

இந்த கல்வி ஆண்டு மிகச் சிறப்பானதாக அமையும். விரும்பிய பாடம் கிடைக்கப் பெறுவீர்கள். படிப்பில் முதன்மையானவர்களாகப் பளிச்சிடுவீர்கள். சிலர் வெளிநாடு சென்று படிக்கும் யோகத்தைப் பெறுவர்.

**குரு அதிசாரப் பலன்!**

குருபகவான் டிசம்பர் 3 ஆம் திகதி அதிசாரம் பெற்று சிம்ம ராசிக்கு மாறுகிறார். 22 ஆம்திகதி வரை அதில் இருப்பார். இந்த அதிசாரக் காலத்தில் பொருள் விரயம் ஏற்படலாம். பண விடயத்தில் கவனம் தேவை. மனவேதனை உருவாகலாம். வீண் அலைச்சல் ஏற்படும். எந்தச் செயலையும் நிறைவேற்ற விடாமுயற்சியும், கடின உழைப்பும் தேவைப்படும்.

**பரிகாரம்!**

கேதுவுக்கு கொள்ளு படைத்து அர்ச்சனை செய்யுங்கள். ராகுவையும் வழிபட்டு வாருங்கள். பாம்புப் புற்றுள்ள கோவிலுக்குச் சென்று வாருங்கள். துர்க்கைக்கு எலுமிச்சை பழ விளக்கு ஏற்றுங்கள். துர்க்கை வழிபாடு மிகவும் உயர்வை தரும். ராகு காலத்தில் வைரவருக்கு தயிர் சாதம் படைத்து வழிபடலாம். 2014 டிசம்பர் 16 வரை சனிபகவானுக்கு எள் சாதம் படைத்து வணங்குங்கள். சனிக்கிழமைகளில் பெருமாள் கோவிலுக்குச் சென்று வாருங்கள். பரமனை மதித்திடாப் பங்க யாசனன் ஒருதலை கிள்ளியே யொழிந்த வானவர்குருதியும் அகந்தையும் கொண்டு தண்டமுன் புரிதரு வடுகனைப் போற்றி செய்குவாம் என்ற துதியை பாடுங்கள்.

# நாளை ஆரம்பம்




பெனால்டி மூலம் முடிவானது. 1996இல் பிரேசில் அணி இத்தாலியையும், 2006 இல் இத்தாலி, பிரான்சையும் வீழ்த்தி, கோப்பை வென்றன.

உலக கோப்பை கால்பந்து தொடரில் ஸ்காட்லாந்து அணி, எட்டு முறை (1954, 1958, 1974 முதல் 1990, 1998) பங்கேற்றது. இந்த அனைத்திலும் முதல் சுற்றுடன் திரும்பியது. இப்படி, 8 முறை முதல் சுற்றுடன் கிளம்பிய ஒரே அணி ஸ்காட்லாந்து மட்டுமே.

உலகக் கோப்பை தொடரில் அதிகமான கோல் அடித்து வெற்றி பெற்ற அணி என்ற சாதனை ஹங்கேரிக்கு உண்டு. 1982இல் எல் சால்வடார் அணியை, ஹங்கேரி 10-1 என்ற கோல்கணக்கில் வீழ்த்தியது.

இதுவரை நடந்த 19 உலக கோப்பை தொடர்களில், ஜேர்மனி அணி 1930, 1950 தவிர, 17இல் பங்கேற்றது. இதில் 11 முறை, அரையிறுதிக்கு முன்னேறியது. உலக கோப்பை கால்பந்து தொடரில், அதிகமுறை அரையிறுதிக்கு முன்னேறிய அணி ஜேர்மனி தான்.



முதல் உலக கோப்பை போட்டியில் பயன்படுத்தப்பட்ட கால்பந்து.



உலக கோப்பையில் முதலாவது கோலை அடித்த பிரான்ஸ் வீரர் லூசியன் லாரெண்ட்.




### ஜேர்மனியின் சோகம்

உலக கோப்பை போட்டிகளில் அதிக கோல்கள் விட்டுத் கொடுத்த அணி ஜேர்மனி. இதுவரை பங்கேற்ற 19 உலக கோப்பை தொடர்களில், எதிரணியினரை மொத்தம் 117 கோல்கள் அடிக்க விட்டது.

### தெரியுமா?

உலகக் கோப்பை கால்பந்து போட்டிகளில் இதுவரை மொத்தம் 2208 கோல்கள் அடிக்கப்பட்டுள்ளன. முதலாவது கோலை பிரான்ஸ் வீரர் லுசியன் லாரெண்ட் (1930ஆம் ஆண்டு) அடித்தார். 100ஆவது கோலை இத்தாலி வீரர் எஞ்சலோ ஸ்சியவியோ (1934ஆம் ஆண்டு), 1000ஆமாவது கோலை நெதர்லாந்து வீரர் ரொப் ரென்சென்பிரிங் (1978ஆம் ஆண்டு), 2000ஆமாவது கோலை ஸ்வீடன் வீரர் மார்கஸ் அல்பேக் (2006ஆம் ஆண்டு) ஆகியோர் அடித்து வரலாற்றில் இடம்பிடித்துள்ளனர்.

### 50 கோடி பேர் பார்ப்பார்கள்

2014 உலகக் கோப்பை கால்பந்து போட்டியை உலகம் முழுவதும் 193 நாடுகளைச் சேர்ந்த 50 கோடி பேர் தொலைக்காட்சி நேரடி ஒளிபரப்பில் கண்டு இரசிப்பார்கள் என்று கணிக்கப்பட்டுள்ளது. இது தவிர போட்டியை மைதானங்கள் மூலம் 33 இலட்சம் ரசிகர்கள் நேரடியாக காண்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### சாதிக்கக் காத்திருப்போர்

பிரேசில் உலகக்கோப்பையில் பத்திற்கும் மேற்பட்ட பிரபல வீரர்களின் அதிரடி ஆட்டத்தை காண முடியும். லயனல் மெஸ்சி (ஆர்ஜென்ரீனா), பிராங்க் ரெபேரி (பிரான்ஸ்), கிறிஸ்டியானா ரொனால்டோ (போர்த்துக்கல்), வெய்ன் ரூனி (இங்கிலாந்து), நெய்மார் (பிரேசில்) சேவி (ஸ்பெயின்), டிரோக்பா (ஐவரி கோஸ்ட்), இனியஸ்டா (ஸ்பெயின்), பெர்னாண்டோ டோரஸ் (ஸ்பெயின்), ஸ்டீவன் ஜெரார்ட் (இங்கிலாந்து), மைக்கல் எஸ்சியன் (கானா), டேவிட் வில்லா (ஸ்பெயின்), சாமுவேல் எட்டோ (கமரூன்), லூயிஸ் பாபியானோ (பிரேசில்), இகர் கேசிலாஸ் (ஸ்பெயின்), செஸ்க் பேப்ரெகாஸ் (ஸ்பெயின்), ஜியான்லுய்கி பபுன் (இத்தாலி), மரியோ பலோடெலி (இத்தாலி), டேனி அல்வெஸ் (பிரேசில்), நெமஞ்சாவிடிக் (சேர்பியா), வெஸ்லி ஸ்னெய்டர் (நெதர்லாந்து).

## போட்டி அட்டவணை

| இல. | மோதும் நாடுகள் | | | பிரேசில் திகதி நேரம் | | இலங்கை திகதி நேரம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01. | பிரேசில் | எதிர் | குரோசியா | 12.06.14 | 5.00 | 13.06.14 | அதிகாலை | 12.30 |
| 02. | மெக்சிக்கோ | எதிர் | கமரூன் | 13.06.14 | 1.00 | 13.06.14 | இரவு | 08.30 |
| 03. | ஸ்பெயின் | எதிர் | நெதர்லாந்து | 13.06.14 | 4.00 | 13.06.14 | இரவு | 11.30 |
| 04. | சிலி | எதிர் | அவுஸ்ரேலியா | 13.06.14 | 7.00 | 14.06.14 | அதிகாலை | 02.30 |
| 05. | கொலம்பியா | எதிர் | கிறீஸ் | 14.06.14 | 1.00 | 14.06.14 | இரவு | 08.30 |
| 06. | கொஸ்ராறிக்கா | எதிர் | உருகுவே | 14.06.14 | 4.00 | 14.06.14 | இரவு | 11.30 |
| 07. | இங்கிலாந்து | எதிர் | இத்தாலி | 14.06.14 | 7.00 | 15.06.14 | அதிகாலை | 02.30 |
| 08. | ஐவரிகோஸ்ட் | எதிர் | யப்பான் | 14.06.14 | 10.00 | 15.06.14 | காலை | 05.30 |
| 09. | சுவிற்சர்லாந்து | எதிர் | ஈகுவேடர் | 15.06.14 | 1.00 | 15.06.14 | இரவு | 08.30 |
| 10. | பிரான்ஸ் | எதிர் | கொண்டுராஸ் | 15.06.14 | 4.00 | 15.06.14 | இரவு | 11.30 |
| 11. | ஆர்ஜன்ரீனா | எதிர் | பொஸ்னியா | 15.06.14 | 7.00 | 16.06.14 | அதிகாலை | 02.30 |
| 12. | ஜேர்மனி | எதிர் | போத்துக்கல் | 16.06.14 | 1.00 | 16.06.14 | இரவு | 08.30 |
| 13. | ஈரான் | எதிர் | நைஜீரியா | 16.06.14 | 4.00 | 16.06.14 | இரவு | 11.30 |
| 14. | கானா | எதிர் | ஐக்கியஅமெரிக்கா | 16.06.14 | 7.00 | 17.06.14 | அதிகாலை | 02.30 |
| 15. | பெல்ஜியம் | எதிர் | அல்ஜீரியா | 17.06.14 | 1.00 | 17.06.14 | இரவு | 08.30 |
| 16. | பிரேசில் | எதிர் | மெக்சிகோ | 17.06.14 | 4.00 | 17.06.14 | இரவு | 11.30 |
| 17. | ரஷ்யா | எதிர் | தென்கொரியா | 17.06.14 | 7.00 | 18.06.14 | அதிகாலை | 02.30 |
| 18. | நெதர்லாந்து | எதிர் | அவுஸ்ரேலியா | 18.06.14 | 1.00 | 18.06.14 | இரவு | 08.30 |
| 19. | ஸ்பெயின் | எதிர் | சிலி | 18.06.14 | 4.00 | 18.06.14 | இரவு | 11.30 |
| 20. | குரோசியா | எதிர் | கமரூன் | 18.06.14 | 7.00 | 19.06.14 | அதிகாலை | 02.30 |
| 21. | கொலம்பியா | எதிர் | ஐவரிகோஸ்ட் | 19.06.14 | 1.00 | 19.06.14 | இரவு | 08.30 |
| 22. | உருகுவே | எதிர் | இங்கிலாந்து | 19.06.14 | 4.00 | 19.06.14 | இரவு | 11.30 |
| 23. | கிரீஸ் | எதிர் | யப்பான் | 19.06.14 | 7.00 | 20.06.14 | அதிகாலை | 02.30 |
| 24. | கொஸ்ராறிக்கா | எதிர் | இத்தாலி | 20.06.14 | 1.00 | 20.06.14 | இரவு | 08.30 |
| 25. | சுவிற்சர்லாந்து | எதிர் | பிரான்ஸ் | 20.06.14 | 4.00 | 20.06.14 | இரவு | 11.30 |
| 26. | ஈகுவேடர் | எதிர் | கொண்டுராஸ் | 20.06.14 | 7.00 | 21.06.14 | அதிகாலை | 02.30 |
| 27. | ஆர்ஜன்ரீனா | எதிர் | ஈரான் | 21.06.14 | 1.00 | 21.06.14 | இரவு | 08.30 |
| 28. | ஜேர்மனி | எதிர் | கானா | 21.06.14 | 4.00 | 21.06.14 | இரவு | 11.30 |
| 29. | பொஸ்னியா | எதிர் | நைஜீரியா | 21.06.14 | 7.00 | 22.06.14 | அதிகாலை | 02.30 |
| 30. | பெல்ஜியம் | எதிர் | ரஷ்யா | 22.06.14 | 1.00 | 22.06.14 | இரவு | 08.30 |
| 31. | அல்ஜீரியா | எதிர் | தென் கொரியா | 22.06.14 | 4.00 | 22.06.14 | இரவு | 11.30 |
| 32. | போத்துக்கல் | எதிர் | ஐக்கியஅமெரிக்கா | 22.06.14 | 7.00 | 23.06.14 | அதிகாலை | 02.30 |
| 33. | நெதர்லாந்து | எதிர் | சிலி | 23.06.14 | 1.00 | 23.06.14 | இரவு | 08.30 |
| 34. | ஸ்பெயின் | எதிர் | அவுஸ்ரேலியா | 23.06.14 | 1.00 | 23.06.14 | இரவு | 08.30 |
| 35. | பிரேசில் | எதிர் | கமரூன் | 23.06.14 | 5.00 | 24.06.14 | அதிகாலை | 12.30 |
| 36. | குரோசியா | எதிர் | மெக்சிகோ | 23.06.14 | 5.00 | 24.06.14 | அதிகாலை | 12.30 |
| 37. | உருகுவே | எதிர் | இத்தாலி | 24.06.14 | 1.00 | 24.06.14 | இரவு | 08.30 |
| 38. | கொஸ்ராறிக்கா | எதிர் | இங்கிலாந்து | 24.06.14 | 1.00 | 24.06.14 | இரவு | 08.30 |
| 39. | கொலம்பியா | எதிர் | யப்பான் | 24.06.14 | 5.00 | 25.06.14 | அதிகாலை | 12.30 |
| 40. | கிரீஸ் | எதிர் | ஐவரிகோஸ்ட் | 24.06.14 | 5.00 | 25.06.14 | அதிகாலை | 12.30 |
| 41. | ஆர்ஜன்ரீனா | எதிர் | நைஜீரியா | 25.06.14 | 1.00 | 25.06.14 | இரவு | 08.30 |
| 42. | பொஸ்னியா | எதிர் | ஈரான் | 25.06.14 | 1.00 | 25.06.14 | இரவு | 08.30 |
| 43. | சுவிற்சர்லாந்து | எதிர் | கொண்டுராஸ் | 25.06.14 | 5.00 | 26.06.14 | அதிகாலை | 12.30 |
| 44. | ஈகுவேடர் | எதிர் | பிரான்ஸ் | 25.06.14 | 5.00 | 26.06.14 | அதிகாலை | 12.30 |
| 45. | போத்துக்கல் | எதிர் | கானா | 26.06.14 | 1.00 | 26.06.14 | இரவு | 08.30 |
| 46. | ஜேர்மனி | எதிர் | ஐக்கியஅமெரிக்கா | 26.06.14 | 1.00 | 26.06.14 | இரவு | 08.30 |
| 47. | பெல்ஜியம் | எதிர் | தென் கொரியா | 26.06.14 | 5.00 | 27.06.14 | அதிகாலை | 12.30 |
| 48. | அல்ஜீரியா | எதிர் | ரஷ்யா | 26.06.14 | 5.00 | 27.06.14 | அதிகாலை | 12.30 |

வெற்றி - 3 புள்ளிகள்
சமன் - 1 புள்ளி

## ஆலயங்களில் உயிர்ப்பலியிடுதல் மனிதநேய நடைமுறைக்கு நேர்மாறு

### சைவசமய அமைப்புக்கள் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

ஆலயங்களில் உயிர்ப்பலியிடும் செயற்பாட்டை நிறுத்துமாறும் இந்தச் செயற்பாடானது சைவ சமயம் போதிக்கின்ற ஜீவகாருண்ய கொள்கைக்கும் மனிதநேய நடைமுறைகளுக்கும் முற்றிலும் நேர்மாறாக அமைந்துள்ளதாக சைவ அமைப்புக்கள் தெரிவித்தன.

ஆன்மிக இணையத்தில் அங்கம் வகிக்கின்ற சிவத்தமிழ் குருமார் ஒன்றியம், சிவன் மானிட மேம்பாட்டு நிறுவனம், சிவத்தமிழ் மானிட விடியற்கழகம், சிவத்தொண்டர் அமைப்பு, சிவமங்கையர் அமைப்பு, சைவ நெறிக்கூடம், சிவானந்த மகரிசி யோக நிலையம் ஆகிய அமைப்புகளுடன் இணைந்து சைவ மகா சபையினர் நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஆலயங்களில் உயிர்ப்பலியிடும் செயற்பாடானது உலக ஒழுங்கில் கடைப்பிடிக்கின்ற ஜீவாருண்ய, சுகாதாரச் சட்டங்களை பாரதூரமாக மீறுவதாக விளங்குகின்றது. அத்துடன், சமூக அமைதியின்மையை ஏற்படுத்துவதாகவும் இந்த இரத்தவெறி நிகழ்வை காண்கின்ற சிறுவர்கள் பிற்காலத்தில் கொடூர சிந்தனையுடைய சமூக வன்முறையாளர்களாக மாறுவதை ஊக்குவிப்பதாகவும் அமைகின்றது என்றார்.

## வலை உற்பத்தி தொழிற்சாலைகளை விருத்தி செய்வது குறித்து ஆராய்வு



(யாழ்ப்பாணம்)


பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா- தனது அமைச்சின் கீழுள்ள வடகடல் நிறுவனத்தின், லுனுவில வலை உற்பத்திச் சாலைக்கு கடந்த ஞாயிற்றுக் கிழமை இரவு திடீர் விஜயமொன்றை மேற்கொண்டார்.

வடகடல் நிறுவனத்தின் கீழ் குருநகர் வீரவில மற்றும் லுனுவில ஆகிய பகுதிகளில் மூன்று வலை உற்பத்தித் தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன.

மேற்படி மூன்று தொழிற்சாலைகளினதும் உற்பத்தி விகிதத்தை பெருக்குவது தொடர்பிலும் அதனூடாக தொழிற்சாலைகளை விருத்தி செய்து அங்கு பணியாற்றி வருகின்றவர்களுக்கு நல்லதொரு எதிர்காலத்தை அமைத்துக் கொடுப்பதென தீர்மானித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் நிலையிலேயே இத்திடீர் விஜயத்தை மேற்கொண்டார்.

இதன்போது தொழிற்சாலையின் இயந்திராதிகளின் தொழிற்பாடுகள், உற்பத்தி வேகம், மூலப்பொருட்களின் இருப்பு போன்ற விடயங்கள் தொடர்பில் விசேட அவதானஞ் செலுத்தப்பட்டது.

## இரண்டாம் கட்ட அமர்வில் மட்டக்களப்பில் 212 முறைப்பாடுகள்



காணாமற்போனோர் தொடர்பான முறைப்பாடுகளை விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழு மட்டக்களப்பு மாவட்டத்தில் முன்னெடுத்த இரணடாம் கட்ட அமர்வில் புதிதாக 212 முறைப்பாடுகளை பதிவு செய்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் காணாமற்போனோர் தொடர்பாக கிடைக்கப்பெற்ற 195 முறைப்பாடுகளுக்கான சாட்சி விசாரணைகள் இடம்பெற்றதாக காணாமற்போனோர் தொடர்பான முறைப்பாடுகளை விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் செயலாளர் எச.டபிள்யூ.குணதாச தெரிவித்தார்.

இந்த அமர்வில் பதிவுசெய்யப்பட்ட சாட்சியங்களில் அதிகமானவை காத்தான்குடி – குருக்கள் மடத்தில் காணப்படுவதாக கூறப்படும் மனித புதைகுழி தொடர்பிலேயே முன்வைக்கபட்டுள்ளன.

காணாமற்போனோர் தொடர்பான முறைப்பாடுகளை விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக் குழுவின் மட்டக்களப்பு மாவட்டத்திற்கான இரண்டாம் கட்ட சாட்சிப் பதிவுகள் கடந்த ஆறாம் திகதி காத்தான்குடி பிரதேச செயலகத்தில் ஆரம்பமானது.

மட்டக்களப்பில் நேற்று முன்தினம் நிறைவு செய்துள்ளதாக ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து முல்லைத்தீவு மாவட்டத்தில் அடுத்த மாதம் ஆணைக்குழுவின் அமர்வுகள் இடம்பெறவுள்ளதாக அதன் செயலாளர் தெரிவித்துள்ளார்.

## 2000 இற்கு மேற்பட்ட அழைப்புக்களுக்கு தினந்தோறும் பதிலளிக்கும் ஜனசக்தி

(கொழும்பு)

ஜனசக்தி காப்புறுதி நிறுவனத்தின் அழைப்பு நிலையத்தில் தொழில்நுட்பங்களை பயன்படுத்தி நாளொன்றுக்கு சராசரியாக 2000 இற்கும் மேற்பட்ட அழைப்புக்களுக்கு பதில ளிக்கப்படுகிறது என ஃபுல் ஒப்ஷன் பிரிவின் சிரேஷ்ட உதவி பொது முகாமையாளர் எஸ். தனஞ்சயன் தெரிவித்தார்.

நாளொன்றுக்கு 250 கோரிக்கைகள் தெரியப்படுத்தப்படுகிறது.

மேலும் இதனை மும்மொழிகளிலும் திறமையான நன்கு பயிற்சி பெற்ற வாடிக்கையாளர் பராமரிப்பு பிரதிநிதிகளால்



எமது அனைத்துப் பணியாளர்களும், வாடிக்கையாளர் பராமரிப்பு மற்றும் அழைப்பு நிலைய செயற்பாடுகளில் விசேட பயிற்சிகளைப் பெற்றுள்ளனர் என்றார்.

## ஆறுமுகம் திட்டத்தை அமுல்படுத்தினால் 2000 மீனவக் குடும்பங்கள் பாதிப்படையும்

### கரைச்சி வடக்கு க.தொ.கூ.ச. சமாசம்

ஆறுமுகம் திட்டத்தினால் கடலேரி மீன்பிடியாளர்களுக்கு ஏற்படும் ஆபத்து தொடர்பாக கரைச்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசத்தினால் அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

அண்மையில் இடம்பெற்ற கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக் கூட்டத்தில் இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இரணைமடு-யாழ்ப்பாணம்-கிளிநொச்சி குடிநீர்த்திட்டத்துக்கு மாற்றுத் திட்டமாக ஆனையிறவு கிழக்குப் பகுதிக் கடல் நீரேரியை நன்னீர ஆக்கும் ஆறுமுகம் திட்டதைப் பரிசீலிக்கலாம் என்று இரணைமடுக் குளத்தின் கீழுள்ள சில கமக்காரரர் அமைப்புகளும் வட மாகாணசபையினால் நியமிக்கப்பட்ட நிபுணர்குழு அறிக்கையும் பரிந்துரைத்துள்ளதாக அறிகிறோம்.

ஊடகங்கள் சிலவும் இத் தகவலை மையப்படுத்தி ஆறுமுகம் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதைப் பற்றிய செய்திகளை வெளியிட்டு வருகின்றன. இதனையறிந்து நாம் அதிர்ச்சியடைந்துள்ளோம். ஆறுமுகம் திட்டத்தை நடைமுறைப்படுத்தினால் அதன் மூலமாக ஆனையிறவுக் கடநீரேரியின் மீன்பிடி இறால்பிடி ஆகியவற்றில் ஈடுபடும் 2000 வரையான மீனவக் குடும்பங்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இந்தக் கடல்நீரேரியின் இரண்டு பக்கங்களிலும் உள்ள 20 கிராமங்களைச் சேர்ந்த 2000 வரையான உறுப்பினர்கள் கடற்றொழில் சங்கங்களில் தொழில் உரிமத்தைப் பெற்று மீன் மற்றும் இறால் பிடியில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த மீனவர்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாத்து இவர்களுடைய நலன்களை மேம்படுத்தும்வகையில் 12 கடற்றொழிலாளர் சங்கங்கள் செயற்பட்டு வருகின்றன.


இந்தச் சங்கங்களை ஒருங்கிணைத்து மூன்று சமாசங்களும் இயங்குகின்றன. இப்படி ஒரு வளர்ச்சி நிலையில் ஆனையிறவுக் கடல்நீரேரியின் மீண்பிடி பொருளாதார வாழ்வாதாரம் வலுமிக்கமாக மாறி வருகிறது இந்தத் தொழிலை ஆதாரமாகக் கொண்டு பல கிராமங்களும் மக்கள் குடியிருப்புகளும் இந்தக் கடல்நீரேரியை அண்மித்து நடைமுறைப்படுத்தும் போது நாம் குறிப்பிட்டிருக்கும் கடலேரி மீன்பிடியும் அதனை நம்பி வாழும் மக்களும அவர்கள் வாழுகின்ற பிரதேசங்களும் பாதிப்பைச் சந்திக்கும் என்பதைத் தெரியப்படுத்துகின்றோம்.

இதேவேளை மேற்குறிப்பிடப்படும் ஆறுமுகம் திட்டமானது கடந்த 60 ஆண்டுகளுக்கு முன்னர் கருத்திட்ட நிலையில் முன்வைக்கப்பட்டதன் பின்னர் உறைநிலையில் வைக்கப்பட்ட ஒன்றாக இருக்கின்றது.

ஆகவே காலத்தால் பழைய ஆறுமுகம் திட்டத்திற்குப் பதிலாக புதிய திட்டத்தை நடைமுறைப்படுத்தி விவசாயிகளின் நலனையும் மீனவர்களின் நலனையும் பேணக்கூடிய வகையில் திட்டமொன்றை உருவாக்குமாறு கேட்டுக்கொள்கிறோம் இரணைமடுக்குள புனரமைப்பு-யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களுக்கான குடிநீர் விநியோகத்திட்டத்திற்குப் பதிலாக ஆறுமுகம் திட்டத்தை நடைமுறைப்படுத்தலாம் என்று கூறுகின்றவர்கள், கடலேரி மீன்பிடியில் ஈடுபடும் 2000 குடும்பங்களின் வாழ்க்கை யைப் பற்றிச் சிந்திக்காமல் இருப்பதையிட்டுநாம் மனம் வருந்துகிறோம். ஒரு தரப்பினரின் வாழ்க்கையை முதன்மைப் படுத்தி இன்னொரு தரப்பினரின் வாழ்க்கையை பொருட்படுத்தாதிருப்பது என்பது சமூக நியாயத்திற்கு ஏற்புடையதல்ல. ஆறுமுகம் திட்டத்தின் காரணமாக மூடப்பட்ட ஆனையிறவுப் பாலத்தின் மேற்குப பகுதி இன்று ஆற்று வண்டல் மண் நிரம்பிய நிலையில் கடலேரி சதுப்பு நிலமாக மாறிவருவதுடன் கடலுணவு வளங்களும் அருகி வருகின்றன என்பதை அப்பகுதி மீனவர்கள் வெளிப்படுத்துகின்றனர் இவர்கள் இப்பாலத்தை மீளவும் திறக்குமாறு பல்வேறு வேளைகளில் கோரி வருகின்றனர்.

ஆறுமுகம் திட்டம் நடைமுறைப்படுத்தப்ப டும் பிரதேசத்தினுள் நீர் ஆவியாகும் விகிதம் சேமிப்பை விட அதிகமானது என்பதை வருடந்தோறும் தென்மேல் பருவக்காற்று காலங்களில் இக்கடலேரி வற்றிப்போகின்றமை மூலம் அனைவரும் அறிவர் எனவே இத்திட்டம் அதிக நீர் விரையத்தை கொண்டிருக்கும் என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம் என்பதையும் இங்கே வலியுறுத்த விரும்புகிறோம்.

எந்த ஒரு நிலைப்பாட்டை நாம் மேற்கொள்ளும் போதும் சமூக சமநிலை தன்மை பேணப்பட வேண்டும் என்பதையும் இங்கே வலியுறுத்த விரும்புகிறோம். ஆகவே நீதி நியாயம் நீண்டகால அடிப்படையிலான சமூக நலன்கள் பரந்துபட்ட மக்களின் நன்மைகள் என்ற அடிப்படையில் நாம் முன்வைக்கும் கோரிக்கை ஆறுமுகம் திட்டத்தை நடைமுறைப்படுத்துவது விவசாயிக்கோ அல்லது மீனவர்களுக்கோ அல்லது யாழ்.குடாநாட்டின் குடிநீர்த் தேவைக்கோ மிகுந்த பயன்அளிக்கும் திட்டமாக அமையாது என்பதேயாகும். எமது இந்தக் கோரிக்கையினை சம்பந்தப்பட்டவர்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்று தயவுடன் கேட்டுக்கொள்கிறோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# க.பொ.த. (உ/த) மாணவர்களுக்கான அலகு ரீதியான பயிற்சிகள்

உயிரியல் I


1) பின்வருவனவற்றுள் எதனை ஓர் உயிரியல் மூலக்கூறாக கருதமுடியாது?
 1) காபோவைதரேற்று 2) புரதம் 3) நியுக்கிளிக் அமிலம்
 4) இலிப்பிட்டு 5) ATP

2) அழுத்தமான அகமுதலுருச் சிறுவலை மிகக்கூடியளவில் காணப்படுவது?
 1) தசைக்கலங்களில் 2) அண்மையான மடிந்தகுழலுருவில்
 3) செங்குருதிக்கலங்களில் 4) சிறுநீர்ப்பை மேலணிக்கலங்களில்
 5) சதையிக்கலங்களில்

3) புரதம் ஒன்றின் அமைப்பழிவு என்பதனை எடுத்து விளக்குவது,
 1) புரதத்தின் முதலான கட்டமைப்பு மாறுதல்.
 2) பெப்ரைட்டு பிணைப்புக்களும், இரு சல்பைட்டு பிணைப்புக்களும் உடைக்கப்படுதல்.
 3) புரதத்தின் புடையான கட்டமைப்பு இழக்கப்படுதல்.
 4) பெப்ரைட்டு பிணைப்புக்களின் நீர்ப்பகுப்படைதல்.
 5) புரதமூலக்கூற்று வடிவத்தில் ஏற்படும் தற்காலிக மாற்றம்.

4) கலப்பிரிவுச் செயன்முறையில், DNA இன் தற்பகர்ப்பு நடைபெறுவது,
 1) இடை அவத்தையில் 2) முன் அவத்தையில்
 3) அனு அவத்தையில் 4) மேன்முக அவத்தையில்
 5) ஈற்று அவத்தையில்

5) சுவாசவீதம், வெப்பநிலை தொடர்பான மாற்றத்தைத் திறம்பட எடுத்துக்காட்டும் வரைபு, (X அச்சில் வெப்பநிலை, Y அச்சில் சுவாசவீதம்)




6) நீர் விருப்புள்ள பதார்த்தங்களினால் நீரமுத்தப்படித்திறன் சார்பாக, நீர்மூலக்கூறுகள் புறத்துறுஞ்சப்படுவதனால் ஏற்படும் நீரின் அசைவு,
 1) உட்கொள்ளுகை 2) திணிவோட்டம்
 3) பரவல் 4) குழியக்குடிதல்
 5) உயிர்ப்பான அகத்துறுஞ்சல்

7) விலங்குகளில் கட்டமைப்பிலும், தொழிற்பாட்டிலும் புரதங்களே சகல உயிர் சார்ந்த மூலக்கூறுகளிலும் பன்மை நிலையை உச்சமாகக் காண்பிக்கும் மூலக்கூறுகளாகும். அவற்றின் கட்டமைப்பு, தொழிற்பாட்டு தொடர்புகளில் பிழையானது?
 1) Immunoglobin - பாதுகாப்பு
 2) Trypsin - உணவுச் சமிபாடு
 3) Insulin - ஒரு சீர் திடநிலையைப் பேணுதல்
 4) Haemoglobin - கடத்தல்
 5) Elastin - முதலான சக்திக் களஞ்சியம்

8) பின்வரும் தாவரக்கூட்டங்களுள் எது கட்டமைப்பு ரீதியான பன்மைத்துவத்தை பெருமளவில் காண்பிக்கின்றது?
 1) Lycopyta 2) Pteropyta 3) Bryopyta
 4) Anthopyta 5) Cycadopyta

9) பின்வரும் மூலகங்களுள் எந்தவொரு மூலகம் தாவரங்களில் மிகக்குறைந்தளவில் குடிபெயரக்கூடியது?
 1) N 2) P 3) Fe 4) K 5) Mg

10) சுவானின் கலங்களினால் சூழப்பட்ட நியூரோன்களில் முனைவழிதல், மீள் முனைவாக்கம் என்பவை நிகழ்வது,
 1) இரன்வியரின் கணுக்களில் 2) கலவுடலில்
 3) மயலின் கவசங்களில் 4) வெளிக்காவு நரம்பு முனைகளில்
 5) கலமுதலுருவில்

11) நீண்ட காலத்துக்குரிய இருகருக்கூட்டு நிலை காணப்படுவது,
 1) Mucor 2) Agaricus 3) Saccharomyces
 4) Allomyces 5) Aspergillus

12) பின்வருவனவற்றுள் வீக்கமாற்றம் காரணமாக நிகழும் அசைவுக்கு உதாரணமாக அமையாதது.
 1) தொட்டாற்சுருங்கி தாவரங்களின் இலைகள் இரவில் வாடுதல்.
 2) Daisy பூ மலருதல்.
 3) தாமரை, அல்லி என்பனவற்றின் பூக்கள் ஒளியில் விரிதல்.
 4) Tulip பூக்கள் சூரியனின் பிரசன்னத்துடன் ...ருதல்.
 5) அகத்தி இலைகள் இரவில் வாடுதல்.

13) Symplast பாதை, புன்வெற்றிடப்பாதை வழியாக ...த நீரின் அசைவு இடம்பெறுவது,
 1) வேரின் அகத்தோல் 2) வேரின் பரிவட்டவுறை
 3) தண்டின் மையவிழையம் 4) வேரின் மேற்பட்டை
 5) இலைநடுவிழையக்கலங்கள்

14) சிறுநீரகத்தியின் அண்மையான மடிந்தகுழலுரு பகுதியில், கலன்கோள வடிதிரவத்துக்கும், குருதிக்கும் இடையிலான பதார்த்தப் பரிமாற்றங்களில் தவறானது?
 1) நீர் - பிரசாரணம்
 2) குளுக்கோசு - உயிர்ப்பான மீளஅகத்துறிஞ்சல்
 3) யூரியா - உயிர்ப்பான மீளஅகத்துறிஞ்சல்
 4) K + - உயிர்ப்பற்ற மீளஅகத்துறிஞ்சல்
 5) Na+ - உயிர்ப்பான மீளஅகத்துறிஞ்சல்

15) அதிரீனலீ ன் ஓமோனின் செயற்பாடு தொடர்பான சரியான கூற்று பின்வருவனவற்றுள் எது?
 1) குருதிக் குளுக்கோசு மட்டத்தை குறைவடையத்தூண்டும்
 2) சுவாச வீதத்தினைக் குறைவடையச் செய்யும்.
 3) உடல் அனுசேபவீதத்தினைக் குறைவடையச் செய்தல்.
 4) ஈரலில் கிளைக்கோசனை குளுக்கோசாக மாற்றுதல்.
 5) கண்மணியினை ...ருங்கச்செய்தல்.

16) சிற்றிடைவெளி இழையத்தில் அமீபாப்போலி அசைவினைக் காட்டும் திறனுடைய கலம் எது?
 1) நார் அரும்பர்கலம் 2) பெருந்தின்கலம்
 3) அடிநாட்டக்கலம் 4) முதலுருக்கலம்
 5) கொழுப்புக்கலம்

17) உயிரியல் படிக்கின்ற ஒரு மாணவன், விலங்கு ஒன்றின் பெயரைக் குறிப்பிடும்போது சாதிப்பெயரினையும், இனத்துக்குரிய வேறுபடுத்திப் பெயரினையும் இரு வேறு சொற்களாகக் குறிப்பிட்டான். இது, சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட முறையாகும். இதனை அறிமுகப்படுத்திய விஞ்ஞானி
 1) Ernest Hackle 2) Robert Wittakar
 3) Carl Wose 4) Theophrustus
 5) Carolaus Linneaus

18) பூச்சிகளின் சுவாசக்கட்டமைப்புத் தொடர்பான பின்வரும் கூற்றுக்களுள், பிழையானது?
 1) இவற்றின் சுவாசமேற்பரப்பாக புன்வாதனாளிகள் காணப்படும்.
 2) இவை கலனற்ற சுவாசக்கட்டமைப்பாக தொழிற்படும்.
 3) புன்வாதனாளிகளில் கைற்றின் தடிப்புகள் காணப்படமாட்டாது.
 4) சுவாசத்துவாரங்களில் தடித்த மெழுகுப்படை காணப்படுவதனால், பூச்சிகளில் நீர் இழக்கப்படுவது குறைக்கப்படும்.
 5) புன்வாதனாளியூடான வாயுக்கடத்தலில் குருதி பங்கேற்கமாட்டாது.

19) பின்வருவனவற்றுள் பிசிர்கள் அல்லது சவுக்குமுனைகள் எக்கூட்டத்தில் ஒருபோதும் காணப்படுவதில்லை?
 1) Nematoda 2) Annelida
 3) Mollusca 4) Cnidaria
 5) Echinodermate

20) ஒளித்தொகுப்பின் ஒளித்தாக்கங்கள் தொடர்பாக தவறான கூற்று
 1) அவை பச்சைய உருமணியின் தைலகோயிட்டு மென்சவ்வில் நடைபெறும்.
 2) இதன்போது விளைவாக ATP சக்தி மாத்திரம் உருவாக்கப்படலாம்.
 3) நிறமாலையின் சிவப்பு, பச்சைப் பகுதிகளிலேயே ஒளித்தாக்கவீதம் உயர்வானதாகக் காணப்படும்.
 4) ஒளித்தாக்கங்களில் சம்பந்தப்பட்ட இலத்திரன் வாங்கிகளும், காவிகளும், தைலகோயிட்டு மென்சவ்வுக்கு இடையில் அமைந்துள்ளன.
 5) ஒளித்தொகுதி II இன் $P_{osc}$ இனால் இழக்கப்படும். இலத்திரன்கள் நீரின் ஒளிப்பகுப்பின்போது விடுவிக்கப்பட்ட இலத்திரன்களால் மாற்றீடு செய்யப்படும்.

21) மனித சதையி தொடர்பாக பின்வருவனவற்றுள் சரியான கூற்று எது?
 1) சதையச்சாறு மூன்று புரதப்பிரிப்பு நொதியங்கள் கொண்டது.
 2) சதையச்சாற்றில் காணப்படும் insulin குருதிக்குளுக்கோசு மட்டத்தைச் சீராக்கும்.
 3) Secretin சதையியின் தொழிற்பாட்டைத் தூண்டுவதன் காரணமாக அதிகளவு சமிபாட்டு நொதியங்கள் கொண்ட சதையச்சாறு சுரக்கப்படும்.
 4) இதில் இலங்கர்ஹான்சின் சிறுதீவுகள் காணப்படுவதனால் புறஞ்சுரப்பியாகவும், சதையகுலைகள் காணப்படுவதனால் அகஞ்சுரப்பியாகவும் தொழிற்படுகின்றது.
 5) சதையச்சாற்றில் அதிகளவு சீதம் காணப்படுவதனால் முன்சிறுகுடலுக்கு வரும் உணவை திரளாக்கி வழுக்கும் இயல்பை ஏற்படுத்தும்.

22) மனித தசைகள் தொடர்பான கூற்றுக்களுள் ஏற்றுக்கொள்ளப்பட முடியாதது?
 1) அருட்டப்படக்கூடியன.
 2) வன்கூட்டுத்தசைகள், இதயத்தசைக் கலங்களில் வரிகள் காணப்படும்.
 3) மழமழப்பான தசைகள் கிளைகளுடன் இணைக்கப்பட்டிருக்கமாட்டாது.
 4) இதயத்தசைக்கலங்களை இணைத்து இடைபுகுந்த வட்டத்தட்டுக்கள் காணப்படும்.
 5) வன்கூட்டுத்தசைகள், இதயத்த...களின் சுருக்கம் தன்னாட்சி நரம்புத் தொகுதியினால் கட்டுப்படுத்தப்படும்.

23) நொதியங்கள் எதனையும் சுரக்காததும் ஆனால் உணவின் சமிபாட்டுடன் தொடர்பானதும், உணவுக்கால்வாயுடன் தொடர்புடையதுமான கட்டமைப்பு எது?
 1) ஈரல் 2) சதையி 3) இலிபர்கூனின்மறைகுழி
 4) உதரச்சுரப்பி 5) உணர்கொம்புச்சுரப்பி

24) பின்வருவனவற்றுள் உரியக் கொண்டு செல்லல் தொடர்பாக தவறானது,
 1) இது நேர் அமுக்கத்தின் கீழ் நடைபெறும்.
 2) நெய்யரிகுழாயூடாக உணவு அசைதலில், நீர்நிலையியல் அமுக்கம் பங்குகொள்கின்றது.

3) துணைக்கலங்களுக்கும், நெய்யரிக்கலன்களுக்கும் இடையிலான முதலுரு இணைப்புக்களூடாக சேதன உணவு நெய்யரிக்கலன்களுள் சுரக்கப்படும் உயிர்ப்பான செயன்முறையாகும்.
4) இதன்போது உணவு கொண்டு செல்லப்படும் பிரதான வடிவம் சுக்குரோசு ஆகும்.
5) நெய்யரிக்குழாயூடான உணவு அசைதலில், துணைக்கலங்களில் உள்ள இழைமணிகள் பங்கு கொள்கின்றன.

25) மனிதனின் நீர்ப்பீடனத்துடன் தொடர்புடைய அகஞ்சுரப்பியும், அதன் ஓமோனும் முறையே,
1) கீழ்கழுத்துச்சுரப்பி - தைமோசின்
2) கீழ்கழுத்துச்சுரப்பி - மூ அயடோ தைரோனின்
3) கேடயப்போலிச்சுரப்பி - அல்டஸ்ரோன்
4) கபச்சுரப்பி - வளர்ச்சி ஓமோன்
5) கேடயப்போலிச்சுரப்பி - தைரொக்சின்

26) தசைக்கலங்களில் நிகழும் நொதித்தலின்போது NADH இல் இருந்து இறுதியாக $H^+$ இனை ஏற்கும் சேர்வை எது?
1) பைரூவேற்று
2) எதனல் (Ethanal)
3) எதனோல் (Ethanol)
4) மூலக்கூற்று $O_2$
5) அசற்றல்டிகைட்டு

27) விலங்குகளில் குருதிச்சுற்றோட்டத்தொகுதி பற்றிய பின்வரும் கூற்றுக்களுள் பொய்யானது?
1) திறந்த சுற்றோட்டத்தொகுதி காணப்படுதல் எல்லா மொலஸ்க்காக்களுக்கும், சிறப்பியல்பு ஆகும்.
2) மூடிய சுற்றோட்டத் தொகுதிகளில், ஒட்சிசனேற்றிய குருதியினதும், ஒட்சிசன் அகற்றிய குருதியினதும் கலப்பு நடைபெலாம்.
3) முள்ளந்தண்டு விலங்குகளிலே குருதிக்கும், இழையங்களுக்கும் இடையே பதார்த்தப் பரிமாற்றம் குருதிமயிர்க்குழாயூடாக நடைபெறுகின்றன.
4) SA கணு முலையூட்டிகளில் விரைவு வீதமாக்கியாக தொழிற்படும்.
5) மனிதனில் பெருமளவான ஒட்சிசனைக் குருதியில் காவிச்செல்வது Heamoglobin ஆகும்.

28) நரம்பிணைப்பு பிளவூடான நரம்புக்கணத் தாக்கத்தில், நரம்பிணைப்பு பிளவில் இருந்து நரம்பிணைப்பின் முன்னான மென்சவ்வுக்கும், நரம்பிணைப்பின் பின்னான மென்சவ்வுக்கும் அசையும் அயன்கள் முறையே,
1) $Ca^{++}$, $K^+$
2) $Ca^{++}$, $Na^+$
3) $Na^+$, $Ca^{++}$
4) $Ca^{++}$, $Cl^-$
5) $K^+$, $Cl^-$

29) வித்தகவிழையக் கலங்களில் காற்றுச்சுவாசம் ஒன்றில் சுவாசக்கீழ்ப்படை அடையும் இரசாயண மாற்றம் தரப்பட்டுள்ளது.

$$C_6H_{12}O_6 + 6\,O_2 \rightarrow 6CO_2 + 6H_2O$$

இதிலிருந்து அறியக்கூடிய சுவாச ஈவின் பெறுமானம்
1) 2.0 2) 0.5 3) 1.0 4) 0.7 5) 0.9


30) மனிதனின் பற்கள் பற்றிய பின்வரும் கூற்றுக்களுள் சரியானது?
1) அவை யாவும் தனிவேருடையன.
2) மனிதனில் உதிர் பற்களின் எண்ணிக்கை 22 ஆகும்
3) பற்களின் பெரும் பகுதியினை பன்முதல் ஆக்குகின்றது.
4) மனிதனில் உதிர் பற்களில் கடவாய்ப்பற்கள் காணப்படுவதில்லை.
5) இவை மேல், கீழ்த்தாடைகளின் குழிகளில் அமைந்த ஓரினப்பற்களாக காணப்படும்.

31) சுகதேகியான மனிதனின் செவியில் சமநிலையை பேணுதலுடன் தொடர்புடைய வாங்கிகளைக் கொண்டுள்ள ஒரு கட்டமைப்பு,
1) தோற்பை
2) செவிப்புலனுக்குரிய கால்வாய்
3) செவி நரம்பு
4) அடிமென்சவ்வு
5) நீள்வட்டப்பலகனி

32) குருதியிலே ADH அதிகரிக்கும்போது மனித சீறுநீரகத்தியில் நீர் அதிகளவு மீள அகத்துறிஞ்சப்படுவது?
1) அண்மையான மடிந்தகுழலுரு
2) சேர்க்கும் கான்
3) என்லெயின் ஏறும்தடம்
4) சேய்மையான மடிந்தகுழலுரு
5) என்லெயின் இறங்கும் அவயவம்.

33) மனிதனில் அதிபரவிழுவிசைக்குக் காரணமாக அமையாதது பின்வருவன வற்றுள் எது?
1) மன அழுத்த நிலை
2) குருதியில் குறைவடர்த்தி உள்ள இலிப்போபுரத்தின் அளவு அதிகரித்தல்.
3) அதிகளவு மதுபானம் அருந்துதல்.
4) வயதாதல்
5) குருதியில் Oestrogen ஓமோனின் அளவு அதிகரித்தல்.

34) படத்தில் காட்டப்பட்டுள்ள கலம், கரைசல் தொகுதி தொடர்பான கூற்றுக்களுள் தவறானது எது?




1) இக்கலத்தின் நீரழுத்தம் -450kPa ஆகும்.
2) இக்கரைசல்த் தொகுதி ஓர் அதிபிரசாரண கரைசலாகும்.
3) கலம் முதலுருச்சுருக்க தொடக்க நிலையில் இருக்கும் போது கலத்தின் அமுக்க அழுத்தம் +350kPa ஆகும்.
4) கலம் சமநிலையில் காணப்படுகையில், கலத்தின் கனவளவு குறைவடைந்து காணப்படும்.
5) இக்கலத்தின் கரைய அழுத்தம் மாறாது காணப்படும்.

35) சுகதேகி மனிதன் ஒருவனின் இயக்க நரம்புக்கலத்தின் ஓய்வுமென்சவ்வு அழுத்தம் தொடர்பான பின்வரும் கூற்றுக்களுள் தவறானது?
1) அது கிட்டத்தட்ட - 70m V ஆகும்.
2) இதனைப் பேணுவதற்கு ATP சக்தி பயன்படும்.
3) இது தூண்டலினை வாங்கக்கூடிய நிலையாகும்.
4) இதன்போது $Na^+$ இனது செறிவு நரம்புக்கலத்திற்கு வெளியே இருப்பதனை விட நரம்புக்கலத்தினுள் மிக உயர்வாகக் காணப்படும்.
5) இது நரம்புக்கலத்தின் முதலுரு மென்சவ்வில் ஏற்படுகின்றது.

36) மானிடப் பெண்ணில் சூலிடல் நிகழும் காலத்தில் குருதியில் அதிகளவு செறிவில் காணப்படும் ஓமோன்?
1) FSH
2) LH
3) Inhibin
4) Oestrogen
5) GH

37) மனிதத்தோலின் கட்டமைப்பு, தொழில் பற்றிய பின்வரும் கூற்றுக்களுள் சரியானது,
1) மனிதத்தோலின் மேற்றோல் இருபடைகளைக் கொண்டது.
2) மனிதனின் மேற்றோலில் உள்ள பசினியன் சிறுதுணிக்கை அமுக்கத்துக்கு உணர்வுடையது.
3) மனிதத்தோலின் வியர்வைச் சுரப்பிகளினால் கிரியற்றினைன் கழிவுப்பொருளாக வெளியேற்றப்படும்.
4) தோலின் நெய்ச்சுரப்பிகளின் சுரப்புக்கள் தோலின் மேற்பரப்பையும், மயிரினையும் வளையக்கூடியதாகப் பேணும்.
5) மனிதத்தோலின் உட்தோல் தசையிழையத்தினால் ஆக்கப்பட்டது.

38) புகைக்கும் பழக்கம் காரணமாக ஏற்படும் நுழையீரல் நோய்களில் Emphysema ஒன்று, இதற்கு காரணம் புகையில் உள்ள சில பதார்த்தங்களினால்,
1) பிசிர்க்கலங்களில் பிசிர் அசைவு நிரோதிக்கப்படுதல்.
2) நீர்ப்பகுப்பு நொதியங்களினால் சிற்றறைச்சுவர் அழிக்கப்படுதல்.
3) Carboxyhaemoglobin தோன்றுதல்.
4) சுவாசக்குழாய்களில் அழற்சி ஏற்படுதல்.
5) சுவாசப்பைக்குழாய் மேலணிக் கலங்களில் கலப்பெருக்கத்தினைத் தூணடுதல்.

39) வைரசுகள் தொடர்பாக பின்வரும் கூற்றுக்களுள் தவறானது,
1) பெரும்பாலான தாவர வைரசுகள் கருப்பதார்த்தமாக DNA ஐக் கொண்டவை.
2) எல்லா வைரசுக்களும் கட்டுப்பட்ட ஒட்டுண்ணிகளாகும்.
3) இவை யாவும் கல ஒழுங்கமைப்பு அற்றவை.
4) உயிருள்ள கலங்களில் மாத்திரமே வைரசுக்கள் தம்மை பெருக்கிக்கொள்ளும்.
5) சில வைரசுக்கள் அவற்றின் கப்சிட்டுக்களில் பொலிமரேசு எனும் நொதியத்தைக் கொண்டுள்ளன.

40) சூழல் வெப்பநிலை மனிதனின் உடல் வெப்பநிலையிலும் குறைவடையும் போது மனிதனில் நடைபெறாத செயற்பாடு,
1) தோலின் கீழான குருதிமயிர்க்குழாய்கள் சுருக்கமடைதல்.
2) மயிர்நிறுத்தி தசைகள் சுருக்கமடைதல்.
3) குருதியில் தைரொக்சின், அதிரீனலின் ஓமோன்களின் அளவு குறைவடைதல்.
4) வியர்வைச் சுரப்பிகளின் தொழிற்பாடு நிரோதிக்கப்படும்.
5) குரோசின் குமிழ்கள், சுயாதீன நரம்பு முடிவிடங்கள் தூண்டப்படும்.

41 தொடக்கம் 44 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் தரப்பட்டுள்ள விடைகளுள் ஒன்று சரியானது / ஒன்றுக்கு மேற்பட்டவை சரியானவை. விடைகளுள் எது சரியானது / சரியானவை என முடிவு செய்க. பின்னர் பொருத்தமான இலக்கத்தை தெரிந்தெடுக்க.

A,B, D ஆகியன சரியானவை எனின் .................................. 1
A, C, D ஆகியன சரியானவை எனின் .................................. 2
A, B ஆகியன சரியானவை எனின் .................................. 3
C, D ஆகியன சரியானவை எனின் .................................. 4
வேறு விடை அல்லது விடைகளின் சேர்க்கை சரியெனின் ............... 5

| பொழிப்பாக்கிய புணிப்புரைகள் | | | | |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| A,B,D சரியானவை | A,C,D சரியானவை | A,B சரியானவை | C,D சரியானவை | வேறு விடை அல்லது விடைகளின் சேர்க்கை சரியானவை |

41) பச்சைய உருமணியின் தைலக்கோயிட்டுக்களில் சூரியசக்தி, இரசாயன சக்தியாக மாற்றீடு செய்யப்பட்டிருக்கும் சேர்வை / சேர்வைகள்.
1) ATP 2) NADPH 3) NADH 4) மாப்பொருள் 5) $O_2$

42) குருதியின் கனவளவை அதிகரிக்கச் செய்வதில் ஈடுபாடு காட்டும் ஓமோன் / ஓமோன்கள் எது/ எவை?
A) ADH
B) Aldestrone
C) LH
D) Renin
E) தைரொக்சின்

43) உயிரின் பாகுபாட்டில் Pylum Echinodermata களுக்கு தனித்துவமான இயல்பு / இயல்புகள் எது / எவை?
A) அகவன்கூடு காணப்படுதல்
B) குழாய்ப்பாதங்கள் காணப்படுதல்.
C) ஈராரைச்சமச்சீரைக் கொண்டிருத்தல்
D) நீர்க்கலன் தொகுதி காணப்படுகின்றமை
E) வறுகி காணப்படுதல்.

44) Eukaryota கலம் ஒன்றின் கலவட்டச் செயன்முறையின் போது தானாகவே இரட்டிப்படையும் கலப்புன்னங்கம் / கலப்புன்னங்கங்கள் எது / எவை?
A) இழைமணி
B) நிறமூர்த்தம்
C) பச்சையவுருமணி
D) புன்மையத்தி
E) புன்கரு



யாழ்.பாதுகாப்பு படையினரின் ஏற்பாட்டில் செவிப்புலனற்றவர்களுக்கான உபகரணம் வழங்கலும் பரிசோதனை நிகழ்வும் அண்மையில் பொதுமக்கள் தொடர்பு காரியாலயத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பரிசோதனை மேற்கொள்ளப்படுவதையும் வருகைதந்திருந்த பயனாளிகளையும் காணலாம்.

(பா, 25)

# மண்ணெண்ணைய் முத்திரை வழங்குமாறு கோரிக்கை

கிளிநொச்சி திருவையாறு பிரதேசத்தில் மின்சாரம் இல்லாத குடும்பங்களுக்கு சமுர்த்தியூடாக வழங்கப்படும் மண்ணெண்ணெய் முத்திரை வழங்கப்படவில்லை என மக்கள் [illegible]ம் தெரிவிக்கின்றனர்.

இக்கிராமத்தில் மக்கள் மீள்குடியேறி வசித்துவரும் நிலையில் குறிப்பிட்ட பகுதிக்கே மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது. எனினும் மின்சார இணைப்பு வழங்கப்படாத மக்களுக்கு சமுர்த்தியூடாக மண்ணெண்ணை முத்திரை வழங்கப்படுகின்றது.

இந்நிலையில் இக் குடும்பங்களுக்கு முத்திரை வழங்கப்படவில்லை எனவும் இதனால் மண்ணெண்ணெயைப் பெற முடியாதுள்ளதாகவும் தெரிவிக்கும் மக்கள் இதனால் தமது பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்படுவதாக கவலை தெரிவிக்கின்றனர்.

# சொற்பொழிவு

தொண்டமனாறு செவ்வச் சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டு பேரவையினால் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நடைபெறும் ஆன்மிக நிகழ்வில் நாளை மறுதினம் முற்பகல் 10.30 மணியளவில் சிறப்புச் சொற்பொழிவு இடம்பெறவுள்ளது.

இதில் வேகம் கெடுத்தாண்ட வேந்தன் என்னும் விடயம் பற்றி ஐ.சண்முகலிங்கம் சொற்பொழிவாற்றவுள்ளார்.

# நயினாதீவு நாகபூஷணி அம்மனுக்கு வருடாந்த மஹோற்சவம்

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 28 ஆம் திகதி சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத் துடன ஆரம்பமாகி தொடர்ந்து 15 [illegible]கள் திருவிழா இடம்பெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் எதிர்வரும் யூலை 2 ஆம் திகதி இரவு முத்துச்சப்பறமும் 4 ஆம் திகதி இரவு கைலைக்காட்சியும், 6 ஆம் திகதி பகல் 108 சங்காபிஷேகமும் 7 ஆம் திகதி சிவபூசைக் கைலைக்காட்சியும் இரவு திருமஞ்சமும் 8 ஆம் திகதி விசேட கருட சர்ப்பபூசை, வாயு பட்சணி நாகம் வீதியுலா இடம் பெற்று இரவு பூந்தண்டிகை உற்சவமும் இடம்பெறவுள்ளது.

9 ஆம் திகதி குதிரை வாகனத்திருவிழாவும், 10 ஆம் திகதி பகல் கைலைக்காட்சியும் இரவு சப்பறமும் 11 ஆம் திகதி இரதோற்சவமும், 12 ஆம் திகதி காலை தீர்த்தோற்வமும் மாலை திருவூஞ்சலும் கொடியிறக்கமும் இடம்பெறவுள்ளது. தொடர்ந்து 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு பூங்காவனத்திருவிழாவும் தெப்போற்சவமும் இடம்பெறவுள்ளது.

இவ் ஆலய உற்சவத்தை முன்னிட்டு யாத்திரிகர்கள் இம்முறையும் அமுதசுரபி அன்னதான சபையினர் தாகசாந்தி நிலையத்தினர் போக்குவரத்து சேவையினர்,மோட்டார் படகு சேவையின் சுகாதார சேவைப் பகுதியினர் தொண்டர் சபையினர் சாரணர்கள், சென்.ஜோண்ஸ் அம்புலன்ஸ் முதலுதவிப் படைப்பிரிவினர், செஞ்சிலுவைச் சங்கத்தினர், மக்கள் நலன்புரிச் சங்கத்தினர், அனைவரும் அடியார்களுக்கு வேண்டிய ஒழுங்குளைச் செய்துள்ளதாக ஆலய அறங்காவலர் சபையினர் அறிவித்துள்ளனர்.


## வாழ்க வளமுடன்



பெயர் : சதீஸ் அபிநாத்
முகவரி: வேலணை மேற்கு
வேலணை-6
அகவை
4 இல்
பல்லாண்டு காலம்
வாழ்கவென
வாழ்த்துகின்றோம்



பெயர் : பிரதீபன் லத்திகா
(அபிஸா)
முகவரி: நல்லூர்
யாழ்ப்பாணம்
அகவை
8 இல்
பல்லாண்டு காலம்
வாழ்கவென
வாழ்த்துகின்றோம்

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :- ..............................
முகவரி :- ..............................
பிறந்த ஆண்டு :- ..............................
கூப்பன் ஐந்தும், புகைப்படமும்
..............................
பெற்றோர் கையொப்பம்


# வள்ளி கணவன் முருகனுக்குரிய வைகாசி விசாகம் இன்றாகும்



உலகெல்லாம் நிறைந்து விளங்குகின்ற [illegible]ல்லாம்வல்ல பரம்பொருளான முருகப் பெருமானுக்குரிய வைகாசி விசாகம் இன்றாகும். வள்ளிகணவன் முருகனின் அருள்பெற இந்த வைகாசி விசாகம் உகந்த திருநாளாகும். கலியுகவரதன் கந்தப் பெருமான் தம்மை வழிபடும் அடியார்களின் துன்பதுயரங்களைக் களைந்து இன்னருள் சுரக்கும் இனிய நன்னாள் இதுவாகும்.

இன்றைய இந்த வைகாசி விசாக சுப தினத்தில் விரதமிருந்து கந்தனைக் கைதொழுதால் விவாகமாகாதவர்களுக்கு விவாகமும்புத்திரபாக்கியம் இல்லாதவர்களுக்கும பிள்ளைப்பேறும் கிடைக்கும். என்று புராணவாயிலாக அறியக்கிடக்கின்றது.

இந்த வைகாசி விசாக விரதத்தை அனுட்டிக்க வி[illegible]ம்புவர்கள் இன்று காலை எழுந்து [illegible]த புண்ணிய நீராடி சிவசிந்தனையுடன் சந்தியாவந்தனம் முடித்து ஏதாவது ஒரு முருகப்பெருமான் குடியிருக்கும் கோயிலுக்குச் சென்று ஆலய தரிசனம் செய்தல் வேண்டும்.

இன்று மதியம் ஒருவேளை யாராவது ஓர் அடியாருக்கு உணவளித்து அவருக்கு வஸ்திரதானமும் எம்மால் முடியுமாயின் பொருள் உதவியும் செய்து மகிழ்வித்து அனுப்புதல் நல்லது. இன்றைய இந்த நாளில் மதியம் மட்டும் ஒருபொழுது உணவெடுத்து இரவு பால், பழம் அருந்தலாம்.

இந்த வைகாசி விசாகத்தன்று முருகப்பெருமானுக்கு நடைபெறுகின்ற விசேட அபிஷேக ஆராதனை பூசை வழிபாடுகளில் நாமும் கலந்துகொண்டு சிவசிந்தனையுடன் காலங்கழிக்க வேண்டும். எக்காரணங்கொண்டும் வேறு சிந்தனைகளில் மனதை அலயவிடக் கூடாது. தேவார திருவாசகங்களைப் பாராயணஞ் செய்யலாம். அல்லது முருகப் பெருமானுடைய தோத்திரங்களைச் சொல்லிக்கொண்டு அவரது நினைவுடனேயே இருக்கலாம். அல்லது முருகப் பெருமானுடைய அற்புதலீலைகளைப் பற்றிய நூல்களை வாசிக்கலாம்.

இன்றைய இந்த நல்ல நாளில் எமது வினைகளும் பாவங்களும் தொலைய வேண்டும். என்று கற்பூரச்சட்டி ஏந்தி முருகப்பெருமானை அந்த ஒளியிலேயே கண்டு தரிசித்து மகிழலாம் முத்தமிழால் வைதாரையும் வாழ வைக்கும் முருகப்பெருமான் உதித்த தினம் இந்த வைகாசி விசாகமேயாகும். ஆகவே முருகனுக்கு இன்று விசேடநாள் ஆதலால்.

முருகனுக்கு இன்று பிறந்தநாள் அதாவது அவதார தினமாகும்.

ஆகவே, முருகப்பெருமானின் அருள்பெற தமிழர்களுக்கு உகந்தநாள் இன்றைய வைகாசி விசாகமே. இன்று சில கோயில்களில் முருகப்பெருமானுக்கு விசேட சங்காபிஷேகங்கள், புனித அலங்காரங்கள், ஆராதனைகள், பூசை வழிபாடுகள், உற்சவங்கள் பலவும் சிறப்பாக இடம்பெறுவதைக் காணலாம். இன்றைய விசாகத்தில் விரதமிருந்து கந்தனைக் கைதொழுது அவனருளாலே அவன்தாள் வணங்கி அருள்பெற்றுய்ய நம்மை நாமே தயார்ப்படுத்திக் கொண்டு நல்வாழ்வுக்கு வழி சமைப்போமாக

* * *

**கலாபூஷணம்**
**இராசையா ஸ்ரீதரன்**

# இந்தியா - சீனா எல்லைப் பிரச்சினை

# மோடி - ஜின்பிங் தீர்க்க வாய்ப்பு

(பீஜிங்)

இந்தியாவின் பலம் பொருந்திய பிரதமர் மோடியின் தலைமை மற்றும் சீனாவின் வலுவான அதிபர் ஜி ஜின்பிங் இணைந்து, இரு நாடுகளின் எல்லைப் பிரச்சினையை எளிதில் தீர்க்கலாம்" என, சீன அரசின் அதிகாரபூர்வ, "குளோபல் டைம்ஸ்" பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தப் பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

சீன அதிபராக இருக்கும் ஜி ஜின்பிங், ஆளும் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவராகவும், நாட்டின் அதிபராகவும், இராணுவத் தலைமை தளபதியாகவும் உள்ளார். சீனாவில், அதிக பலம் கொண்ட தலைவராக அவர் விளங்குகிறார். அது போல், 30 ஆண்டுகளுக்குப் பின், இந்தியாவில் தனியொரு கட்சியாக பா.ஜ.க. தனிப்பெரும்பான்மை பெற்றுள்ளது. நரேந்திர மோடி தலைமையிலான, பா.ஜ.க. அரசு, வலுவான அரசாக விளங்குகிறது. இந்த இரண்டு அரசுகளும், இந்தியா - சீனா இடையே, 4,000 கிலோமீற்றர் எல்லைப் பிரச்சினையை எளிதாக தீர்க்கலாம்.

சீனாவின் மேற்கு பகுதியில், இந்தியாவுடனான எல்லை பிரச்சினையை, மோடி தலைமையிலான அரசுடன் சுமுகப் பேச்சு நடத்தி தீர்க்கலாம்.அதன் ஒரு கட்டமாகத் தான், சீன வெளியுறவுத் துறை அமைச்சர், வாங்யி, இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு, அந் நாட்டின் வெளியுறவுத் துறை அமைச்சர், சுஷ்மா சுவராஜை சந்தித்துப் பேசியுள்ளார். இவ்வாறு, அந்த பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கராச்சி குண்டுவெடிப்புக்கு பதிலடி

## இராணுவத்தின் எதிர் தாக்குதலில் 15 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்



கராச்சி குண்டுவெடிப்புக்கு பதிலடி கொடுக்கும் வகையில் பாகிஸ்தான் இராணுவம் தலீபான் தீவிரவாதிகளின் மறைவிடங்கள் மீது நேற்று முன்தினம் விமானத் தாக்குதல் நடத்தியதில் 15 தீவிரவாதிகள் கொல்லப்பட்டுள்ளனர். கராச்சி விமான நிலையத்தை தாக்கிய தலிபான் தீவிரவாதிகளின் செயல் நாடெங்கும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.


இந்நிலையில் நாட்டின் வடக்கு மாகாணமான கைபர் பழங்குடி மாகாணத்தில் உள்ள தலீபான் தீவிரவாதிகளின் மறைவிடங்களை குறிவைத்து பாகிஸ்தான் இராணுவம் விமானத் தாக்குதல் நடத்தியுள்ளது.

இந்த விமானத் தாக்குதலில் 7 மறைவிடங்கள் அழிக்கப்பட்டதுடன், 15 தீவிரவாதிகள் கொல்லப்பட்டுள்ளனர்.

உலகச் செய்திகள்

# கூடங்குளம் அணு உலையின் பாதுகாப்பை அதிகப்படுத்தவும்

## இந்தியா வேண்டுகோள்



(மாஸ்கோ)

இந்தியாவின் நெல்லை மாவட்டம் கூடங்குளத்தில் ரஷ்யா உதவியுடன் ரூபா 17,200 கோடியில் அணுமின் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. இதில் தலா 1,000 மெகாவாட் உற்பத்தித்திறன் கொண்ட 2 அணு உலைகள் அமைக்கப்பட்டுள்ளது.

3 ஆவது மற்றும் 4 ஆவது அணு உலைகள் அமைப்பதற்கான ஒப்பந்தமும் இந்தியா, ரஷ்யா இடையே கையெழுத்தாகியுள்ளது.

இந்த நிலையில் ஜப்பான் புகுஷிமா அணு உலையில் சுனாமியை தொடர்ந்து ஏற்பட்ட விபத்தை அடுத்து தற்போது இந்தியாவும் கூடங்குளம் அணுமின் நிலையத்தின் பாதுகாப்பை அதிகப்படுத்தும்படி கோரிக்கை விடுத்துள்ளதாக ரஷ்ய அணு சக்தி அதிகாரிகள் கூறியுள்ளனர்.

இதுதொடர்பில் ரஷ்ய அணுமின் நிலைய நிறுவனத்தின் முதல் துணை ஜெனரல் அஸ்மோலோவ் நிருபர்களிடம் கூறியதாவது,

கூடங்குளம் அணுமின் நிலையத்தின் பாதுகாப்பை அதிகப்படுத்த வேண்டும் என்ற இந்தியாவின் வேண்டுகோள் எங்களுக்கு கிடைத்துள்ளது. இதுபோன்ற திட்டங்களில் அதிக கவனம் செலுத்துவதில் தவறில்லை. கூடங்குளம் அணு உலைகள் 4 அடுக்கு பாதுகாப்பு கொண்டது.

திடீர் நெருக்கடி ஏற்படும் போது அந்த அணு உலை இயங்குவது உடனடியாக நின்றுவிடும். அணு உலைகளை குளிரவிக்கும் தண்ணீர் கிடைப்பதில் ஏதேனும் தடை ஏற்பட்டால் கூட, தொடர்ந்து 24 மணி நேரத்திற்கு தண்ணீர் கிடைப்பது இதில் உறுதி செய்யப்பட்டுள்ளது.

# திபெத் விவகாரம் தொடர்பில் நிபந்தனையற்ற பேச்சு அவசியம்

(வொஷிங்டன்)



திபெத் விவகாரம் தொடர்பாக தலாய் லாமாவுடன் நிபந்தனையற்ற பேச்சு வார்த்தை நடத்த வேண்டும் என சீனாவுக்கு அமெரிக்கா கண்டிப்புடன் தெரிவித்துள்ளது.

அமெரிக்க அரசின் துணைச் செய்தி தொடர்பாளர் மேரி கார்ப் நிருபர்களிடம் கூறியதாவது,

சீனாவின் ஆதிக்கம் உள்ள திபெத் பகுதிகளில் மனித உரிமை நிலைமைகள் குறித்து அமெரிக்கா கவலையுடன் பரிசீலித்து வருகிறது.

திபெத் விவகாரம் குறித்து அதன் தலைவர் தலாய், லாமாவுடன் சீனா உறுதியான பேச்சு வார்த்தைகளை முன்னெடுக்க வேண்டும் என்று தொடர்ந்து அமெரிக்கா வலியுறுத்தி வருகிறது.

திபெத் பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு அவர்களது கலாசாரம் மற்றும் பண்பாட்டிற்கு தொடர்ந்து ஏற்பட்டு வரும் அச்சுறுத்தல் குறித்து இருதரப்பும் பேச்சு வார்த்தை நடாத்த வேண்டும்.

இது தொடர்பான சீனா எந்த வித முன் நிபந்தனையும் இன்றி தலாய்லாமாவுடன் பேச்சுவார்த்தை நடத்த முன்வரவேண்டும். இதற்கு சீனா ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்படுகிறது.


# ஹிலாரி கிளின்டன் மறைமுக பிரசாரம்




அமெரிக்க முன்னாள் வெளியுறவுத் துறை அமைச்சரான ஹிலாரி கிளின்டன் முக்கிய நகரங்களில் தனது சூறாவளி சுற்றுப் பயணத்தை தொடங்கவுள்ளார்.

2016 இல் நடைபெறவுள்ள அதிபர் தேர்தலில் ஜனநாயகக் கட்சி சார்பில் ஹிலாரி கிளின்டன் அதிபர் வேட்பாளராகப் போட்டியிடக்கூடும் என்று பெரிதும் எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கு முன்னோட்டமாக புத்தக விளம்பரத்தோடு தேர்தல் பிரசாரத்தையும் அவர் மறைமுகமாக மேற்கொள்வார் என்று தெரிகிறது. அதிபர் ஒபாமா ஆட்சியில் 4 ஆண்டுகள் வெளியுறவுத்துறை அமைச்சராக இருந்தபோது எடுத்த முடிவுகள், முக்கிய நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டு ஹிலாரி புத்தகத்தை எழுதியுள்ளார்.

# குடியரசுத் தலைவரின் உரை கட்சித் தலைவர்கள் பாராட்டு







(சென்னை)

குடியரசு தலைவரின் உரை இந்தியாவின் எதிர்காலம் குறித்து நம்பிக்கை அளிப்பதாக உள்ளது என்று தமிழக கட்சித் தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதி உரையில் இந்திய மக்கள் அதிகமாக பாதிக்கப்படுகின்ற ஊழலை ஒடுக்குவதற்கும், வறுமையை ஒழிப்பதற்கும் உறுதியான நடவடிக்கைகள் குறித்து அறிவித்திருப்பது வரவேற்கத்தக்கது.

மக்கள் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யும் விதத்தில் ஜனாதிபதி உரை அமைந்துள்ளது மட்டற்ற மகிழ்ச்சி அளிக்கிறது என தே.மு.தி.கட்சி தலைவர் விஜயகாந்த் தெரிவித்துள்ளார்.

வேளாண் தொழிலை இலாபகரமான ஒன்றாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும், வேளாண் விளைபொருட்களின் கொள்முதல் மற்றும் விலை தொடர்பான அனைத்துப் பிரச்சினைகளுக்கும் விவசாயிகளுக்கு சாதகமான வகையில் தீர்வு காணப்படும் என்று உத்தரவாதம் அளிக்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது. என பா.ம. கட்சி தலைவர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

குடியரசுத் தலைவர் உரையில் முன் வைத்துள்ள திட்டங்கள் புதிய விடியலுக்கு கட்டியங்கூறும் வகையில் அமைந்து இருக்கின்றன.என ம.தி.மு கட்சிப்பொதுச் செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.

**கற்றுக்கொண்ட...**

பௌத்த ஆணைக்குழு
அறிக்கையில் வெளியிடப்படும்
சித்தாந்தமும் மற்றும் திட்டமும்
அதுதான், மற்றும் அந்த
சித்தாந்தத்தின் பிடிவாதம் - மறுப்பு
அல்லது இயலாத வகையில்
முறித்தல் அல்லது அதைக் கடந்து
செல்வது - நாட்டில் போருக்குப்
பிந்தைய காலத்தில் ஒரு நீடித்த
சமாதானம் ஏற்படுவதை தடுப்பதே
ஆகும்.
சுதந்திரத்துக்கு பிந்தைய பௌத்த
சிங்கள குட்டி முதலாளித்துவம்
சர்வாதிகார வரிசையில் அதன்
கடுமையாக தேய்ந்துபோன
சித்தாந்தம் மூலம் வளர்ச்சி பெற்று
ஆணாதிக்கம் மிக்க சிங்கள
நடைமுறையாக மாறியது, இது
மரபு ரீதியாக பாலைவனப்
பசுஞ்சோலையாக மலர்ச்சி
பெற்றிருந்த ஒரு நாட்டினை தரிசு
நிலமாக மாற்றியது.
வட மாகாணசபை தேர்தலை
நடத்தும் துணிச்சலான முடிவை
மகிந்த ராஜபக்ஸ எடுத்த
போதிலும், அது சீர்திருத்தத்துக்கு
எதிரானதும் மற்றும் நிலையற்ற
போதனைகளின் ஆதிக்க
பண்புகளின் மீள் வரவாகவுமே
உள்ளது. ஆகக் குறைந்தது
அறுபது வருடங்களுக்கு முன்பு
1954 - 1956, காலத்தில் தோற்றம்
பெற்றதுதான், இன்று வட
மாகாணசபையை முடக்கி
உள்ளதுடன், எல்.எல்.ஆர்.சி.யின்
சீர்திருத்தங்களையும்
ஸ்தம்பிதமடையச் செய்துள்ளது.

# நன்நீர் மீன் உற்பத்தி முயற்சி

# வடக்கு இளைஞர்களுக்கு பயிற்சி

## ஆளுநருடனான சந்திப்பில் வியட்நாம் தூதுவர் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

இலங்கைக்கான வியட்நாம் தூதுவர் நேற்று முற்பகல் வட மாகாண ஆளுநர் அலுவலகத்திற்கு விஜயம் செய்து வடமாகாண அபிவிருத்தி குறித்து ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியைச் சந்தித்துக்கலந்துரையாடியுள்ளார்.

இதன்போது வடமாகாணத்தின் நீர்வாழ் உயிரினங்களை வளர்த் தெடுப்பதற்குரிய சிறந்த காணமாக தற்போது வடமாகாணம் காணப்படுகின்றது. இதனூடாக தொழில்வாய்ப்பை பெறயிருக்கின்ற இளைஞர், யுவதிகளக்கான தொழில்நுட்ப பயிற்சிகளை வழங்கவிருப்பதாக வியட்நாம் நாடு தயாராக இருப்பதாக இலங்கைக்கான வியட்நாம் உயர்ஸ்தானிகர் தொன சீங்தாஸ் தெரிவித்தார். மேலும் அவர் தெரிவிக்கையில்,

வடக்கின் பலதசாப்த யுத்தத்திற்கு பின்னர் 5 வருடங்களில் வடக்கில் அரசாங்கத்தினால் மேம்படுத்தப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் பாராட்டத்தக்கவை அவற்றின் ஊடாக வடபகுதி மக்கள் நிலையான பாதுகாப்பினையும் சுதந்திரக்காற்றினையும தற்போது அனுபவித்துவருகின்றனர். என இலங்கைக்கான வியட்நாம் உயர்ஸ்தானிகர் தொன சிங் தாஸ் தெரிவித்தார்.

இலங்கைக்கான வியட்நாம் உயர்ஸ்தானிகர் தொன் சிங் தாஸ். மற்றும் இரு உயர் அதிகாரிகள் குழுவினர் நேற்று யாழ். மாவட்டத்திற்கு விஜயம் செய்தனர் இவர்கள் முற்பகல் யாழ். மாவட்டத்தில் அமைந்துள்ள வடமாகாண ஆளுநர் அலுவலகத்தில் வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறியை சந்தித்து கலந்துரையாடிய பின்னர் இக் கருத்தினை அவர் தெரிவித்தார்.

வடபகுதியில் உள்ள இன ஐக்கிய செயற்பாடுகள் தொடர்பாக திருப்தி அடையமுடிவதாக இலங்கைக்கான வியட்நாம் உயர்ஸ்தானிகர் தொன் சிங் தாஸ் தெரிவித்தார்.

வியட்நாம் இலங்கைக்கான ஆதரவினை தொடர்ந்துவழங்கும் எனவும் இதன் ஊடாக சுகாதாரம், கல்வி சமூகநலன் மேம்பாடுகள், மீள்கட்டுமானம், போன்ற துறைகளுக்கான நடவடிக்கைகள் எதிர்காலத்தில் எடுக்கப்படும் எனவும் அவர்தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து வடமாகாணத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற அபிவிருத்தி செயற்றிட்டங்களில் கல்வி, சுகாதாரம், உட்கட்டமைப்பு அபிவிருத்தி போன்றவை அடைந்துள்ள முன்னேற்றம் பற்றியும் வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறியினால் விரிவான விளக்கம் அளிக்கப்பட்டன.

இச்சந்திப்பில் வடமாகாண ஆளுநரின்செயலாளர் இ. இளங்கோவன் கலந்து கொண்டனர்.

இவர்கள் நேற்று யாழ். மண்டைதீவு கடற்கரைப் பகுதிக்கும் கிளிநொச்சி பூநகரி பகுதியின் வலைப்பாடு பகுதிக்கும் விஜயம் செய்து கடல்நீர் உயிரினங்களின் பகுதிகளையும் பார்வையிட்டனர் இன்று பிற்பகல் முல்லைத்தீவுப் பகுதிக்கும் விஜயம் செய்யவுள்ளனர். (25, பா)

# வலம்புரிச்சங்கு விற்க முயற்சி மூவருக்கு தலா 2 இலட்சம் பிணை

(யாழ்ப்பாணம்)

வலம்புரிச் சங்கினை விற்பனை செய்ய முயன்ற மூவரையும் தலா 2 இலட்சம் ரூபா பிணையில் செல்ல மல்லாகம் நீதிமன்ற நீதிபதி ஜோய் மகிழ்தேவா உத்தரவிட்டுள்ளார்.

யாழ். மானிப்பாய்ப் பகுதியில் விற்பனை செய்ய முற்பட்டோர் நேற்று முன்தினம் விசேட அதிரடிப் படை மற்றும் மானிப்பாய் பொலிஸார் இணைந்து கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட நவாலி மற்றும் காக்கைதீவுப் பகுதியைச் சேர்ந்த மூவரையும் நேற்று மல்லாகம் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்திய போது மேற்படி நபர்கள் மூவரையும் தலா 2 இலட்சம் ரூபா பிணையில் செல்ல அனுமதித்ததுடன், வழக்கினை எதிர்வரும் 22ஆம் திகதிவரை ஒத்திவைத்தார். (25)

# குடும்பப்பெண் உயிரிழந்த நிலையில் முல்லை.வள்ளிபுனத்தில் மீட்பு

முள்ளியவளை, வள்ளிபுனம் பகுதியில் நேற்றுமுன்தினமிரவு குடும்பப் பெண் ஒருவர் உயிரிழந்த நிலையில் அவரது வீட்டிலிருந்து மீட்கப்பட்டுள்ளார். வரதராஜன் துஷாந்தி (வயது -31) என்பவரே இவ்வாறு உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்டவராவார். தனது மனைவி உயிருக்குப் போராடுவதாக கணவர் அயலவர்களுக்கு கொடுத்த தகவலையடுத்து அயலவர்கள் அங்கு சென்று பார்த்த போது அவர் சுயநினைவற்ற நிலையில் காணப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது. உடனடியாக அயலவர்கள் அவரை வைத்தியசாலைக்குக் கொண்டுசென்றபோது ஏற்கனவே அவர் உயிரிழந்துவிட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது. கணவன் மனைவிக்கிடையில் அடிக்கடி குடும்பத்தகராறு இடம்பெறுவதாகவும் இவரது மரணத்தில் சந்தேகம் இருப்பதாகவும் உறவினர்கள் தெரிவித்தனர். பிரேத பரிசோதனைக்காக அவரது சடலம் புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

### நாடாளுமன்றமே...

றும்போதே அவர் இதைத் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா கொண்டுவந்த ஒரு தீர்மானத்தை அடுத்து, இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரிக்க ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது என்று ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் தலைவர் நவிப்பிள்ளை நேற்று அறிவித்ததை அடுத்தே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

### 101 கிராம...

இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கருத்துத் தெரிவிக்கும் போது, உங்களது ஆற்றல்களுக்கு அமைவாக இன்றைய தினம் உங்களது வாழ்க்கைக்கு ஒரு நம்பிக்கை கிடைத்துள்ளது.

இம் மாவட்டத்தில் எமது அரசியல் நிலைப்பாட்டைப் பொறுத்தே நியமனங்கள் உங்களுக்கு வழங்கப்படுகின்றன.

அரசாங்கத்தின் கொள்கையினைப் பின்பற்றி அதனை செயற்படுத்தி எமது மக்களின் நலன்சார்ந்து நீங்கள் அனைவரும் பணியாற்ற வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றேன்.

எமது சமூகத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய பிரதிநிதிகளாக நீங்கள் சரியான திசை நோக்கி முன்னேற்றகரமான வழியில் செல்ல வேண்டும் என்பதே எனது விருப்பமாகும்.

அங்கே எதிர்க்கட்சியைப் போன்ற தோற்றத்தைக் காட்டிவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மக்களை தவறான திசையில் இட்டுச் செல்லவே அயராத முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றனர்.

தவறானதும் பொய்யானதுமான பரப்புரைகளை முன்வைத்து அந்த சமூகத்தை மேலும் மேலும் பின்நோக்கி நகர்த்துவதே அவர்களது நோக்கம்.

இதனை எமது மக்கள் இப்போது நன்கு புரிந்து கொண்டுள்ளனர் என்று தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (25)

### ஒத்துழைக்கமாட்டோம்...

நவிப்பிள்ளை, ஆற்றிய உரையினை அடுத்து இலங்கை பிரதிநிதிகள் குழுவின் தலைவர் ரவிநாத் ஆரியசிங்க இதனைத் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகள் இயக்கம் இலங்கையில் முற்றாக அழிக்கப்பட்டிருந்தாலும், சர்வதேச ரீதியில் இந்த அமைப்பின் செயற்பாடுகள் தொடர்ந்தும் இடம்பெறுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நல்லிணக்கம் மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்பும் செயற்பாடுகள் தொடர்பில் இலங்கை அரசாங்கம் தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகிறது.

இலங்கை மக்களின் நலன்கள் தொடர்பில் இதய சுத்தியுடன் ஆர்வம் கொண்டுள்ள நாடுகள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் ஆகியவற்றுடன் பொறுப்புக்கூறல் விடயத்தில் தொடர்ந்தும் இணைந்து பணியாற்றி வருவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

### மாற்றமடையாமல்...

பிள்ளை இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கையில் யுத்தம் முடிவடைந்து 5 ஆவது ஆண்டு கடந்த மாதம் நிறைவடைந்தது. எனினும் இலங்கையில் பயங்கரவாதத்தாலும் போரினாலும் உண்டான வடுக்கள் இன்னும் மாறவில்லை.

பொறுப்புக் கூறுதலையும் அதன் மூலம் நல்லிணக்கத்தை முன்னெடுப்பதற்கும் இந்தப் பேரவையினால் அதிகாரமளிக்கப்பட்டு, முழுமையான விசாரணைகளை நடத்துவதற்கு எமது அலுவலகம் நிபுணர் குழுவை நியமித்துள்ளது.

இந்தக் குழுவினருக்கு பல நிபுணர்களும் அதிகாரமளிக்கப்பட்டவர்களும் உதவி வழங்குவதற்கு தயாராக உள்ளனர்.

நம்பகமான உண்மையினை கண்டறியும் செய்முறையுடன் ஒத்துழைக்க இந்த வாய்ப்பை பயன்படுத்திக்கொள்ளுமாறு நான் இலங்கை அரசாங்கத்திடம் கேட்கிறேன் என பிள்ளை மேலும் தெரிவித்துள்ளார்.

### ஒத்துழைக்க வேண்டும்..

விசாரணையுடன் தொடர்புபட்டோரை, இலங்கைக்குள் அனுமதிக்க வேண்டும் என்றும் அவர்கள் கேட்டுக் கொண்டனர்.

ஜெனிவாவுக்கான அமெரிக்காவின் புதிய தூதுவராகப் பொறுப்பேற்ற, கெய்த் ஹாப்பர் தனது உரையில், தனது பணியகத்தின் ஊடாக, இலங்கை குறித்த விசாரணைக் குழுவை ஒழுங்கமைத்ததற்கு ஐ.நா மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளைக்கு நன்றி தெரிவித்துக் கொண்டார்.

இலங்கையில் நீதி, பொறுப்புக்கூறல், நல்லிணக்கம் என்பனவற்றை ஊக்குவிக்க, விசாரணைச் சமிக்ஞைகள் முக்கியமானவை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

விசாரணையாளர்களை அனுமதித்தும், ஐ.நா மனிதஉரிமை ஆணையாளர் பணியகத்துக்கு தகவல்களை வழங்குவோர் மீதான பதிலடிகளைத் தவிர்த்தும் விசாரணைக்கு இலங்கை அரசாங்கம் முழுமையாக ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று தாம் கேட்டுக் கொள்வதாகவும் அவர் குறிப்பிட்டார்.

### ஜெயலலிதா...



தீயிட்டு எரித்தனர்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் உருவப்படமும் இந்தப் போராட்டத்தில் கொண்டு வரப்பட்டதாயினும், அது எரிக்கப்படவில்லை

ஆர்ப்பாட்டக்காரர்களின் செயதித் தொடர்பாளர் வசந்த பண்டார கூறுகையில், இலங்கைக்கு எதிராகச் செயல்பட இந்திய அரசின் மீது தேவையற்ற செல்வாக்கைச் செலுத்தி வரும் ஜெயலலிதாவைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் நடத்துகிறோம் என்றார்.

பெங்கமுவே நாலகா என்ற புத்த தேரர், ஜெயலலிதா இலங்கைக்கு எதிராகச் சிந்திக்கும் மேற்கத்திய நாடுகளின் ஆதரவினால் இதைச் செய்கிறார் என்று சாடினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அனைத்து சமூகத்தினரும் அமைதியாக, சமாதானமாக இங்கு வாழ்ந்து வருகின்றனர், 30ஆண்டுகால போருக்குப் பிறகு கஷ்டப்பட்டு எட்டிய அமைதி 13ஆம் திருத்தம் அமுல் செய்யப்பட்டால் குலைந்து போகும்' என்றார்.

### அழுத்தத்திலிருந்து...

யல் தீர்வுக்கு செல்லும் பட்சத்தில் சர்வதேச அழுத்தங்களிலிருந்து இந்தியாவே எம்மை விடுவிக்கும். சர்வதேச மேடையில் இந்தியா எமது பக்கத்திலேயே இருக்கும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

அமைச்சர் மேலும் குறிப்பிடுகையில், நாட்டின் தேசியப் பிரச்சினைக்கு சகல இன மக்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அரசியல் தீர்வு ஒன்றுக்கு செல்வதன் மூலமே சர்வதேச அழுத் தங்களிலிருந்து இலங்கை விடுபட முடியும்.

குறிப்பாக சகல இன மக்க ளும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அதிகாரப் பகிர்வில் அமைந்த தீர்வுத் திட்டம் ஒன்றுக்கு நாங்கள் செல்ல வேண்டியது அவசியமாகும் தீர்வு விடயத்தில் 13 ஆவது திருத்தத்துக்கு அப்பால் செல்வதா? என்று ஆராய்ந்து கொண்டிருப்பதைவிட பொருத் தமான அரசியல் தீர்வை நோக்கிப் பயணிக்க வேண்டிய்து அவசியமாகும்.

அனைத்து இன மக்களும் ஏற்றுக்கொள்ளக் கூடிய மற்றும் அதிகாரப் பகிர்வில் அமைந்த அரசியல் தீர்வை அடைவதன் மூலம் இந்தியாவின் ஆதரவை நாம் பெற்றுக்கொள்ள முடியும். அதன் போது சர்வதேச அழுத்தங்கள் வந்தால் இந்தியா இலங்கையின் பக்கம் இருக்கும்.எனவே பொருத்தமான அரசியல் தீர்வை நோக்கிப் பயணிப்பதற்கான அடித்தளத்தை நாம் இடவேண்டியது அவசியமாகும். இலங்கை விவகாரம் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபை விசாரணை நடத்தப்படுவதை ஏற்றுக் கொள்ள முடியாது. கொள்கை அடிப்படையில் அதற்கு இடமளிக்கவே முடியாது. இலங்கை மீது குற்றச்சாட்டுக்கள் இருந்தால் அவை குறித்த விப ரங்களை அனுப்பினால் இலங்கை விசாரித்து விட்டு பதில் அனுப்பும். மாறாக இங்கு வந்து விசாரணை செய்ய இடமளிக்க முடியாது என்றார்.

# இலங்கை மீனவர்களை விடுவிக்கும் இந்தியா

## தூதுவர் காரியவசம் நம்பிக்கை

(கொழும்பு)

இலங்கை மீனவர்களை இந்திய அரசாங்கம் விடுதலை செய்யும் என இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் பிரசாத் காரியவசம் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசாங்கம் 78 இந்திய மீனவர்களை விடுதலை செய்துள்ளது. இதே வழியை இந்திய மத்திய அரசாங்கமும் பின்பற்றும் என எதிர்பார்ப்பதாக நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

நல்லெண்ண அடிப்படையில் இந்திய மீனவர்களை இலங்கை அரசாங்கம் தொடர்ச்சியாக விடுதலை செய்து வருவதாகத் தெரிவித்துள்ளார். நல்லெண்ண அடிப்படையில் இலங்கைக் கடற்படையினரால் விடுதலை செய்யப்பட்ட இந்திய மீனவர்களை விடுதலை செய்யுமாறு அண்மையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உத்தரவிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# சிறுவர் உரிமை, மது பாவனை தீங்கு மலையாளபுரத்தில் கருத்துரை



கிளிநொச்சி மாவட்ட கரைச்சி பிரதேச செயலகத்திற்குட்பட்ட மலையாள்புரம் பகுதி மக்களுக்கு சிறுவர் உரிமைகள் மற்றும் மதுபாவனையால் ஏற்படும் விளைவுகள் தொடர்பான கருத்துரை வழங்கும் நிகழ்வு கிராம அலுவலர் பொதுநோக்கு மண்டபத்தில் நேற்றையதினம் நடைபெற்றது.

சமுர்த்தி அதிகார சபை (திவிநெகும) ஏற்பாடு செய்த இந்த கருத்துரை வழங்கும் நிகழ்வில், சிறுவர் பாதுகாப்பு பிரிவின் கிளிநொச்சி மாவட்ட உத்தியோகத்தர் இராஜரட்ணம் செந்தூரன், கிளிநொச்சி வைத்தியசாலை உள, சமூகப்பணியாளர் எஸ்.இராஜேந்திரா ஆகியோர் வளவாளர்களாகக் கலந்துகொண்டு கருத்துரைகளை வழங்கினார்.

குடும்பங்களிலுள்ள உறுப்பினர்களின் மது பாவனையால் குடும்பத்திலுள்ள சிறுவர்கள் பாதிக்கப்பட்டு அவர்களின் எதிர்காலமும் பாதிக்கப்படுவதாக இதன்போது எடுத்துக் கூறப்பட்டது.

அத்துடன், மதுப் பாவனை சிறுவர்களையும் தவறான வழிகளில் இட்டுச் செல்வதனால் குடும்பத்திலுள்ள உறுப்பினர்கள் தங்கள் மதுப்பாவனையைத் தவிர்த்து சிறுவர்களின் நலன்களில் அக்கறை செலுத்தும் படி இதன்போது வலியுறுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் மலையாள்புரம் கிராம அபிவிருத்திச் சங்கம், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் உள்ளிட்டவற்றின் உறுப்பினர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

# குறைந்த வருமான குடும்பங்களுக்கு மலசல கூடத்திற்கு நிதியுதவி

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மீள்குடியேற்றப்பட்ட குடும்பங்களில் குறைந்த வருமானம் பெறும் 2200 குடும்பங்களுக்கு 2200 கழிவறைகள் அமைக்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர் ஜனக சுகதாச தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு குடும்பத்துக்கும் கழிவறை அமைக்க 50 ஆயிரம் ரூபா செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளதால் இத்திட்டத்துக்கென ஆயிரத்து 400 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இத்திட்டத்தின் மூலம் வடக்கில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களையும், கிழக்கில் மட்டக்களப்பு மாவட்டத்திலும் மீள்குடியேறியவர்கள் பெரிதும் நன்மையடைவார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடும் போது குறிப்பிட்ட மாவட்டங்களில் கழிப்பறைகள் மிகக் குறைந்தளவிலேயே காணப்பட்டதால் இம்மாவட்டங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**நிதிமோசடி குற்றச்சாட்டு**

# ஓய்வூதியத்திணைக்கள பெண் கணவருடன் கைது

(கொழும்பு)

ஓய்வூதியத் திணைக்களத்தின் அதிகாரி ஒருவரால் 12 இலட்சத்து 50,000 ரூபா நிதி மோசடி செய்யப்பட்டதாக கூறப்படும் சம்பவம் தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினரால் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஓய்வூதியம் பெறுபவர்கள் இருவர் வழங்கிய முறைப்பாட்டினை அடுத்தே இந்த விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த நிலையில் பிரதான உள்ளக கணக்காய்வு அதிகாரியான குறித்த பெண் உத்தியோகத்தர் மற்றும் அவரது கணவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களை கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# புகைப்பிடித்தலினால் நாளாந்தம் 65 பேர் மரணம்

(கொழும்பு)

நாளொன்றுக்கு இலங்கையில் புகைப்பிடிப்பவர்களின் எண்ணிக்கையில் சுமார் 65 பேர் உயிரிழப்பதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

மேலும் அரசாங்கம் புகைப்பழக்கத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்காக வருடத்துக்கு 450 கோடி ரூபாவை செலவிடவுள்ளதாக சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

இந்தப் புகைப்பழக்கத்தினால் வருடாந்தம் சுமார் 21 ஆயிரம் பேர் இறக்கின்றனர். புற்றுநோயாளர்களில் 60 வீதத்தினருக்கு மேற்பட்டோர் கூடுதலாக புகைப்பிடிப்பவர்கள் எனவும் தெரிவித்தார்

# பேருந்தின் பின் சக்கரங்கள் ஒரேநேரத்தில் கழன்றன

## வவுனியா வந்தவேளை சம்பவம்



வவுனியா நோக்கிப் பயணம் செய்து கொண்டிருந்த அரைச் சொகுசு பஸ்ஸொன்றின் பின் சக்கரங்கள் நான்கும் ஒரே நேரத்தில் கழன்று விழுந்த சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

கொழும்பில் இருந்து வவுனியா நோக்கிப் பயணித்த அரைச சொகுசு பஸ் ஒன்றின் பின்சக்கரங்கள் நான்கும் ஒரே நேரத்தில் கழன்று விழுந்துள்ளன. புத்தளம் - அனுராதபுரம் வீதியின் 20 ஆம் கட்டைப் பகுதியில் நேற்றுக் காலை 9.30 அளவில்இந்த விபத்துச சம்பவம் இடம்பெற்றுள்ளது.

விபத்தின்போது அதிகமான பயணிகள் குறித்த பஸ்ஸில் பயணித்துள்ளனர். இதன்போது, இரு பயணிகள் காயமடைந்ததாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

# வீதி விபத்தில் மூவர் காயம்

(கோப்பாய்)

கோப்பாய் சந்திப்பகுதியில் நேற்றுக்காலை இடம்பெற்ற வீதி விபத்தில் படுகாயமடைந்த மூவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கோப்பாய்ச் சந்தியில் கடைகளுக்கு மிக்சர் போடும் வியாபாரி ஒருவரது மோட்டார் சைக்கிளும், வீதியால் பயணித்த பிறிதொரு மோட்டார் சைக்கிளும் மோதியதினால் இவ்விபத்து ஏற்பட்டுள்ளது.

கைதடியில் அமைந்துள்ள பனை அபிவிருத்திச் சபையின் பணியாளர்களான சின்னச்சாமி பகீரதன் (வயது - 30), கே.ரதீவன் (வயது - 23) மிக்சர் வியாபாரியான வல்லிபுரம் லிங்கேஸ்வரன் (வயது - 52) ஆகியமூவருமே இவ்விபத்தில் படுகாயங்களுக்குள்ளாகிய நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளார். (பா)

**விளம்பரம் சேகரிப்பாளர் தேவை**

விளம்பரம் சேகரிப்பதில் முன் அனுபவமும், துடிப்புடன் பணியாற்றக்கூடிய செயற்திறனும் மிக்க இருபாலரும் இப்பதவிக்கு விண்ணப்பிக்க முடியும்.

அலுவலக நேரத்தில் சுய விபரக் கோவையுடன் சமுகமளிக்கவும்.

**ஆளணி முகாமையாளர்,**
**தினமுரசு,**
**இல. 373,பிரதான வீதி,**
**யாழ்ப்பாணம்.** (இ)

# தீர்வின்றேல் வேலைநிறுத்தம் பேராசிரியர் சங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

பல்கலைக்கழக பேராசிரியர்களின் பிரச்சினைகளை தீர்த்து வைப்பது தொடர்பில் அரசுக்கு ஒருமாத காலமே அவகாசம் வழங்கப்பட்டுள்ளது அவகாசம் மீறப்பட்டால் ஜூலை மாதம் 10 ஆம் திகதி பாரிய வேலை நிறுத்தப்போராட்டத்தை முன்னெடுப்போம் என பல்கலைக்கழக பேராசிரியர் சங்கம் எச்சரித்துள்ளது.

இது தொடர்பாக அச்சங்கத்தின் ஏற்பாட்டாளர் சந்திரகுப்த தெனுவர கருத்து தெரிவிக்கையில்,

பல்கலைக்கழக பேராசிரியர்கள் தமது ஆறு கோரிக்கைகளை அரசு நிறைவேற்றாமையை மையப்படுத்தி கடந்த 3 ஆம் திகதி அடையாள வேலை நிறுத்தப் போராட்டமொன்றை நடத்தியிருந்தனர். இருப்பினும் இது குறித்து அரசாங்கம் எவ்வித நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவில்லை.

இந்நிலையில் பேராசிரியர்கள் அனைவரும் ஒன்றிணைந்து தமது ஆறு கோரிக்கைகள் மற்றும் ஏனைய பிரச்சினைகள் தொடர்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளோம்

இதற்கமைய எமது கோரிக்கைகளை அரசாங்கம் நிறைவேற்றும் என எதிர்பார்க்கிறோம். இருப்பினும் அரசிற்கு ஒரு மாத கால அவகாசம் வழங்குகின்றோம் இந்த அவகாசத்தினை அரசு உரிய முறையில் பிரயோகப்படுத்த வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

# தொழிலாளி காயம்

வேலணை சுருவில் பகுதியில் அம்பிகைநகரில் வீதி திருத்த வேலையில் ஈடுபட்டிருந்த இளைஞர் ஒருவர் கடற்படையினரது உழவு இயந்திரத்தின் முன்சில்லில் கிச்கி படுகாயங்களுக்குள்ளாகியுள்ளார்.

நேற்றுக்காலை 7.30 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் கல்முனையைச் சேர்ந்த ரவிச்சந்திரன் ரவிகீர்த்தனன் (வயது - 18) என்ற இளைஞரே படுகாயங்களுக்குள்ளாகிய நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளார். (பா)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 யூன் 11 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.